# சமுதாயத் தத்துவம்

க. பாஸ்கரன்

எட்டாம் உலகத் தமிழ் மாநாடு
பதிப்புச் சுழல்நிதி வெளியீடு

3912
7A06
ப.ஜ
3912

ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

# சமுதாயத் தத்துவம்

முனைவர் க. பாஸ்கரன்

**தத்துவ மையம்,**
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் 613 005.

ISBN: 81-7090-232-0

# எட்டாம் உலகத் தமிழ் மாநாடு
# பதிப்புச் சுழல் நிதி வெளியீடு

06391
1914

எண் : 87

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 184

திருவள்ளுவராண்டு 2025
கார்த்திகை - டிசம்பர் - 1994

நூல் : சமுதாயத் தத்துவம்

ஆசிரியர் : முனைவர் க.பாஸ்கரன்

பதிப்பு : முதற்பதிப்பு

விலை : முப்பது உருபா

அச்சு : வைகை பிரிண்டர்ஸ் அண்டு பப்ளிஷர்ஸ்,
6/16, பைபாஸ் ரோடு,
மதுரை - 18.

மேல் அட்டை அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம்,
தஞ்சாவூர்.

# பொருளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| I. | முன்னுரை . . . . . . | 1-17 |
| II. | மனித இயல்பு . . . . . . | 18- 25 |
| III. | சமுதாயம் . . . . . . | 26- 37 |
| IV. | தனிமனிதனும் சமுதாயமும் . . . | 38- 47 |
| V. | குடும்பம் . . . . . . | 48-68 |
| VI. | அரசு . . . . . . | 69-80 |
| VIII. | சமுதாயமும் பண்பாடும் . . . | 81-91 |
| VIII. | சமுதாயமும் சமயமும் . . . | 92-99 |
| IX. | முடிவுரை . . . . . . | 99 -100 |

# முகவுரை

'அறிவியலறிஞன் ஆய்ந்து எல்லாவற்றையும் கண்டறிந்து விட்டான்; ஆனால் அவனைத் தவிர' என்று பால் பிரின்டன் கூறியது போலவே இன்றைய சமுதாயச் சீர்கேடுகளுக்கு அடிப்படையான காரணம் மனிதன் அவனை அவனின் உண்மை இயல்பினை அறிந்து கொள்ளாததேயாகும். மனிதன் தன்னை முழுமையாக அறிய, உண்மையை உணர தத்துவ நோக்கு மிகவும் அவசியமாகிறது.

தத்துவம் என்பது உலகியல் பிரச்சனைகளை நுண்ணாய்வு செய்கின்ற, கருத்தியல்பான, புறப்பொருக்குரிய, வளரக்கூடிய அனுபவ முறைக்குட்பட்ட, பகுத்தறிவுடைய வெளிப்பாடாகும். மேலும், மனிதனின் மன மகிழ்விற்கும், இன்ப நிகழ்விற்கும் இணக்கமாக இருக்கும் சமுதாயமே நல்ல சமுதாயம் எனத் தத்துவ இயல் வலியுறுத்தும். நல்ல சமுதாயம் அமைக்கப்பட வேண்டிய அவசியத்தின் அடிப்படையில் அதற்கென வழிமுறைகளைச் சமுதாயம், மனிதன் என்பவனவற்றின் நுட்பமான உட்கூறுகளையெல்லாம் ஆய்ந்து நெறிமுறைகளை அமைத்து மனிதர்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்னும் உயர் நோக்கில் தோன்றியதே சமுதாயத் தத்துவம் என்னும் தனிஇயல். தத்துவ இயலின் ஒரு முக்கியப் பகுதியே சமுதாயத் தத்துவமாகும்.

சமுதாயத்தில் விதிமுறைகள், பழக்க வழக்கங்கள், அமைப்புகள் ஆகியன மனிதனின் சமூக வாழ்விற்குரியவையாக மட்டுமல்லாமல் அவனின் பொதுவான மகிழ்ச்சியான வாழ்விற்காகவும் இருக்க வேண்டும் என்றே சமுதாயத் தத்துவம் கருத்துரைக்கும். எனவேதான், சமுதாயத்தின் உண்மையான அடித்தளங்களைக் கண்டுபிடித்தல் என்பது சமுதாயத் தத்துவத்தின் நோக்கமாக உள்ளது.

தற்போது தத்துவ இயலானது பல தனித்த பிரிவுகளாகப் பிரிந்து, விரிந்து, வளர்ந்து சிறந்து வருகிறது. அரசியல் தத்துவம், அழகியல் தத்துவம், கல்வித் தத்துவம், அறிவியல் தத்துவம் என்பன போன்றே சமுதாயத் தத்துவம் என்பதும் தனித்ததொரு இயலாக வளர்ந்து வருகின்றது. மேலை நாட்டுத் தத்துவங்களில் இப்போக்கு அதிகளவில் காணப்பெறுகின்றது. ஆனால் இந்தியத் தத்துவ முறைமைகளில் இவ்

வியல்கள் அனைத்தும் உள்ளீடுகளாக அமைந்து விளக்கங்களைத் தரு கின்றன. ஏனெனில் இந்தியத் தத்துவம் 'நான்யார்' என்ற வினாவிற்கான விடையினைத் தேடும் அறிவார்மாகத் திகழ்கிறது. ஆனால் மேலைநாட்டுத் தத்துவங்களோ 'நான் எங்கே இருக்கின் றேன்' என்ற வினாவிற்கான விடையினைத் தேடும் முயற்சிகளுக்கே முக்கியத்துவம் தருகின்றவைகளாக உள்ளன. இந்நிலையில்தான் சமுதாயத் தத்துவமும், மேலைநாட்டுத் தத்துவங்களில் சிறப்பிடம் பெற்றதாக அமைந்துள்ளது. எனவேதான் மேலைநாட்டுத் தத்துவங் களில் காணப்பெறும் சமுதாயத் தத்துவக் கூறுகள் இந்நூலில் விளக்கப்பெறுகின்றன.

சமுதாயம் பற்றிய பார்வை தமிழர்களுக்கு மிக நுட்பமாக உண்டு. சங்க இலக்கியங்களிலும் சைவ சமய இலக்கியங்களிலும் இதனை அதிகமாகவே காணலாம். தமிழர்களின் சமுதாயத் தத்துவ முறைமை களையும் கோட்பாடுகளையும் காணவேண்டியதும் மிக அவசியமான தேவையாகும். இவைகளைத் தனித்து விரிவாகக் காணப்பெற வேண்டுமென்பதால்தான் இச்சிறிய நூலில் அவைகள் இடம்பெற வில்லை. 'தமிழரின் சமுதாயத் தத்துவம்' என்னும் தனி நூல் எழுத வேண்டுமென்ற ஆவலை இந்நூல் என்னுள் எழுப்பியுள்ளது.

இறுதியாக, தத்துவம் என்றால் விளங்கிக்கொள்ளுதல் கடினம் என்னும் தவறான எண்ணம் மேலோங்கியுள்ள இந்நாளில் மக்கள் அனைவருக்குமென - அனைவரும் எளிதில் அறிந்துகொள்ளும் வண்ணம் இந்நூல் வெளியிடப்படுகிறது.

இச்சிறியவனை நாளும் ஊக்கப்படுத்தி ஆற்றுப்படுத்தும் மதிப்புயர் துணைவேந்தர் நல்லறிஞர் ஔவை நடராசன் அவர்கள் இந்நூலுக்கு அழகிய அணிந்துரை அளித்துள்ளார்கள். அவர்களுக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்து மகிழ்கிறேன். இந்நூல் வெளிவர அனைத்து நிலைகளிலும் உதவிய அனைவருக்கும் எனது நன்றி. இந்நூலைச் செம்மையாக அச்சிட்டுத் தந்த மதுரை வைகை பிரிண்டர்ஸ் & பப்ளிஷர்ஸ் நிறுவனத்திற்கு நெஞ்சம் நிறைந்த நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**க. பாஸ்கரன்**

முனைவர் ஔவை நடராசன்
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

# அணிந்துரை

சங்கம் என்ற சொல் முன்னாளில் வழக்கில் இல்லை. மன்றம் என்பது அப்பொருளில் வழங்கியது. அகன்ற இலந்தை மரத்தின் நிழலில் – மன்றத்தில் புலவர்களும், பாணர்களும் குழீஇயிருந்து தமிழ் நலம் பேசி உவந்ததைக் கேட்டு மகிழ்ந்து சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் பாணர்க்கும், புலவர்க்கும் அழியாப் பெருஞ் செல்வம் வழங்கினான் என்பர். 'இரத்திநீடிய அகன்றவை மன்றத்துக் கரப்பில் உள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி அமில கொழுஞ்சோறு ஆர்ந்த பாணர்க்கு அகால செல்வம் முழுவதும் செய்தோன். எங்கோன் வளவன் வாழ்க! நின்பீடு கெழு நோன்றாள் பாடேனாயின் பல்கதிர்ச் செல்வன் படுவது அறிவேன்' என ஆலத்தூர் கிழார் பாடும் பாடற் பொருளில் சோழர் பேரூரில் புலவர் கூடல் மிளிர்ந்தென அறிஞர் கருதுவர். அம் மரவை ஒட்டியே பல்லாண்டுகள் கழிந்து, தண்ணார் தமிழ் வளர்க்கும் தஞ்சை மாநகரில் அருட்டுறைக் குப் பெரிய கோயிற் போலவே தமிழ் நலம்பேணும் அரிய கலைக்கோயிலாகத் தமிழ்ப் பல்கலைக்கழகம் திகழ்கிறது.

1981ம் ஆண்டு மாமதுரையில் நிகழ்ந்த ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின் அறிவுப் பயனாகத் தமிழ் பல்கலைக்கழகம் தஞ்சையில் தோற்றம் பெற்றது. கடந்த பதின்மூன்று ஆண்டு களில் இப்பல்கலைக்கழகம் உயராய்வு நிறுவனமாக ஓங்கி

வளர்ந்துள்ளது. உலகிலுள்ள எழுபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் தமிழ் பேசும் மக்கள் பரவியுள்ளனர். உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் கனவுகளை நனவாக்கும் முயற்சியில் இப்பல்கலைக்கழகம் தமிழ்ப் பண்பாட்டுக் கலையரங்கமாக மிளிர வேண்டுமென்பது நமது நோக்கமாகும். எட்டாம் உலகத் தமிழ் மாநாடு தஞ்சையின் வாகையூரில் அமைந்திருக்கும் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகத்தில் 1995 ஜனவரி 1 முதல் 5ம் நாள் வரை நடைபெறுகிறது. இவ்வரிய நிகழ்ச்சியை நினைவுகூரும் வகையில் தமிழக அரசு இப்பல்கலைக் கழகத்திற்குப் பத்து இலட்சம் நிதி வழங்கி பதிப்புச் சுழல் நிதியை அமைத்தது. சுழல் நிதியின் பதிப்பாக இந்நூல் இன்று தொடங்கும் உலகத் தமிழ் மாநாட்டின் போது வெளியிடப்பெறுகிறது. பல்லாண்டுகளாக அச்சேறாமல் இருந்த இந்நூல் தமிழுலகின் கையில் இப்போது கிடைப்பதுநமது பேறாகும்.

தத்துவம் என்பது பொதுவாகக் கோட்பாடு என்பதைக் குறிக்கும் சொல்லாகும். வாழ்வின் கூறுகளை ஆராய்ந்து தனிப்பட அமையும் கோட்பாடுகளை வகுப்பது இன்றைய மெய்யியலின் பொருண்மையாகிறது. இந்நிலையில் சமுதாயத் தத்துவம் என்ற பெயரில் மன்னாயக் கோட்பாடுகளை மேலைநாட்டு அறிஞர்கள் விளக்கியதற்கிணங்க இந்நூற்படைப்பு அமைகிறது. தமிழ்ப் பல்கலைக்கழக மெய்யியல் துறையின் தலைவர் மற்றும் இணைப்பேராசிரியர் முனைவர் க.பாசுகரன் இளமையும், புலமையும், தலைமையும் ஒருசேரப் பெற்ற தகுதியுடையவராக விளங்குகிறார். ஆற்றலும், ஆர்வமும் பூண்ட நண்பர் க. பாஸ்கரன் படைக்கும் இப்பயனுடைய நூல் நம் பாராட்டுக்குரியது.

*ஔவை நடராஜன்*

# 1. முன்னுரை

சமுதாயத் தத்துவம் என்பது ஒரு தனி இயலாக ஏற்றுக் கொள்ளப்படுவதாகும். தத்துவப் பிரிவான இது சமூகவியலுடன் வேறுபட்டு நிற்கும் தனி இயல் ஆகும். இதையும் சமூகவியலையும் ஒன்றாக வைத்தும் அல்லது சமூகவியலின் ஒரு பகுதியாக வைத்தும் எண்ணப்பட்ட காலம் உண்டு. ஆனால் சமுதாயத் தத்துவம் தற்போது முக்கியத்துவம் பெற்ற தனித்துறையாக மிளிர்ந்து வருகின்றது.

சமுதாயத் தத்துவம் என்பது சமுதாயத்தைப் பற்றியதாகும். சமுதாயத்தைப் பற்றி - சிறப்பாக மனிதர்களைப் பற்றிய ஆய்வைத் தத்துவ நோக்குடன் மேற்கொள்வதே சமுதாயத் தத்துவம். இது மனிதர்களை விடுத்து வேறு எந்த உயிரினங்களைப் பற்றியும் இயற்கையைப் பற்றியும் விவாதிப்பதில்லை. மனிதர்களின் சமூக உறவுகளை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தைப் பற்றியே இதன் கோட்பாடுகள் அமைந்துள்ளன.

இந்தச் சமுதாயத்தில் நாம் பார்க்கின்ற சமூக உறவுகள் பலவகைப்பட்டவையாக அமைந்திருக்கின்றன. ஏனெனில் மனிதர்களும் அவர்களின் மனநிலைகளும் பலவிதம்; அவர்கள் தங்களுக்குள் கொண்டிருக்கும் உறவுகளும் பலவகைப்பட்டவை. ஆனால் அவர்கள் எல்லோரும் ஒரு சமுதாயத்தில் சமூக உறவு கொண்டு ஒன்றாக வாழ்ந்து வருகின்றார்கள். சமூக உறவுதான் சமுதாயத்தின் அடிப்படை. சேர்ந்து வாழ்வது மட்டும் சமூக உறவாகி விடுவதில்லை. பல வேற்றுமைகள் இருந்தும்

மனிதர்களை ஒன்றாக வாழச் செய்வதுதான் சமூக உறவின் நோக்கமாகும். சமுதாயம் என்பது மனிதர்களால் அளக்கப்படுவ தில்லை. ஆனால் அவர்கள் தங்களுக்குள் கொண்டிருக்கும் உறவு மற்றும் செயல் ஆகியவற்றின் மூலமே ஒரு சமுதாயம் கணிக்கப் படும். எனவே இந்தச் சமூக உறவு, மக்களிடையே காணப்படும் பின்னிய உறவு மற்றும் ஒன்றையொன்று சார்ந்த வண்ணம் அமைந்திருக்கின்ற செயல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட மனித சமுதாயத்தைத் தத்துவ நோக்கில் ஆய்வதே சமு தாயத் தத்துவமாகும். சமூக உறவு பற்றிய உண்மைகளையும் அதன் மதிப்பியல்களையும் தீர்மானித்து வரையறை செய்வது சமுதாயத் தத்துவத்தின் நோக்கமாகும். அது சமுதாயத்தை முழுமையாக நோக்குகிறது; சமுதாயத்தில் இறந்த கால, நிகழ்கால மற்றும் எதிர் காலங்களைப் பற்றிச் சிந்தித்து, அனைத்தையும் உள்ளடக்கிய ஆய்வையே சமுதாயத் தத்துவம் மேற்கொள்கிறது. மனிதனின் சாதனைகளையும் அது மதிப்பீடு செய்கின்றது. அத்துடன் மனிதர் களில் குழுக்கள், கூட்டங்கள், கூட்டுறவுகள், நிலையங்கள் இவற் றிற்கு இடையிலான உறவுகள் ஆகியவை பற்றியும் தத்துவரீதியில் விளக்க முற்படுகிறது சமுதாயத் தத்துவம்.

சமுதாயத் தத்துவம் என்பது சமுதாயத்தைப் பற்றிய தத்துவம் என்றோம். தத்துவம் என்றால் என்ன? என்பதையும் நாம் காண வேண்டும். இப்பிரபஞ்சத்தில் தீர்வு காணமுடியாத - விளக்கம் கூற முடியாத பிரச்சனைகள் பல இருக்கின்றன. அவற்றிற்குத் தீர்வு காணப் பல அறிவுத் துறைகளும் முயலுகின்றன. இம்முயற்சி களின் விளைவாகவே ஒவ்வொன்றும் தனித்தனி துறையாக அமையும். எந்த ஒன்றையும் எப்படி என்ற வினாவின் மூலம் ஆய்வதே அறிவியலின் நோக்கம். அறிவியல் இவ்வாறுதான் வளர்ந்தது. மானிட இயலின் பல பிரிவுகள் இம்முறையிலேயே தோன்றின. ஆனால் அவைகளையே ஏன் என்ற வினாவின் மூலம் ஆய்வதுதான் தத்துவம். தத்துவம் என்பது இறைவன், மனிதன், உலகம் இவற்றின் அடிப்படைப் பிரச்சனைகளை ஆராயும் ஒன்றாகவும் எல்லாத் துறைகளுக்கு மூலமாகவும் அமைந் துள்ளது. உலகியல் பிரச்சனைகளை நுண்ணாய்வு செய்கின்ற, கருத்தியல் பான, புறப்பொருளுக்குரிய, வளரக்கூடிய, அனுபவ

முறைக்கு உட்பட்ட பகுத்தறிவுடைய ஒன்றாகத் தத்துவ இயல் அமைந்துள்ளது.

தத்துவம் என்ற சொல்லுக்கு உண்மையின் தன்மை என்பது பொருள். எனவே, தத்துவ ஞானம் என்பது உண்மையின் தன்மையை அறிவது எனப் பொருள்படும். உண்மை என்பதற்கு, உள்ளது - அதாவது - என்றும் உள்ளது என்பதே கருத்து. நம் உடல் உட்பட நாம் காணும் பொருள்கள் யாவும் என்றும் உள்ளவை அல்ல. மாற்றும் உறுவனவே. என்றுமே உள்ள பொருள் ஏதாவது உண்டா? உண்டாயின் அது எது? அதன் இயல்புகள் என்ன? என்பன போன்றவற்றை ஆராய்வதே தத்துவ ஞானம் எனக் கூறலாம்.

தத்துவம் தன்னுடைய ஆய்விற்குப் பல்வேறு முறைகளைப் பயன்படுத்துகிறது. பகுப்பாய்வு முறை, கூட்டிணைப்பு முறை, பகுப்பு வழி அளவை முறை, தொகுப்பு வழி அளவை முறை, வாத அல்லது தருக்க முறை ஆகிய பல ஆய்வுமுறைகள் தத்துவ இயல் ஆராய்ச்சியில் காணப்படுகின்றன.

தத்துவ இயலில் ஒரு முக்கிய பகுதியே சமுதாயத் தத்துவம். இது சமூக மதிப்புகளைப் பற்றிய தத்துவ ஆராய்ச்சியே ஆகும். மகிழ்ச்சி யுடன் இருக்கும் மனிதனின் இணக்கமான சமுதாயமே ஒரு நல்ல சமுதாயம் என்று இந்தத் தத்துவம் வலியுறுத்தும். சட்டங்கள், பழக்க வழக்கங்கள், அமைப்புகள் ஆகியவை சமூக வாழ்விற்குரியனவாக மட்டுமல்லாமல் மகிழ்வான வாழ்விற்காகவும் இருக்க வேண்டும். இந்த உயரிய குறிக்கோளுடனேயே சமுதாயத் தத்துவம் சமூக உறவுகளை ஆராய்கிறது. மேலும் அவற்றையெல்லாம் முழுமை யான ஒரு சமூகத்தின் தத்துவமாகவே கொண்டுள்ளது.

சமுதாயத் தத்துவத்தின் முக்கிய பணி, சமூக உண்மைகளின் பின்னணியில் சமூக மதிப்புகளைத் தேர்வு செய்வதேயாகும். இத் தேர்வின் மூலம் இணக்கமான சமூக நன்மையை அடையலாம் என்றும் சமுதாயத் தத்துவம் கூறும். இப்போக்கின் மூலம் பிற சமூக அறிவியல் தருகின்ற பல முக்கிய முடிவுகளின் மீதே சமுதாயத் தத்துவம் தன் கவனத்தைச் செலுத்துகிறது. இதன் ஆய்வெல்லாம்

சமூக உறவுகளின் எல்லைக்குள்ளேயே அமைந்துள்ளது என்றும் கூறலாம். மனித இனத்தின் சமூக ஒற்றுமை பற்றியே இது கவனம் செலுத்துகிறது; மேலும், மனித வாழ்வின் சமூக இயல்புகளை, சமூக ஒற்றுமை என்னும் நோக்கிலேயே விளக்க முற்படுகிறது என்று பேராசிரியர் மெக்கென்சி அவர்கள் குறிப்பிடுகின்றார். எனவே மனித வாழ்வின் எல்லா அம்சங்களும் சமுதாயத் தத்துவத்தில் குறியிலக்கமாக அமைந்துள்ளன.

சமுதாயத்தின் தத்துவரீதியான அடித்தளங்களைக் கண்டு பிடித்தலே சமுதாயத் தத்துவத்தின் நோக்கமாக உள்ளது எனலாம். மனித சமுதாயத்தில் பல்வேறு இயல்புகளைப் பற்றித் தத்துவ ஞானிகள் பலர் சிந்திக்கின்றனர். அறிஞர் சிலர் சமுதாயத்தின் தன்மைகளைப் பற்றியும் கூறியுள்ளனர். இது நிலையானது என்றும், நிலையற்றது என்றும், இயற்கை என்றும், அப்படி இல்லாமல் செயற்கை என்றும் எழுத்துரை வழங்கியுள்ளனர். இவ்வாறே மனிதன், சமுதாயத்தை விடுத்த தனிச் சுதந்திரம் உடையவன் என்று சிலர் கூற, அதேசமயத்தில் வேறு சிலர் தனி மனிதனின் சமூகக் குணநலன்களையும் வலியுறுத்திக் கூறுவர். கிரேக்க நாட்டுத் தத்துவ ஞானி அரிஸ்டாடில் மனிதன் பிறப்பி லேயே ஒரு சமூகப் பிராணி என்கிறார். ஆனால் ரூஸோ, மனிதனின் சமூகத் தன்மை என்பது சமுதாயத்தின் சமூக ஒப்பந்தத் தின் விளைவுதான் என்கிறார். இந்தியத் தத்துவ ஞானிகளும் மனிதனின் சமூக இயல்புகளைப் பற்றிக் கூறியுள்ளனர். அவர் களில் பலர் மனிதனின் இச்சமூக இயல்பு என்பது இயற்கையானது என்பர்.

மனித சமுதாயம் இயற்கையானது தானா? அவ்வாறெனில் அது எந்த முறையில்? எந்த அளவிற்கு அது இயற்கையாயிற்று? என்பவை சமுதாயத் தத்துவம் விவாதிக்கும் முக்கிய பிரச்சனைகள் ஆகும். இங்கு சமுதாயம் என்பது சமூக உறவுகளைக் குறிப்பதாகும். இச்சமூகஉறவுகளின் இயற்கைத் தன்மைகளைப் பற்றியும் அவற்றின் வகைகளைப் பற்றியும் சமுதாய முன்னேற்றத் திற்கு அவை எங்ஙனம் உதவுகின்றன என்பன பற்றியும் சமுதாயத் தத்துவம் ஆராய்கின்றது.

சமுதாயத் தத்துவம் மதிப்பீடுகளைப் பற்றியும், குறிக்கோள் களைப் பற்றியும் அவற்றை அடைய வேண்டிய வழிகளைப் பற்றியும் அறுதியிட உதவுகிறது. சமூக அறிவியலிலிருந்து உண்மைகளை எடுத்துக்கொண்டு பின்னர் முடிவுகளையும், வழி களையும் தானே கண்டுபிடிக்க இது முயல்கிறது. மேலும் இது சமூக இணக்க உறவிற்கும் ஒன்றையொன்று சார்ந்த செயல்களுக்குமான திட்டங்களையும் வகுக்கின்றது. சமூக அமைப்பில் காணப்படுகின்ற உயரிய இலட்சியம் மற்றும் உயரிய நன்மை ஆகியவற்றை அடைய வேண்டிய வழிமுறைகளைப் பற்றியும் சமுதாயத் தத்துவவாதிகள் கருத்துரைக்கின்றனர்.

இனி, சமுதாயத் தத்துவம் மேற்கொள்ளும் முறைமை பற்றிக் காணலாம். முன்னர்க் கூறியவாறு சமுதாயத் தத்துவத்தின் முறைமை, தத்துவ நோக்கை உட்கொண்டதாகும். ஒவ்வொரு அறிவுத் துறைகளுக்கும் தனித்தனி முறைமைகள் உண்டு. இந் நிலையில்தான் தத்துவமும் அறிவியலும் வேறுபடுகின்றன. முடிவு பற்றியும், வழிமுறைகள் பற்றியும் ஒவ்வொன்றும் வெவ்வேறான கருத்துக்கள் கொண்டிருக்கும். சமுதாயத் தத்துவம் இரண்டு முறைமைகளை மேற்கொண்டுள்ளது. ஒருபுறம் சமூகவியல், வரலாற்று இயல் இவை தருகின்ற உண்மைச் செய்திகளையும், அற இயல், புலன் கடந்த பொருளியல், சமயம் ஆகியனதருகின்ற மதிப் பீடுகளையும் உள்ளடக்கிய முறைமையைக் கொண்டிருக்கின்றது. மறுபுறம் சமூக உண்மை, சமூக மதிப்பு ஆகியன குறித்து உள்ளார்ந்த பொருள் விளக்கம் அறிந்த முறைமையைக் கொண்டிருக்கின்றது. ஆதலின், சமுதாயத் தத்துவ இயல் என்பது புலன் கடந்த பொருளியல், உள்ளுணர்வு, இயற்கை ஆகிய முறைமைகளைத் தன்னகத்தே கொண்டிருப்பதாகக் கொள்ளலாம். இம்முறைமைகளுக்குப் பகுத்தறிவாற்றல், உள்ளுணர்வு, உற்று நோக்கல் ஆகிய கருவிகள் துணைப்புரிகின்றன.

சமுதாயத் தத்துவத்தின் இயல்பு, அதனுடைய மதிப்பை நன்கு புலப்படுத்துகின்றது. மனிதர்களின் நடத்தை, மனித வாழ்வின் உயரிய மதிப்பு ஆகியவற்றின் அடிப்படைகளை ஆராய்ந்து சமூக அறிவியலுக்கு ஓர் உறுதியான அடித்தளத்தைச் சமுதாயத்

தத்துவம் அமைத்துக் கொடுக்கிறது. சமுதாயத் தத்துவத்தின் பலன்களையும் மதிப்புகளையும் பின்வருமாறு காணலாம்:

1) மனித வாழ்வின் முன்னேற்றத்திற்குச் சமுதாயத் தத்துவம் மிகவும் பயன்படுகிறது. மனிதனை ஒரு சமூக விலங்கு என்பர். இச் சமுதாயத்தில் எந்தத் தனி மனிதனும் தன்னிச்சையாகச் செயல்பட முடியாது. சமுதாயப் பிரச்சனைகளையும் சமூக உறவுகளையும் விடுத்து மனிதன் சமூக மதிப்புகளை எண்ணிப் பார்க்க முடியாது. இச்சமுதாயத் தகவுகளை சமுதாயத் தத்துவமே ஆராய்ந்து அளிக்கின்றது. எனவே, இது மனித வாழ்வின் முன்னேற்றத்திற்கு உறு துணையாக உள்ளது எனலாம்.

2) பிறரை அறிய உதவுவது சமுதாயத் தத்துவமே. சமுதாயத் தகவுகளை விடுத்து எந்தத் தனிமனிதனும் தன் வாழ்வின் தகவுகளை அடைய முடியாது. நாம் பிறரிடமும், அடுத்தவரிடமும் காட்டும் நடத்தைகளை நெறிப்படுத்த உதவுவது சமுதாயத் தத்துவ இயலாகும். இது இருவர்கிடையேயான உறவுகளை விளக்கும். மேலும் இவ்வியல், உயர்ந்த இலட்சிய சமுதாயத்தை இனம்காட்டி அதன் மூலம் சமூக நடத்தைகளைச் சீர்செய்யும்.

3) இது ஒரு நாட்டின் பண்பாட்டு வளர்ச்சிக்கு உதவுகிறது. பண்பாட்டு முன்னேற்றத்தின் ஒவ்வோர் அங்கத்திலும் சமுதாயத் தத்துவத்தின் பிரதிபலிப்பைக் காணலாம்.

4) சமூக வாழ்வின் மீது தன்னுடைய தாக்கத்தை எளிதில் சமுதாயத் தத்துவம் காட்டுகிறது. சமுதாயத்தில் காணப்படும் குடும்பம், திருமணம், தொழில் மற்றும் அமைப்பு ஆகியவற்றில் சமூக உறவு வெளிப்படுகிறது.

மேலும் இது பொருளாதார வாழ்விலும், அரசியல் வாழ்விலும் தன்னுடைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. சமுதாயத் தத்துவ இயல், அறிவின் வளர்ச்சிக்கும் அறிவு பரவுதலுக்கும் காரணமாக அமைந்துள்ளது. கல்விக்கும் தன் கொடையை இது அளித்துள்ளது.

எனவே, சமுதாயத் தத்துவத்தின் மதிப்பியல்பு என்பது ஒரு முழுமையான சமூக உருவாக்கத்திற்கான நடைமுறை இலக்கினை

விளக்குவதில் அமைந்துள்ளது. சமூக உருவாக்கத்தில் தனி மனிதனும் சமுதாயமும் முக்கிய இரண்டு கூறுகளாகும். இவ்விரண்டினைப் பற்றித் தான் சமுதாயத் தத்துவம் ஆர்வம் காட்டுகிறது; ஆய்வு செய்கிறது. சமுதாயத் தத்துவம் வெறும் கொள்கையளவினதாக மட்டுமில்லாமல் செயல்முறைக்குரிய தாகவும் உள்ளது.

வாழ்க்கையில் உண்மையான உறுதிப்பொருள்களை உள்ள வாறே பிரதிபலிக்கும் ஒரு துறையாக சமுதாயத் தத்துவம் விளங்கு கிறது. மனிதன் 'இருக்கின்றான்' என்பதைப் பற்றிக் கூறாமல் அவன் 'எப்படி' இருக்க வேண்டும் என்று வலியுறுத்துவதே சமுதாயத் தத்துவத்தின் பணியாகும்.

சமுதாயத் தத்துவ இயலைப் பலவழிகளில் அணுகமுடியும். இருப்பினும், அவற்றில் முக்கியமான சில நிலைகளை நாம் இப்போது காணலாம். முதன்மையான அவசியமான அணுகு முறை, தகவுகள் அல்லது மதிப்புகளை நோக்கியது. தன்னுடைய மதிப்பை நோக்கிச் செல்லும் இயற்கைப் பண்புதான் மனிதனின் இணையற்ற தன்மையாகும். ஆதலின் இம்மதிப்பியல்புகளை அணுகி ஆராய்வதே சமுதாயத் தத்துவத்தின் முக்கிய குறிக் கோளாகும். இனி இந்த நிலையில் அமைப்புகள் அல்லது நிலையங்கள் என்ற கோணத்தில் சமுதாயத் தத்துவத்தை அணுக லாம். உயர் தகவுகளை அடைய செய்யப்படும் முயற்சியாக இருந் தாலும், சமூக ஆன்மா என்பதை உணர்ந்தறியாததாக இருந்தாலும், அம்முயற்சிகளுக்கு மனித வாழ்வை ஆட்படுத்தும் நிலையங்கள் ஆகிய சமுதாய அங்கங்களே வாயில்களாக அமைந்துள்ளன.

மூன்றாம் அணுகுமுறை, சமூக அறிவியல் என்பது. சமூக அறிவியல் என்னும் அறிவுத்துறை அளிக்கும் உண்மைச் செய்தி களைக் கொண்டுதான் சமுதாயத் தத்துவம் மனிதனுக்கான சட்ட திட்டங்களை வகுக்கிறது.

**சமுதாயத் தத்துவமும் சமூகவியலும்**

சமுதாயத் தத்துவத்தையும், சமூகவியலையும் ஒன்றாக வைத்து அல்லது சமூகவியலின் ஒரு குறிப்பிட்ட பகுதியாக வைத்துச்

சமுதாயத் தத்துவத்தைப் பற்றிக் கூறுவர். ஆனால் வெவ்வேறு துறைகளாக இருப்பினும் இரண்டிற்கும் இடையே உறவும் உள்ளது. சமூகவியல் என்பது மனித இனத்தின் தொடக்கம் பற்றியும், மனித இனத்தில் பல்வேறு வகை பற்றியும், சட்டம், பழக்க வழக்கம், மொழி, நம்பிக்கை, சிந்தனை, உணர்தல், செயலாற்றல் ஆகியன குறித்த அனைத்தறிவு பற்றியும் ஆய்கிறது எனலாம். ஆதலில் அது பொருளாதாரம், அரசியல், சமயம், அறிவியல் ஆகியன குறித்தும் பேசுகிறது.

ஆனால், சமுதாயத் தத்துவம், சமூகவியலிலிருந்து வேறுபடுகிறது. பொதுவான தத்துவ இயல் என்பது குறிப்பிட்ட அறிவியல் என்பதிலிருந்து எவ்வாறு வேறுபட்டு நிற்கிறதோ அதே போன்று சமூகவியல் என்பது சமுதாயத் தத்துவத்திலிருந்து வேறுபடுகிறது.

சமுதாயத் தத்துவம் என்பது மனித இனத்தின் சமூக ஒற்றுமை மீதே தன் கவனத்தைச் செலுத்துகிறது. அதன் பின்னணியில் மனித இனத்தின் பல்வேறு இயல்புகளை ஆராய்கிறது. ஆதலின் இவ்வியலின் முயற்சிகள் யாவும் மதிப்பு, முடிவு, குறியிலக்கு ஆகியவற்றை அடைவது பற்றியே அமைந்துள்ளன. சமுதாயம் இருக்கிறது என்பதை விட அது 'எப்படி' இருக்க வேண்டும் என்பதிலேயே தன் ஆய்வுகளைச் செலுத்துகிறது. சமுதாயத் தத்துவவியலின் பணி மெய்ந்நிகழ்வுகளைக் கண்டுபிடிப்பதன்று. மாறாக, அறிவியல் தருகின்ற மெய்ந்நிகழ்வுச் செய்திகளைச் சமுதாயம், மனித இனம் ஆகியவற்றின் பின்னணியில் விளக்கிக் கூறுவதேயாகும்.

அண்மைக் காலத்தில் தோன்றிய அறிவுத்துறையே சமூகவியல். இவ்வியலை வரையறை செய்வதிலும் அறிஞர்களிடம் வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஜின்ஸ்பர்க், லார்ட், ஓடம், கிட்டிங்ஸ் ஆகியோர் சமூகவியல் என்பது சமுதாயத்தைப் பற்றிய அறிவியல் என்பர். மால்வர், பேஃசு, மாக்ஸ்வெப்பர் ஆகியோர் இது சமூக உறவு பற்றிய ஆய்வு என்பர். எங்க், பென்னட், டுமின், சோராகின், க்ரீன் ஆகியோர் இவ்வியல் சமூக வாழ்வு, இயல் நிகழ்ச்சி இவற்றைக் குறித்த கல்வியறிவே என்பர். பார்க், பர்ஜசஸ், ஸ்டாம்மலர், காண்ட், ஜார்ஜ் சிம்மல் ஆகியோர் சமூக

இயல் நிகழ்ச்சி, உறவு, கடமை ஆகியவை பற்றி ஆராயாமல் அவற்றின் வடிவங்களைப் பற்றியும் வகைகளைப் பற்றியும் ஆராய் வதே சமூகவியல் என்பர். சிம்மல் அவர்கள் சமூகவியல் என்பது மனித இன இடையுறவின் வடிவம் பற்றிய அறிவியல் என்பார். மேற்குறித்த விளக்கங்களிலிருந்து சமூகவியல் என்பது சமூகம், சமுதாயம் ஆகியன குறித்த அனைத்துப் பொருள்களைப் பற்றியும் விவாதிக்கும் இயல் என்பது தெளிவாகும். இது சமூக மரபு, செயற் பாங்கு, நடத்தை ஆகியவை பற்றியும், சமூக நிகழ்வுகளின் வடிவங்கள், இடையுறவு, சமூக உறவின் மீது சமூக ஆற்றலின் தாக்கம் முதலியன பற்றியும் ஆராய்கிறது. சமுதாயத் தத்துவமும் சமூகவியலும் சமுதாயம் பற்றிச் சிந்தித்தாலும் அவை வெவ் வேறான கோணங்களில் வெவ்வேறான முறைகளில் தம் ஆய்வுகளை நிகழ்த்துகின்றன. சமுதாயத் தத்துவம் ஓர் உயர்நிலைச் சட்ட அறிவியலாக உள்ளது. ஆனால் சமூகவியலோ விதிமுறைக் கட்டுப்பாட்டிற்குரியதாக உள்ளது. மானிட வாழ்வு, சமூக அறிவியல் சமுதாயத் தத்துவம் இவற்றை ஒருங்கிணைப்பதாக அமைந்துள்ளது. மேலும் இது, காலம், இடம் ஆகியவற்றின் எல்லை களுக்குட்பட்டே மனிதனைப் பற்றி ஆய்கிறது. ஆனால் சமுதாயத் தத்துவமோ இந்தப் பெரிய பிரபஞ்சத்தின் ஒரு பகுதியாக மனித சமுதாயத்தை நோக்குகிறது.

மதிப்புகள் இல்லாத உண்மை நிகழ்வுகள் வெறும் குறிக்கோளா கவும், உண்மை நிகழ்வுகள் இல்லாத மதிப்புகள் பொருளற்றன வாகவும் அமைந்துவிடும். எனவே, சமூகவியலும் சமுதாயத் தத்துவமும் ஒன்றையொன்று சார்ந்தே உள்ளன.

இருப்பினும் இவ்விரண்டிற்குமிடையே பல அடிப்படை வேறுபாடுகள் உள. இரண்டின் ஆய்வுக்குரிய பொருள்களும் வேறானவை. சமுதாயத் தத்துவம் மனித இனத்தின் மதிப்புகளை ஆயும் வேளையில் சமூகவியல், சமூக உறவு அதன் வழிமுறை, நிகழ்வு ஆகியன குறித்தும் சிந்திக்கின்றது.

சமூகவியலின் அணுகுமுறையும் சமுதாயத் தத்துவ இயலின் அணுகுமுறையும் வேறுவேறாகும். முன்னையது உண்மை நிகழ்ச்சி

களோடு தொடர்பு கொண்டது. ஏனையது முடிவான மெய்ம் மதிப்பீட்டை ஆராய்கிறது.

மேலும், சமூகவியலின் முறைமையும் சமுதாயத் தத்துவத்தின் முறைமையும் வேறுபட்டவை. சமூகவியலின் முறைமை அறிவிய லானது; சமுதாயத் தத்துவத்தின் முறைமையோ தத்துவரீதியானது. சமுதாயத் தத்துவம் எல்லா நிகழ்ச்சிகளையும் முழுமையின் ஒரு பகுதியாகவே நோக்குகிறது. எல்லாவற்றையும் நேரான காட்சி, உள்ளுணர்வு, அறிவு அளவையியல் மூலமாகக் காண்கிறது. ஆதலினால், இது வெறும் விவரிக்கும் முறையாக இல்லாமல் திறனாய்வு செய்யும் முறையாக உள்ளது.

மேலும், சமூகவியலும் சமுதாயத் தத்துவமும் வெவ்வேறான பொருள்களை வலியுறுத்துகின்றன. சமூகவியல், சமூக நிகழ்வு களின் தோற்றுவிக்கும் திறனையும் ஆக்கபூர்வமான கூறுகளையும் வலியுறுத்தும். ஆனால், சமுதாயத் தத்துவமோ சமூக செயற்பாடு களின் பொருள் விளக்கம், செயல் நோக்கம் ஆகியவற்றைக் கண்டறிவதில் ஆர்வம் காட்டும். சமூகப் பிரச்சனைகளைச் சமூக வியல் விவாதிக்கும். ஆனால், சமுதாயத் தத்துவமோ இவ்வுலகில் மனித சமுதாயம் வகிக்கும் இடம் பற்றி ஆராயும். மேலும் சமூகவியல், நிகழ்ச்சி, செய்தி மற்றும் அவற்றின் முறைமைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும். ஆனால், சமுதாயத் தத்துவமோ உயர் தகவுகள் அவற்றின் முறைமைகள் பற்றித் தனது கவனத்தைச் செலுத்தும்.

இவ்வாறான வேறுபாடுகள் இருப்பினும் இரண்டுமே ஒன்றை யொன்று சார்ந்து இணைந்து முழுமையாக்க வல்லனாகவும் உள்ளன. சமுதாயத் தத்துவத்திற்கும் உயிரியல், உளவியல், அறிவியல், கல்வியியல், அரசியல், சட்டம், பொருளாதாரம், வரலாறு, சமயத் தத்துவம் ஆகிய இயல்களுக்கும் இடையிலான தொடர்புகளைச் சுருக்கமாகக் காணலாம்.

**உயிரியல்**

மனித இன வாழ்க்கையைச் சித்தரிக்கும்போது வாழ்வின் தன்மைகளைப் பற்றியும் அதன் மூலமான உயிரியல்

கோட்பாட்டையும் கருத வேண்டும். மனித வாழ்க்கையை விளக்குவதற்கு இக்கோட்பாட்டை அவசியம் பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியவர் ஹெர்பட் ஸ்பென்சர் அவர்களேயாவார். அரிஸ்டாட்டில், மனிதனின் தனித்த வாழ்வும் சமூக வாழ்வும் உயிரியல் கூறுகளால் தீர்மானிக்கப்படுகின்றன என்றார். ஆதலின் உயிரியல், , சமுதாயத் தத்துவத்தின் மீது தன் தாக்கத்தைக் காட்டுகிறது. எந்த ஒரு சமுதாயத் தத்துவக் கோட்பாடும் மனிதனின் உயிரியல் தேவைகளைப் புறக்கணித்துத் தன் கொள்கைகளை நிலைநாட்ட முடியாது.

**உளவியல்**

மனித வாழ்வின் முக்கிய சிறப்பியல்பு அவனுடைய மனத்தில் அல்லது உள்ளத்தில் உள்ளது எனலாம். இயல்பான தேவைகளைத் தீர்த்துக்கொள்ளும் ஆவல், இயல்புணர்ச்சி, உணர்ச்சிவேகம் இவற்றைப் புறக்கணித்துவிட்டு மனித சமுதாயத்தின் வளர்ச்சி மற்றும் செயற்பாடுகளைச் சிந்திக்கவே முடியாது. மேற்குறித்த உள்ளம் தொடர்பானவற்றை உளவியல் அறிஞர்கள் ஆராய்ந் தாலும், அவையெல்லாம் தனி மனிதனைப் பற்றியனவாகவே இருக்கும். ஆனால், மக்கள் குழுமம் முழுமைக்குமாகக் கூறுவது சமூக உளவியலேயாகும்.

உளவியல் தனி மனிதனின் நடத்தையை அவனுடைய சூழலின் பின்னணியில் ஆராய்கிறது. தனி மனிதனைப் பற்றியே அது சிந்திக்கிறது. இருப்பினும், சமுதாயத் தத்துவம் பல்வேறு சமுதாயச் சிக்கல்களைத் தீர்க்க முயலும்போது உளவியலும் உதவி புரிகிறது. குறிப்பாக குடும்பம், திருமணம் இவற்றின் முக்கியத்துவம், சர்வ தேச உறவு பற்றிய பிரச்சனை, உலக அமைதி ஏற்பட வழிமுறை, ஜனநாயகமும் சமூக இலட்சியங்களும் வெற்றிபெறுவதற்கான முன்முயற்சிகள், பண்பாடு அதன் கொடை ஆகியவற்றின் முக்கியத்துவம், தண்டனைக் கோட்பாடுகள், தொழிற்பிரிவுகள், கூட்டுறவு போன்ற பல சமூகப் பிரச்சனைகளில் தீர்வு காண்ப தற்கு உளவியல் சமுதாயத் தத்துவத்திற்கு உதவுகிறது.

**அறவியல்**

மனித வாழ்க்கையின் குறியிலக்கை அடைவதற்கான வழிமுறைகளைப் பற்றித் தீர்மானிக்க அறஇயல் ஆர்வம் காட்டு கிறது. இந்நிலையில் அது சமுதாயத் தத்துவத்துடன் இணைந்த ஒன்றாக ஆகிறது. ஆதலின், சமுதாயத் தத்துவத்தை அறஇயலின் ஒரு பகுதியாகவோ, அல்லது அறஇயலை சமுதாயத் தத்துவத்தின் ஒரு பகுதியாகவோ கொள்வர். இருப்பினும், இரண்டிற்குமிடையே வேற்றுமைகளும் உள. அறஇயல், தனி மனிதனின் நடத்தை யையே முக்கியமாகக் கருதுகிறது. ஆனால், சமுதாயத் தத்துவ இயலோ தனி மனிதன் வாழும் குழுமம் பற்றியே அதிகம் சிந்திக் கிறது. அறஇயல் என்பது மனிதனின்பழக்கவழக்கம், நடத்தை இவற்றைக் குறித்ததாகும். அன்றியும் நல்லது எது தீயது எது என்பதை அறிவிக்கும் இயலாகவும் உள்ளது. மனிதனின் கடமை, அறவாழ்வு, அறத்தீர்ப்பு ஆகியன குறித்தும் ஆராய்ந்து உயரிய நன்மை எது என்பதையும் அறஇயல் காட்டுகிறது. எனவே, மனித வாழ்வின் குறிக்கோள் பற்றிய அறிவாக இதனைக் கொள்ளலாம்.

சமுதாயத் தத்துவமும் அறஇயலும் உயர்நிலை அறிவியல்களே. அறஇயல், தனிமனிதனின் செயல்முறை அறிவைப் பயன்படுத்து கிறது. உயர்குறிக்கோள் வாழ்க்கையை நோக்கிய செயல்களில் ஈடுபடுமாறு அவனை உள்நின்று உந்துகிறது. ஆனால், உலகில் தனி மனிதன் வாழ்வு மட்டுமா காணப்படுகிறது? இங்கு நாம் காண்பது பல மனிதர்கள் இணைந்து வாழும் சமூக வாழ்வாகும். ஆதலின் சமுதாயத் தத்துவம் தன் பணிகளைத் தொடங்குகிறது. இணைந்து வாழும் மக்களின் நடத்தை, ஒழுங்குமுறை ஆகியன குறித்தும் சமுதாயத் தத்துவம் சிந்திக்கிறது. சமுதாயப் பின்னணி யைக் கருத்திற்கொள்ளும்போதுதான் தனி மனிதனுடைய செயல், ஆய்வுக்குரிய செயலாகக் கருதப்படுகிறது. இந்நிலையில் அற இயலுக்கும் சமுதாயத் தத்துவ இயலுக்கும் இடையே நாம் வேற்றுமையைக் காணலாம். இரண்டும் தொடர்புடையனவாகத் தோன்றிலும் இரண்டுமே வெவ்வேறான அறிவுத் துறைகளாகும். அறஇயல் குறுகிய நோக்கம் கொண்டதாய் உள்ளது. சமுதாயத் தத்துவமோ எல்லாச் சமூக உறவுகளையும் பகுப்பாய்வு

செய்யும்வேளையில் அறஇயல் மட்டும் தனி மனிதனின் நடத்தையை மட்டும் ஆராய்கிறது.

**அரசியல்**

அரசுக் கோட்பாடு அல்லது அரசியல் என்பது சமுதாயத்தைப் பற்றிய ஆய்வின் முக்கியக் கூறாகும். எல்லாச் சமுதாயங்களும் அரசாங்கம் என்ற அமைப்பைக் கொண்டவையாகவே இருக்கும். அதுகுறித்து பல்வேறு சிக்கல்களும் தோன்றும். அதன் விளைவாக அரசியல் என்ற தனித் துறையே தோன்றியது. இருப்பினும், இதில் கூறப்படுகின்ற கருத்துரைகளில் எல்லாம் சமுதாயத் தத்துவக் கோட்பாட்டுச் சிந்தனைகளைக் காணலாம். அரசாங்கங்களின் குறியிலக்குகளைப் பற்றி அரசியல் கூறினாலும் அக்குறியிலக்கு களைச் சமுதாயத் தத்துவமே தீர்மானம் செய்கிறது. மனித இன முழுமைக்குமான முடிவுகளைப் பற்றிச் சமுதாயத் தத்துவம் சிந்திக் கிறது. ஆனால் அரசியலோ, அரசியல் இலட்சியங்களை மட்டும் தன் கவனத்திற் கொள்கிறது. பிளேட்டோ, அரிஸ்ட்டாட்டில், ரூஸோ, ஜான் லாக் மற்றும் ஹெரால்டு லாஸ்கி ஆகியோர் சமுதாயத் தத்துவ இயலுக்கும் அரசியலுக்கும் இடையே உள்ள தொடர்பை வலியுறுத்துவர்.

**சமுதாய தத்துவ இயலின் வரலாறு**

அறிவியலாக இருந்தாலும் கிரேக்க நூல்களிலேயே அவை முதன்முதலில் தத்துவமாகக் காணப்பட்டன என்பர். சமுதாயத் தத்துவ இயலும் கிரேக்க நாட்டில்தான் முதன்முதலில் தோன்றியது. பண்டைய கிரேக்கத்தின் சமுதாயத் தத்துவம் 'சோபிட்ஸ்' என்பவர்களிடமிருந்து தொடங்கியது. அவர்களே மனிதனின் மீதான சமூக மற்றும் ஆன்மீகச் செயலாக்கங்களின் தாக்கம் பற்றி முதலில் சிந்தித்தவர்கள். சமூக நிலைகளால் தனி மனிதனின் நடத்தை வளர்ச்சியுற்றது பற்றியும், தனி மனிதனைச் சமுதாயம் சார்ந்தவனாக மாற்றிய கல்வியின் தாக்கம் பற்றியும் விளக் கினார்கள். 'சோபிட்ஸ்' சிந்தனையாளர்களில் பிரோட்டோ கோரஸ் என்பவர் முக்கியமானவர். இவர்தான் மனிதன் என்பவன் எல்லாப் பொருள்களின் அளவானவன் என்று கூறியவர். தனி மனிதனும் முக்கியம்; சமுதாயமும் முக்கியம் என்ற

நிலை அப்போதுதான் ஏற்பட்டது. அதன்பின் சாக்ரடீஸ் காலத்தில் சமுதாயத் தத்துவம் சற்று மாற்றம் பெற்றது. சாக்ரடீஸ் அறிவிற்கு முதன்மை அளித்தார். அறிவே சிறந்தது என்றும், எல்லாவற்றிற்கும் அறிவே காரணம் என்றும் கூறினார். அறியாமையால் தான் மனிதன் தீய செயல்களைப் புரிகிறான் என்றார். எனவே இவர் காலத்தில் பகுத்தறியும் ஆற்றல் சமுதாயத் தத்துவ இயலில் இடம்பெறத் தொடங்கியது. பகுத்தறிவு மனிதர்களே உயரிய சமூக அமைப்பைத் தோற்றுவிக்கலாம் என்ற நிலை சாக்ரடீஸ் அவர்களால்தான் ஏற்பட்டது.

இவர் மாணவரான பிளேட்டோவின் சிந்தனைகள் சமுதாயத் தத்துவ இயலுக்கு ஒரு முக்கியக் கொடையாகும். இவருடைய நூலான 'குடியரசு' என்பதுதான் சமுதாயத் தத்துவத்தின் மூலநூலாக எண்ணப்படுகிறது. இவர் கருத்துரையின்படி, அறிந்து கொள்ள வேண்டும் என்றும் உந்துணர்ச்சிதான் மனிதனுடைய சமூக அமைப்பின் அடிப்படையாக, அடித்தளமாக அமைந்துள்ளது. மனிதனின் குணநலன்கள் கல்வியால் மாற்றப்படும். எனவே அவனுடைய சமூக நிலையைக் கல்வியே ஏற்படுத்தும் என்று பிளேட்டோ கூறி அச்சமூக மாற்றத்திற்குக் கல்வியின் இன்றியமையாமையை வலியுறுத்தியுள்ளார். மேலும், தனி மனிதனின் நடத்தைதான் சமூக அமைப்பைத் தோற்றுவிக்கிறது என்றும், அந்த அமைப்பாலேயே அவன் நடத்தை வளர்கிறது என்றும் அவர் கூறுவார். பிளேட்டோவின் சமூகச் சிந்தனையின் படி தனிமனிதனை விட, சமுதாயமே முக்கியமாகக் கருதப்பட வேண்டும்.

பின்னர் வந்த இவர் சீடரான அரிஸ்டாடில் மனிதனின் சமூக நடத்தையைப் பற்றி வேறுபாடான கருத்தைத் தெரிவிக்கிறார். மனித இயல்புகளை மாற்றக் கல்வி ஓர் ஆற்றல் மிக்க சக்தியென்று பிளேட்டோ நம்பினார். ஆனால் அரிஸ்டாடிலோ அப்படி நம்பவில்லை. மனிதனின் உள்ளுணர்ச்சிகளே அவனுடைய சமூக நடத்தையைத் தீர்மானிக்கின்றன என்கிறார். மாறாத மனித உள் உணர்வுகளின் முடிவுதான் சமுதாயம் ஆகும் என்பது அரிஸ்டாடிலின் கோட்பாடாகும். மனிதன் என்பவன் ஒரு சமூக விலங்கு

என்று கூறி, அவனுடைய வளர்ச்சி சமூக அமைப்புகளால்தான் இருக்கும் என்று அரிஸ்டாடில் நிறுவினார். உயரிய இலட்சிய முடைய அரசில்தான் மனிதன் சிறந்த குடிமகனாக விளங்குகிறான். அரசு அளிக்கும் நீதி இல்லாமல் மனிதனுக்கு நல்வாழ்வு அமைவ தில்லை. ஆதலின் அறவாழ்க்கை என்பது அரசியல் வாழ்வு சார்ந்ததாக ஆகிவிடுகிறது. அவ்வாறே அரசை விடுத்து - புறம்பாக - மனிதன் அறத்தின் குறி இலக்குகளை அடைய முடியாது. அரசு என்ற ஒன்று இல்லையெனில் மனிதன் விலங்கு போன்றுதான் இருப்பான். அரசுதான் அவனுடைய சமூக நடத்தைகளை நெறிப் படுத்துகிறது. அரசு ஒரு புறம், சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கிறது. மறுபுறம், மக்களின் அறவாழ்வின் முன்னேற்றத்திற்கு உதவுகிறது. இத்தகைய சமுதாயத் தத்துவக் கோட்பாடுகளையெல்லாம் அரிஸ்டாடில் முதன்முதலில் அளித்துச் சமுதாயத் தத்துவ வரலாற்றில் ஒரு முக்கிய இடம் பெற்றார்.

சமுதாயத் தத்துவ இயலின் வரலாற்றில் தற்போதைய மேலை நாட்டுச் சமுதாயத் தத்துவாதிகளாக சொராகின், ஜின்ஸ்பார்க், மெக்கென்சி, ரஸல் ஆகியோர் விளக்குகின்றனர்.

சொராசின்தான் தற்காலத்தில் மேனாட்டுச் சமுதாயத் தத்துவவாதிகளில் முதன்மை இடம் வகிப்பவர். சமூக நிகழ்வு களின் மீது சமுதாயத் தத்துவத் தாக்கத்தின் முக்கியத்தை இவர்தான் நிறுவினார். ஆனால் சமூக அறிவியல்களின் முடிவு களைச் சமுதாயத் தத்துவம் மீற இயலாது என்று நம்பிய இவர், சமூகவியலறிவுகளின் மீதுதான் சமுதாயத் தத்துவம் அமையும் என்ற கருத்தையும் வலியுறுத்தினார். அதனால் சமூகவியலுக்கே இவர் முக்கியத்துவம் கொடுப்பது போல் தோன்றும்.

ஜின்ஸ்பர்க் தற்காலத்திய சமுதாயத் தத்துவ இயலிற்குக் குறிப் பிடத்தக்க கொடைகளை அளித்துள்ளார். சமுதாயத் தத்துவம் என்பதே மனித நடத்தை பற்றிய பொதுவான குறிக்கோள்களை நிறுவுவதற்காகவேயாகும் என்பது இவரின் வாதம். அன்றியும், சமுதாயத் தத்துவம் அனுபவத்திற்குட்பட்ட சட்டங்களின் மீதுதான் அமைந்திருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். சமூகப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமெனில் சமூக

அறிவியலும் சமுதாயத் தத்துவமும் இணைந்து ஒத்துழைக்க வேண்டும். இரண்டுமே ஒன்றையொன்று சார்ந்துதான் உள்ளன. ஒன்று இல்லையெனில் ஏனையது முழுமையாகாது. எனவே சமுதாயத்திற்குச் சமுதாயத் தத்துவமும் தேவை; சமூக அறிவியலும் தேவை என்பதே ஜின்ஸ்பர்க் கருத்தாகும்.

மெக்கன்சி சமூகப் பிரச்சனைகளைத் தத்துவ முறைமையில் தீர்ப்பதற்கு முயன்றார். சமூக அமைப்பின் தத்துவ அடிப்படைகளை இவர் விளக்கியுள்ளார். இவ்வுலகில் மனிதன் வகிக்கும் இடத்தை ஆராய்ந்த இவர் மனித வாழ்வின் மூன்று சிறப்பியல்புகளைக் குறிப்பிடுகின்றார். அவை சமூக அமைப்பு, தேசிய அமைப்பு, சர்வதேச அமைப்பு என்பனவாகும். சமூக அமைப்பு என்ற நிலையில் மனித இயல்பின் பல்வேறு வடிவங்கள், இனம், கூட்டு என்பன பற்றியும், தேசிய அமைப்பின் குடும்பம் என்பதன் குறிக்கோள், கல்வி, தொழில் நிலையம், அரசு, அரசாங்கம், பிற சமூக அமைப்புகள் என்பன பற்றியும், சர்வதேச அமைப்பு என்பதில் சர்வதேச உறவு, மானிட வாழ்வில் சமயத்தின் இடம், சமூக வாழ்வில் பண்பாட்டின் முக்கியத்துவம் என்பன பற்றியும் விரிவாக எடுத்துரைக்கிறார். மெக்கென்சியின் சமுதாயத் தத்துவம் அவருடைய ஆன்மீக மற்றும் அறஇயல் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

பெர்ட்ரண்ட ரஸலின் சமுதாயத் தத்துவம் மிக முக்கியமான தாகும். சமுதாயத்தின் ஆக்கப்பூர்வ குணநலன்களான அன்பும் இரக்கமும் முழுமையாக வளர வேண்டும் என்று இவர் வலியுறுத் தினார். சமூக மற்றும் அரசியல் அமைப்புகளான குடும்பம், திருமணம், கல்வி, அரசு போன்றவை மனிதனின் இயற்கை வளர்ச்சிக்குத் தடைகளாகக்கூடா எனவும், மாறாக அவை மனிதனுக்கு நிறைவான சந்தர்ப்பம் மற்றும் சுதந்திரம் அளித்திட வேண்டும் எனவும் கூறினார். இச்சமூக அமைப்புகளே உலகை அழிவிலிருந்து காப்பாற்றும். ரஸல் அவர்களின் பல நூல்களில் இந்த அமைப்புகள் எல்லாம் எந்த உணர்விற்காக அமைக்கப்பட்ட னவோ அந்த உணர்வுகளின் முழுமையான வளர்ச்சிக்குத்

தடைக்கற்களாகவும் விளங்கின என்பதைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

மேலும், ரஸல் அவர்கள் நம்முடைய சமூக, பொருளாதார, தொழில், அரசியல் அமைப்புகள் எல்லாம் கூட்டுறவின்பாற் பட்டனவாய் அமைக்கப்பட வேண்டுமே அல்லாமல் அதிகாரத் தாலும் ஆற்றலாலும் செயல்படக்கூடா என்றும் வலியுறுத்தினார். மனித வாழ்க்கை என்பது பகுத்தறிவை விட உள்ளுணர்வால் தீர்மானிக்கப்பட வேண்டும். இலட்சிய சமுதாயம் என்பது இந்த உள்ளுணர்ச்சிகளின் அடிப்படை மாற்றத்தால்தான் அமைய முடியும் என்று கூறும் ரஸல் அவர்கள் காந்தியடிகள், அரவிந்தர் போன்றவர்களைப் போல் இம்மாற்றத்திற்குக் கல்வியே ஒரு சிறந்த கருவி என்றும் வலியுறுத்தினார்.

# II. மனித இயல்பு

உலகில் உயரிய நிலையை அடைவது மனித வாழ்க்கை ஒன்று தான். உயரியநிலை என்னும்போது இதற்கு மேல் வளர்ச்சி இல்லையோ என்று எண்ணுதல் கூடாது. வளரும் வாய்ப்புகளை உடைய, உலகில் காண்பனவற்றில் சிறப்புடையதாக இருப்பது மனித வாழ்க்கையே. அவன் விலங்குகளுடன் ஒப்பிட்டுப் பேசக் கூடியவனாக இருப்பினும், சில நேரத்தில் இறைவனுடனும் ஒப்பிட்டுப் பேசக்கூடிய நிலையில் உள்ளான். எனவே சில நேரங் களில் மனிதன் விலங்கா, இறைவனா என்றும் ஐயப்பாடு எழுகிறது. சில நேரங்களில் இரண்டுமாகவும் இருப்பதாகக் கூறுவர். அவனுடைய எண்ணங்கள் அழிவற்றதை நோக்கிச்சென்றாலும், உடல் மட்டும் அழியும் தன்மையானதாகவே உள்ளது. ஆகவே, மனிதனுடைய இயல்பு பற்றி எந்த ஒரு முடிந்த - முடிவான கருத்தையும் திட்டவட்டமாக எவரும் அறிவிக்க இயலாது. அறுதி யிட்டு உறுதியாகக் கூறமுடியாவண்ணம் அவனுடைய இயல்பும் சிக்கல் நிறைந்த தொகுதியாகவே உள்ளது.

'மனிதன்' என்பதற்கு 'இறகுகளற்ற இருகால் உயிரினம்' எனும் நகைப்பிற்கிடமான விளக்கத்திலிருந்து 'பகுத் தறியும் விலங்கு' என்னும் தீவிர விளக்கம் வரை பலவிதமான பொருள் விளக்கங்கள் தரப்படுகின்றன. இருப்பினும், எந்த ஒரு விளக்கமும் மனநிறைவை அளிப்பதாக இல்லை என்பதே உண்மை. பேஜ்காட் என்பார், மனிதன் என்பவன் 'விலங்குகளைப் போன்ற பொய்த் தோற்றம் கொண்ட ஆன்மா' என்கிறார். பிராங் கிளின் மற்றும் சார்லயில் ஆகியோர் 'கருவிகளைப் பயன்படுத்தும் விலங்கு' என்கின்றனர். ஆனால், மனிதனுக்கு இருக்கும் சிந்தனை யாற்றல் ஒன்றைக் கொண்டே அவனுடைய பிற குணநலன்களை

விளக்கலாம். இச்சிந்தனையாற்றல்தான் மனிதனை விலங்குகளிட மிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. இதன் பயனாகவே மொழி வளர்ந்தது; கலைகள் வளர்ந்தன; தொழிற்கருவிகள் விளைந்தன; பாதுகாப்பிற்கு ஆயுதங்கள் தோன்றின. மகிழ்ச்சி, தருமம், மரியாதையுடன் கூடிய பக்தி முதலியனவும் வளர்ந்தன. சட்டங் களும் அரசாங்கமும் தோன்றின; இறுதியில் உலகப் பொதுமை என்னும் கூட்டுறவும் உதயமாயிற்று. பிளேட்டோவும் அரிஸ்டாடி லும் பல ஆண்டுகளுக்கு முன்பே மனிதச் சிந்தனையாற்றலின் சிறப்புகளை எடுத்துரைத்துள்ளனர்.

சிந்தனையாற்றல் இருந்தாலும், அவனுக்கென்று ஓர் உடலமைப்பு இருக்கும்போதுதான் மனித வாழ்க்கை பொரு ளுடையதாகிறது. அவனுடைய கைகள் பல செயல்களையும் சாதனைகளையும் செய்கின்றன. நடை பயிலக் கால்களும், உலக நிகழ்ச்சிகளை உற்றுநோக்கப் புலன்களும் அவனுக்கு உதவுகின்றன. எழுத்து முறைமையில் அவனுடைய கைவிரல்கள் செயல்படுகின்றன. அறிவியல் முதலாகவுள்ள பல அறிவுத் துறைகளையெல்லாம் மனிதனின் மூளை வளர்ச்சியுறச் செய்கிறது. புலன்களும் மனமும் இல்லையெனில் அவனுடைய பகுத்தறிவு வளர்ச்சி அடைந்திருக்காது. மனித உடலைக் கொண்டுதான் மனித வாழ்க்கையின் வடிவமே தீர்மானிக்கப்படு கிறது. ஆனால் சிந்தனையாற்றலே, அவனை விலங்குகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. ஆகவே, நாகரீகமும் பண்பாடும் மனிதனால் மட்டுமே உருவாக்கப்படுபவை என்ற முடிவிற்கு வரமுடியும்.

**மனிதனின் சமூக இயல்பு**

சமுதாயத் தத்துவ இயலின் அடிப்படைப் பிரச்சனை மனிதனின் சமூக இயல்பு பற்றியதாக அமைகிறது. ஏனெனில் அவன் சமூக இயல்பு அற்றவனாக இருப்பின் அவனிடம் உள்ள சமூகக் குறிக்கோள்களைப் பற்றி எடுத்துரைப்பது அவசியமற்ற தாகிவிடும். மனிதனின் வளர்ச்சி என்பது அவனுக்குள் இருக்கும் ஆற்றலைப் பொறுத்தே அமைகிறது. ஆதலின் சமூக உள் ளுணர்வுகள் அவனுக்குள்ளேயே உண்மையானால்தான் அவன்

சமூக மனிதனாக இருக்கிறான். இயற்கையிலேயே அங்ஙனம் இல்லையெனில் எவராலும் அதைத் தோற்றுவிக்க முடியாது.

மனித இயல்புகளின் சிறப்புப் பற்றித் தொடக்க காலத்தி லிருந்தே சமுதாயத் தத்துவவாதிகள் சிந்தித்துள்ளனர். பலமுறை வளர்ச்சிக் கோட்பாட்டினர், மனிதன் விலங்கினத்திலிருந்து வளர்ச்சியடைந்தவன் என்று கூறுவர். விலங்கின் குணக்கூறு ஏதோ ஒரு வடிவத்தில் மனிதனிடம் இருப்பதாகவும் கூறுவர். வேறு சில படிமுறை வளர்ச்சிக் கோட்பாட்டினர், மனிதனின் படிமுறை வளர்ச்சியைத் தாவர உலகிலிருந்து தொடங்குவர். எனவே, மனித இன வரலாறு தாவர உலகிலிருந்து தொடங்கி விலங்கினம் வழியாக வளர்ச்சியுறும் ஒரு தொடராக இருப்பதாகவும் கூறுவர். இந்தத் தொடர்ச்சியில் தாவரம், விலங்கு, மனித நிலைகளாகிய ஒவ்வொன்றிற்கும் தனித்தனிச் சிறப்பு இயல்புகள் இருப்பதையும் அறியலாம்.

ஒவ்வொரு படிமுறை வளர்ச்சி நிலையிலும் மன நிறைவடை வதல் என்பது குறைந்துகொண்டே வருகிறது என்பதையும் நோக்க வேண்டும். மனிதனைவிட விலங்குகள் நிறைவுடையனவாக வாழ் கின்றன; விலங்குகளை விட தாவரங்கள் அவ்வாறு உள்ளன போலவும் தோன்றக்கூடும். பொதுச் செயற்பாடுகள் மிகுதியாகும் போது அமைதி குறையும். அந்நிலையில் மனிதச் செயல்விரை வுடைய ஆற்றல் கொண்டவனாக இருப்பதால் அவனுக்குச் சிக்கல், உட்புயல் முதலியன ஏற்படுகின்றன. மனிதன் தன் உயர்நிலையை நிலைநாட்ட அமைதியையும் மன நிறைவையும் விலைகொடுத்து வாங்க வேண்டியவனாகிறான். இருப்பினும், படிமுறை வளர்ச்சி யின் ஒவ்வொரு நிலையிலும் அதற்கு முந்தைய நிலையின் கூறுகள் ஏதாவதொரு வடிவில் காணப்படும். அதனால்தான் சமுதாயத் தத்துவவாதிகளான பிளேட்டோ, அரிஸ்டாடிலிருந்து மெக்கென்சி வரை அனைவரும் மனிதனிடத்தில் விலங்கு மற்றும் தாவரங்களின் பண்புக்கூறுகள் உள்ளன என்று கூறுவர். எனவே, அடிப்படையில் மனிதனின் இயல்பு மூன்று முக்கியக் கூறுகளைக் கொண்டதாக உள்ளது. அவை தாவரவியல், விலங்கினம் மற்றும்

அவனுடைய இயற்கை இயல்பான சிந்தனையாற்றல் என்பவை யாகும்.

தாவரங்களைப் போன்றே மனிதனுக்கும் உணவு, நீர், இயற்கையின் சீற்றத்திலிருந்து பாதுகாப்பு, குறிப்பிட்ட வெப்ப நிலை போன்றவை தேவைப்படுகின்றன. இக்கூறுகள் எல்லாம் மனிதனுக்கு அடிப்படைத் தேவைகளாய் உள்ளவை. இவை இல்லாமல் அவனால் வாழமுடியாது. உயிர் வாழவேண்டும் என்பதற்கான போராட்டங்கள் விலங்குகளிடையே தொடர்ந்து வருகின்றன. தாம் வாழ வேண்டும் என்பதற்காக அவை பிற விலங்குகளுடன் சண்டையிடும். பாதுகாப்புக் கருதியே பெரும் பாலான விலங்கினங்கள் கூட்டம்கூட்டமாக வாழ்கின்றன. சேர்ந்து வாழ வேண்டும் என்ற உணர்வுக்கூறு அவற்றிடம் உள்ளது. மேலும், அவை தங்களுக்கென இருப்பிடங்களைத் தட்பவெப்ப நிலைகளுக்கேற்பத் தேர்ந்தெடுத்து அமைத்துக் கொள்கின்றன. குட்டிகளுக்கும் குஞ்சுகளுக்கும் தாய், தந்தை விலங்குகள் உணவு ஊட்டி வளர்க்கின்றன. ஒவ்வொரு விலங்கினமும் தன்னுடைய உணவிற்காகத் தானே வழிமுறைகளைக் கண்டறிகிறது. ஆனால், பிற செயல்களுக்கு அவை ஒன்றோடொன்று இணைந்து தம் மிடையே ஓர் அமைப்பு இருப்பதைப் போன்று செயலாற்று கின்றன. இந்நிலையில் கூட்டுறவு என்னும் உள்ளுணர்வு அவற்றிடம் இயற்கையாகவே அமைந்துள்ளதைக் காணலாம். எனவே மனிதனிடம் காணப்படும் அடிப்படை உள்ளுணர்வுக ளெல்லாம் விலங்கினத்திலும் இருப்பதை அறியலாம். சமுதாயத் தத்துவவாதிகள் மனித இனத்திற்கும் விலங்கினத்திற்குமிடையே காணப்படும் பொது உள்ளுணர்வுகள், தற்காப்பு, ஆர்வம், விளையாட்டு, தலைவனாக இருக்க விரும்பும் குணம், ஆதிக்க மனப்பான்மை, கூட்டுறவு மனநிலை, பின்பற்றும் குணம், ஆறுதல், பசி, தாகம், பால் உணர்வு ஆகியவற்றிலும் காணக்கிடைக்கும் என்பார்கள். லில்லியம் மெக்டெனல் என்பவர், மனிதன் மற்றும் விலங்கினங்களின் நடத்தைகள், தப்பித்தல், ஆர்வம், எதிர்த்துப் போராடுதல், தன்னுறுதி, சரணடைதல், பெற்றோர் உணர்வு ஆகிய அடிப்படை உள்ளுணர்வுகளால் ஊக்குவிக்கப்படுகின்றன என்று கூறுவார்.

இவ்வாறே உளவியலறிஞரும் விலங்கினம் பற்றிய முடிவுரை களைக் கொண்டு மனித இயல்புகளை விளக்குவர். மனிதனின் சமூக, அற, சமய, ஆன்மீக நடத்தைகளை விளக்குவதற்கு விலங்கின வாழ்க்கையை நெறிப்படுத்தும் சில ஊக்குவிக்கும் கூறு களைத் தற்கால உளவியலறிஞர் பயன்படுத்துவர்.

மனிதனின் முக்கிய இயல்பு சிந்தனையாற்றலாகும். அமைப்பு என்பதை நிறுவும் ஆற்றல் இதற்கேயுண்டு. ஆகவேதான் மனிதனின் அமைப்பு நிலையங்கள் பல வகையாகவுள்ளன. எதிர்கால வாழ்விற்காகப் பாதுகாக்கப்படுவது என்பது, சிந்தனை யாற்றலின் பழைய அனுபவ உதவியால்தான் அமையக்கூடும். மனிதனின் படிமுறை வளர்ச்சிக்கு ஏற்றவாறு சிந்தனையாற்றல் வளர்ந்துள்ளது. மனிதனின் சிந்தனையாற்றல் அவனிடம் உள்ள விலங்கினப் பண்புக் கூறுகளைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்தும் என்றும், ஆனால் அதற்குத் தாவரவியல் பண்புகளைக் கட்டுப் படுத்தும் ஆற்றல் இல்லை என்றும் அரிஸ்டாடில் கூறுவார். நம் பசியையும் தாகத்தையும் சிந்தனையாற்றல் நிறைவு செய்ய முடியாது; எனினும் கோபம், ஆர்வம், போராடுதல் போன்ற குணங்களை நெறிப்படுத்தக்கூடும்.

இவ்வுயரிய சிந்தனையாற்றலை அனைத்துத் தத்துவஞானியரும் பெரிதும் புகழ்ந்துரைப்பர் என்பதை முன்னரே கண்டோம். பிளேட்டோ உயர் அரசின் மிக உயர்ந்த இடத்தைப் பகுத்தறியும் தத்துவவாதிகளுக்கே அளித்துள்ளார். எவருக்கு மிகுதியாகச் சிந்தனையாற்றல் உள்ளதோ அவருக்கே இச்சமுதாயத்தை ஆளும் உரிமையும் இருக்க வேண்டும் என அனைவரும் வலியுறுத்துவர்.

எனவே, மேற்கூறிய மூன்று முக்கிய உள்ளுணர்வுகளே மனித இயல்புகளை அறுதியிடப் பெரிதும் உதவுகின்றன. பிளேட்டோ வும் அரிஸ்டாடிலும் மனித இயல்புகளைப் பற்றி முக்கியக் கருத்துரைகளை வழங்கியுள்ளனர். பிளேட்டோ தம் 'குடியரசு' என்னும் நூலில் சமுதாயத்தை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்துக் கூறுவார். இப்பிரிவுகள் முன்னர்க் கண்ட தாவர, விலங்கின, சிந்தனை எனப்படும் மூன்று உள்ளுணர்வுக் கூறு களையே அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன.

பிளேட்டோ காணும் சமுதாயத்தில் தொழிலாளர், இராணுவ வீரர், அரசாள்வோர் ஆகியோர் அடங்குவர். இவர்களில் தொழிலாளர் களிடம் மிகுதியாகத் தாவரவியற் பண்புக்கூறுகளும், வீரர்களிடம் விலங்கினக் கூறுகளும், அரசரிடம் சிந்தனையாற்றலும் ஆதிக்கம் செலுத்தக் கூடியவையாக இருக்கும் என்பார். எனவே, பல்வேறு பட்ட மக்களிடத்தில் பல்வேறான உள்ளுணர்வுகள் காணப்படு கின்றன. ஆனால் பிளேட்டோவின் இக்கூற்றைப் பலர் மறுக்கின்றனர். மெக்கென்சி இவ்வாறு சமுதாயத்தைப் பிரிப்பதை மறுக்கிறார். ஏனெனில் மூன்று குணங்களும் எல்லா மனிதர்களிட மும் இயல்பாகவே உள்ளன. சிந்தனையாற்றலின் அளவு வேண்டு மானால் மனிதருக்கு மனிதர் வேறுபடலாம்; ஆனால், குறிப்பிட்ட மக்களுக்கு மட்டுமே சிந்தனையாற்றல் அதிகமிருக்கும் எனக் கூறுதல் தவறாகும். மேலும், அடிப்படையிலே வேறுபாடு உடையவராக மனிதர் இருந்தால் அவர்களால் எங்ஙனம் ஓர் அமைப்பு முறைச் சமுதாயத்தை உருவாக்க இயலும் என்று மெக்கன்சி வினவுகிறார். கீழ்வகுப்பு மக்களுக்குச் சிந்தனை யாற்றல் இல்லையெனில் அவர்கள் எப்படி அரசரை அறிந்துகொள்வர் அல்லது பசி போன்ற உணர்வுகள் இல்லாமல் எப்படி அரசர் ஏழைகளிடம் அனுதாபம் காட்ட முடியும்? எனவே, பிளேட்டோவின் இந்த மனித இயல்புக் கோட்பாடு அவருடைய கருத்தான இலட்சிய அரசு என்பதை எதிர்ப்பதாகவே கொள்ள வேண்டும். ஏனெனில் பிரிவினை இருக்கும்போது அமைப்புநிலை என்பது ஏற்படாது.

மேலும், பிளேட்டோ தொழிலாளர்கள் தாவர இயற் பண்பு களால் முறைப்படுத்தப்படுவார்கள் என்றும், கல்வி என்பது ஆள் வோருக்கே உரியது என்றும் கூறுவார். தொழிலாளர்களுக்குக் கல்வி தேவையில்லையெனில் அவர்களால் எங்ஙனம் சிறப்பான கலைவளம் சான்ற தொழில்களைச் செய்யமுடியும்? சமுதாயத்தை அழகியதாகவும், கலைச் சிறப்புடையதாகவும் உருவாக்க வேண்டு மெனில் தொழிலாளர்களுக்கும் கல்வியறிவு இன்றியமையாத தாகும். எனவே கல்வி எப்பிரிவினருக்கும் உரியதாக இருக்க வேண்டுமேயன்றிக் குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டுமே அது சொந்தமாகிவிடாது. பிளேட்டோவின் கோட்பாட்டிலுள்ள இக்

குறைபாட்டை அரிஸ்டாடிலும் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வாறே விலங்கினப் பண்புக்கூறுகள் இராணுவ வீரர்க்குரியவை என்று பிளேட்டோ கூறுகிறார். அவருடைய இலட்சிய சமுதாயத்தில் போருக்கே இடமில்லாதபோது அதில் போர்வீரர் எங்ஙனம் இருக்க முடியும்? மேலும், மனித இயல்பிலுள்ள தாவர இயற் குணங்கள் போரில் மட்டும் பிரதிபலிப்பதில்லை. மாறாக விளையாட்டு, கலை, கவிதை, கூட்டுறவு, அன்பு ஆகியவற்றில் கூட அப்பண்புகள் மிளிரும். எனவே, போர் வீரர்களுக்கு மட்டுமே உரிய பண்பு நலன்களாகத் தாவரவியற் குணங்களைக் கூறுதல் தவறாகும்.

அரசர்களுக்குச் சிந்தனையாற்றல் இருக்க வேண்டுமென்று பிளேட்டோ வலியுறுத்தினார். ஆனால், பிறவகுப்பினருக்கு இது தேவையில்லை எனப் பொருள்படாது. மேலும், வெறும் பகுத்தறிவு மட்டுமே அரசர்களின் பணி ஆகாது. விஞ்ஞானி, தொழிலதிபர், சமூகத் தலைவர் ஆகிய அனைவருக்கும் சிந்தனையாற்றல் தேவைப்படும். அரசர்க்கு மட்டுமே உரியது என்னும் பிளேட்டோ வின் கோட்பாட்டிலுள்ள குறையையும் அரிஸ்டாடில் எடுத்துரைக் கிறார்.

இனி, மனித இயல்பில் இயற்கையாக உள்ள இம்மூன்று பண்பு களையும் அரிஸ்டாடில் ஏற்றுக் கொள்கிறார். தாவர இயற் பண்புகள் பகுத்தறிவு அற்றவை எனவும், அவற்றைச் சிந்தனை யாற்றலே கட்டுப்படுத்த வேண்டுமெனவும் அவர் வலியுறுத்து கிறார். கீழ்வகையான உள்ளுணர்வுகளைச் சிந்தனையாற்றலே நெறிப்படுத்த வேண்டும் என்று கூறும் அரிஸ்டாடில் சிந்தனை யாற்றலுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறார்.

இந்தியத் தத்துவஞானிகள் மனிதனே ஓர் ஆன்மா எனவும், அது உடல், மனம், அறிவு ஆகியவற்றுடன் இருந்து தன்னுடைய விடுதலையான முக்தியை அடையக்கூடிய இலட்சியத்துடன் இருக்கும் எனவும் கொள்வர். வேதங்களும், உபநிடதங்களும், கீதையும், மகாபாரதமும் இந்தியத் தத்துவ இயலில் உள்ள ஆறு தரிசனங்களும் இவ்வாறே கூறும். மேலும், சிந்தனையாளர்களான விவேகானந்தர், காந்தி, அரவிந்தர் ஆகியோரும் இக்கருத்தையே

எடுத்துரைக்கின்றனர். எனவே, பகுத்தறிவு மற்றும் பகுத்தறிவிற்கு மாறானது என இருவகைக் குணங்களின் சேர்க்கையே மனித இயல்பு பற்றிய இந்தியக் கருத்தாகும். இவ்விரு நிலைகளைப் பற்றி மேலைநாட்டவர் கூறினாலும், அதற்கு அப்பாலும் செல்ல இந்தியத் தத்துவவாதிகள் முயன்றுள்ள நிலையை நாமறியலாம். மேலும், மனிதனிடம் ஆன்மீகம் எனும் பிரபஞ்சக் கருத்தும் இருப்பதாக இந்தியத் தத்துவஞானிகள் கூறி அதன் முக்கியத் துவத்தை வலியுறுத்துவர்.

# III. சமுதாயம்

சமுதாயம் என்றால் என்ன என்பதைப் பற்றிப் பல கருத்துகள் சொல்லப்படுவதுண்டு. பொதுவாக, சமுதாயம் என்பதைத் தற்போது பேச்சுவழக்கில் ஒரு குழுமம் - கூட்டம் - அமைப்பு என்னும் நிலையில்தான் பேசுவர். ஆனால் 'சமுதாயம்' என்றால் என்ன என்பது பற்றிச் சமுதாயத் தத்துவவாதிகள் பல விளக்கங்களை அளிப்பர்.

'பழக்க மரபு, செயலாற்றும் முறை, அதிகார வலிமை, ஒருவருக்கொருவர் உதவுதல் ஆகியவற்றின் ஓர் அமைப்பு முறையாகவும், பல குழுமங்கள், பிரிவுகள் ஆகியவற்றுடன் மனிதனின் சுதந்திரம், நடத்தை ஆகியவற்றை நெறிப்படுத்தும் ஒழுங்கு முறைமையாகவும் இருப்பது எதுவோ, அதுவே சமுதாயம்' என்று மெக்லியர் என்பாரும், பேஜ் என்பாரும் கூறுகின்றனர். இவ்விளக்கத்தின் மூலம் சமுதாயம் என்பது விரைந்து செயலாற்றும் கூட்டுத் தொகுதி முறையாகும். ஏனெனில், சமுதாயத்துள் பல்வேறுபட்ட செயல், தொழில்களுடன் பொருளாதார, அரசியல் செயற்பாடுகளும் உள்ளன. இவை ஒன்றுக்கொன்று தொடர்பு உடையவனாகவும், மனிதனின் உரிமை, கடமைகளைப் பற்றியவையாகவும் அமைந்துள்ளன. மேலும், சமுதாயம் என்பது தனிமனிதனின் நடத்தை, மனித வாழ்வின் பல்வேறு அம்சம் இவற்றையும் கொண்டதாகவுள்ளது. மனிதர்களிடையே காணப்படும் பிரிவுகளான குழுமம், இனம், கூட்டு அமைப்பு, வகுப்பு ஆகியனவும் சமுதாயத்தில் உண்டு. இம்முறையில், சமுதாயம் என்பது ஒன்றுக்கொன்று தொடர்பும் செயற்பாடும் உடைய பல்கூட்டு வலையேயாகும்.

கிட்டிங்ஸ் என்பார் 'சமுதாயம் என்பது தன்னுள்ளே ஒரு பேரவை போன்ற முறையான உறவுகளைக் கொண்ட ஓர் அமைப் பாகும் என்றும் அவ்வுறவால் மனிதர் ஒருவருக்கொருவர் இணைந்து வாழ முடியும்' என்றும் கூறுகிறார். சமுதாயத்தைப் பற்றிய இவ்விளக்கம் அமைப்பு நிலையை வலியுறுத்துகிறது. சமுதாயம் என்பது தனித்தனியே பிரிந்து கிடக்கும் தனிமனிதரின் கூட்டமன்று. சமுதாயம் எனில் அங்கு மனிதர்களிடையே ஒழுங்குமுறையாக உறவு காணப்படும். அவ்வுறவுகளின் அடிப்படையில்தான் குடும்பம், இனம், வகுப்பு போன்றவை அமைகின்றன. எனவே, சமுதாயம் என்பது தனிமனிதரின் ஒழுங்கமைக்கப்பட்ட கூட்டமாகும்.

ஜின்ஸ்பர்க் என்பார், 'சமுதாயம் என்பது தனிமனிதரால் இணைக்கப்பட்ட கூட்டமாகும் என்றும், இங்கு மனிதர் குறிப்பிட்ட உறவாலும், நடத்தை முறையாலும் இணைகின்றனர் என்றும், இக்கூட்டத்தில் சேராதவர்களிடமிருந்து உறவு, நடத்தை ஆகிய வற்றால் இவர்கள் வேறுபடுகின்றனர்' என்றும் விளக்குகிறார். மக்களிடத்தில் ஒன்றுபட்ட உறவு, நடத்தை முறைகளைச் சமுதாயம் வலியுறுத்தும். மேலும் குறிப்பிட்ட உறவு, நடத்தைகளை உடைய ஒரு சமுதாயம் வேறுபட்ட உறவு, நடத்தைகளையுடைய சமுதாயத் திலிருந்து மாறுபடும். ஜின்ஸ்பர்க் அவர்களின் விளக்கம் பொதுவான சமுதாயம் பற்றியதாக இல்லாமல் ஒரு 'குறிப்பிட்ட' சமுதாயம் பற்றியே பேசுவதாக எடுத்துக் கொள்ளலாம்.

**சமுதாயத்தின் இயல்பு:**

சமுதாயம் ஓர் அருவமான, பண்பியலான பிழிவாகவே உள்ளது. ஏனெனில் அது, சமூக உறவு, மரபு, சட்டம் முதலிய அடிப்படைக் கூறுகளால் அமைக்கப்பட்டதாகும். இன்னும் ஒரு கோணத்திலும் சமுதாயத்தை நோக்க வேண்டும். மனித இனத்தின் நடத்தை, அதன் பொருட்டு எழும் உறவுத் தொடர்பான சிக்கல், பின்னர் அவற்றைச் சீர்படுத்தல் போன்ற கண்ணோட்டங் களுடன் சமுதாயத்தை விளக்க வேண்டும் என்று ஒடம் கூறுவார். சமுதாயம் என்னும் பதம் ஒரு கோட்பாட்டு அளவாகும். அப்பதம் ஒரு கூட்டத்தின் உறுப்பினர்களுக்கு இடையேயான உறவின்

தொகுதியைக் குறிக்கும் என்று ராய்டன் என்பார் கூறுவார். இம்முறையில் மனித இனத்தின் உறவுநிலை எங்கெங்கு உள்ளதோ அங்கெல்லாம் சமுதாயம் இருக்கும் என்று கொள்ளலாம். அவ்வுறவு நிலை நல்லதாக இருந்தாலும் சரி, தீயதாக இருந்தாலும் சரி, அங்கு சமுதாயம் இருக்கும். ஆனால், இந்தச் சமூக உறவுநிலைகள் கண்களுக்குப் புலனாகா. ஏனெனில், அவற்றிற் கென்று ஒரு மெய்யான, புலனாகும் வடிவம் இல்லை. எனவே சமுதாயம் என்பது அருவமான, பண்பியலான ஒரு பிழியாகும்.

சமுதாயம் என்பது வெறும் மக்களின் கூட்டமன்று. சில சமூகவியலறிஞர்கள் சமுதாயத்தை வெறும் மக்களின் கூட்டமாகவே காண்பர். ஆனால், சமுதாயத் தத்துவவாதிகள் இக்கூற்றை மறுப்பர். 'சமுதாயம் என்பது உண்மைப் பொருளாக இருப்பினும், அது ஒரு நிலை; ஓர் உறவுமுறை என்பதாகத்தான் பொருள்படும்' என்பார் ரைட் என்னும் அறிஞர். பிரான்ஸ் வொர்த் மற்றும் லாபெயர் ஆகிய அறிஞர்கள் இதனை ஏற்பர். 'உறவுகளின் பாணியைத்தான் சமுதாயம் என்கின்றோமே அன்றி மக்களை இல்லை'என்று அவ்விருவரும் எடுத்துரைப்பர். வாழ்க்கை வழிமுறைகளைக் குறிக்குமோ, அப்படியே சமுதாயம் என்பது குறிப்பிட்ட ஒரு பொருளைக் குறிக்காமல் கூட்டு அமைப்பின் செயல்முறைகளையே குறிக்கும் என்று ராய்டர் மேலும் கூறுவார்.

அடுத்து, சமுதாயம் என்பது உறவுநிலைகளின் அமைப்பு முறையாகும். மனித இனத்தில் காணப்படும் உறவு நிலைகளின் அமைப்பு முறையே - ஒரு முறைமையே - ஒரு பாணியே சமுதாயம் எனப்படும். பார்சன்ஸ் சமுதாயத்தை விளக்கும்போது அது மனித உறவுகளின் கூட்டுத்தொகுதி என்பார். அவ்வுறவுகள் உள்ளார்ந்த மாகவும், குறியீடுகளாகவும் இருக்கும். சமுதாயம் என்பது பலவகைப்பட்ட வழிமுறைகளைக் கொண்ட ஒரு கூட்டுத் தொகுதி யாகும் என்பார் கூலி. மக்கள் ஒருவருக்கொருவர் இணைந்து செய லாற்றும் வாழ்க்கையின் வகைகளும் வழிமுறைகளுமே அக்கூட்டுத் தொகுதியாகும். மேலும், இவ்வாறு இணைந்து குழுமமாக வாழும் போது ஏதாவது ஒரு பகுதியில் ஏற்படும் பாதிப்பு, முழுமையையும் பாதித்துவிடும் என்று மேலும் அவர் கூறுகிறார். எனவே,

சமுதாயம் என்பது உறவுநிலைகளின் அமைப்பு முறையேயாகும் என்பது விளங்கும்.

இச்சமூக உறவுகளில் உளஞ்சார்ந்த பண்பும் இருப்பதாக மெகவியர், கிட்டிங்ஸ் ஆகியோர் கூறுவர். இந்த உளஞ்சார்ந்த பண்பியல் இருப்பதால்தான் மற்றவற்றின் இருப்பினை உணர முடிகிறது. அதனால்தான் பொதுக்குறிக்கோள், பொதுநன்மை போன்றவற்றை உணர முடிகிறது. இவ்வுணர்வின் வெளிப்பாடு இல்லையெனில் சமூக உறவுமில்லை; சமுதாயமும் இருக்காது. ஒருவரையொருவர் அறிந்து சமூக உயிரினங்கள் அதன்படி நடந்து கொள்வதால்தான் சமுதாயம் என்னும் அமைப்பே நிலைத்துள்ளது. சமூக உறவு நிலையை வேறுபடுத்திக் காட்டுவது உள்ளத்தின் செயலாகும். ஏனெனில் உணர்ச்சி, கோபம், தாபம், இரக்கம் போன்ற உணர்வு நிலைகளெல்லாம் சமூக உறவிலேயே தென்படுகின்றன. இவை இல்லையெனில் கணவனுக்கும் மனைவிக்கும், தந்தைக்கும் மகனுக்கும், ஆசிரியருக்கும் மாணவனுக்கும் இடையேயான உறவை உண்டாக்க முடியாது.

எனவே, சமுதாயம் என்பது பண்பியலான பிழிவின் அமைப்பு பாணி அல்லது முறைமை எனலாம். இது வெறும் மக்களின் கூட்டமன்று என்றும், ஆனால் அவர்களின் ஒத்த உறவுநிலை, தொடர் செயல் ஆகியவற்றின் அமைப்புமுறை என்றும் கண்டோம். மேலும், இவ்வுறவு நிலைகளில் உளஞ்சார்ந்த பண்பும் இருப்பதாக அறிந்தோம். எனவே சமுதாயம் என்பதில் எல்லாச் செயல்களும், உறவுகளும், மனிதர்களின் ஒத்த நடத்தைகளும் அடங்கும். மெக்வியர் போன்றவர்கலும் சமுதாயம் என்னும் பதத்தின் பொருளை மிகவும் விரிவாக்கிக் கொள்ள வேண்டுமென்றே கூறுவர்.

சமுதாயம் என்பது ஒற்றுமை வேற்றுமைகளை உள்ளடக்கியதாகவே இருக்கும். மெக்வியர் அவர்கள் ஒற்றுமை வேற்றுமைகளில்லாமல் சமுதாயம் இருக்க முடியாது என்கிறார். இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு இருந்தாலும், சமுதாயத்தின் வளர்ச்சிக்கு அவை இரண்டும் மிக இன்றியமையாதவையாகும். மனித சமுதாயம் என்பது மனிதர்களாலேயே ஆக்கப்பட்டது.

அவர்களின் குணநலன்களிலும் செயற்பாடுகளிலும் பல ஒற்றுமை வேற்றுமைகள் உள்ளன. உடலமைப்பு, இயற்கையின் கூறுகள், மனம், விருப்பம் ஆகியவற்றில் ஒரு பொதுமையைக் காணலாம். ஆனால் மனித இனத்தில் விருப்பம், ஈடுபாடு, மரபு, நடத்தை ஆகிய வற்றில் பல வேற்றுமைகளையும் உணரலாம். ஆகவேதான், இச்சமுதாயத்தில் பல சமூகங்கள் காணப்படுகின்றன. பல ஒற்றுமைகளின் அடிப்படையில் ஒரு சமுதாயம் அமைக்கப்பட்டா லும் அதனிடையே பல வேறுபாடுகள் கொண்ட சமூக அமைப்புகள் காணப்படுகின்றன.

ஒரு சமூக அமைப்பிற்கு ஒற்றுமைக் குணங்கள் மட்டுமே போதாது. அதற்கு வேற்றுமையும் அவசியமாகிறது. ஒரு சமுதாயத் தின் பொருளாதாரக் கட்டமைப்பு, தொழில் பாகுபாட்டில் அமைந் துள்ளது. மனிதர்களிடம் தொழில்களும் பொருளாதாரச் செயற் பாடுகளும் வேறுபட்டே காணப்படுகின்றன. அவ்வாறே, சமூகக் கட்டமைப்பு, குடும்பத்தைச் சார்ந்துள்ளது. ஆண், பெண் என்னும் வேறுபட்ட இனமே அக்குடும்பத்தின் அடிப்படையாகும். மக்களின் சிந்தனை, இலட்சியம், கருத்துநிலை ஆகியவற்றில் காணப்படும் வேற்றுமைகளின் விளைவாகவே ஒரு சமுதாயத்தில் பண்பாடு வளர்கிறது. ஆண் பெண், தந்தை மகன், கணவன் மனைவி, சகோ தரன் சகோதரி, உரிமை கடமை, ஆள்வோன் ஆளப்படு பவன் எனப் பல்வேறு நிலைகள் உள்ளமையால்தான் ஒரு சமு தாயமே செயல்படுகிறது.

இம்முறையில்தான் ஒரு சமுதாயத்தில் ஒற்றுமை வேற்றுமை களின் இடத்தை அறிகிறோம்.

இனி, ஒரு சமுதாயத்தின் பிற சிறப்பியல்புகளையும் காணலாம். அவற்றில் முதன்மையானது, அமைப்பு முறை என்பதாகும். ஒவ் வொரு சமுதாயத்திலும் மக்கள் தனிப்பட்ட, இணையற்ற அமைப்பு முறையில் ஒருங்கிணைந்து இருப்பர். அமைப்புநெறி இல்லா மக்களால் ஒரு சமுதாயத்தை உருவாக்க முடியாது. இனி அடுத்து வருவது உதவும்பாங்கு. சமுதாயத்தில் காணப்படும் தொழிற் பிரிவுகளால் மக்களிடையே கூட்டுறவும், உதவும் மனப்போக்கும் மிகுதியாகக் காணப்படுவதாக டர்கிஹிம் என்பார் குறிப்பிடுவார்.

வேற்றுமை, வேறுபாடுகளைவிடச் சமுதாயத்தில் ஒற்றுமையும், கூட்டுறவுந்தான் அதிகளவில் உள்ளன. சமுதாய வாழ்க்கை முறை ஒருவருக்கொருவர் உதவும் மனப்பான்மையைச் சார்ந்தே உள்ளது.

சமுதாய அமைப்பு முறையில் நாம் காணும் இன்னுமொரு முக்கிய இயல்பு, ஒன்றையொன்று சார்ந்து இருக்கும் நிலையாகும். மனிதன் தனித்த வாழ்வில் மனநிறைவோ மகிழ்வோ கொள்ள முடியாது. ஆதலின், அவனுக்குச் சமுதாயம் தேவைப்படுகிறது. சமூகநிலை காரணமாக அவன் சமுதாயத்தில் இருக்கின்றான். எனவே, சமுதாயத்தில் இருக்கும் மக்கள் அனைவரும் அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்து மனநிறைவு கொள்ள வேண்டுமெனில் ஒருவரையொருவர் சார்ந்தே வாழவேண்டும். ஒரு கையினால் ஓசையெழுப்ப முடியாது என்பது இங்கு முற்றும் பொருந்தும்.

இனி நாம் சமுதாயம் என்பதற்கும் கூட்டுக்குழு (Association) என்பதற்கும் இடையே காணப்படும் வேற்றுமைகளைக் காணலாம்.

**1. சமுதாயம் என்பது சமூக உறவுகளின் முறைமையாகும். ஆனால், கூட்டுக்குழு என்பது மக்களின் கூட்டுப்பிரிவாகும்.**

**2. கோட்பாட்டளவிலான ஒன்றே சமுதாயம்; ஆனால் கூட்டுக்குழு என்பது நிறுவப்படுவதாகும்.**

**3. சமுதாயம் பெரும்பாலும் நிலையானது; கூட்டுக்குழு பொருளியலானது.**

**4. சமுதாயம் இயற்கையானது; கூட்டுக்குழு தற்காலிகமானது.**

**5. ஒற்றுமையும் வேற்றுமையும் சமுதாயத்தில் உண்டு; ஆனால் கூட்டுக்குழு என்பது கூட்டுறவை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது.**

**6. ஒரு சமுதாயம், அமைப்பு முறையில் இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை; ஆனால் கூட்டுக்குழுவோ அமைப்பு முறையில் இருக்க வேண்டும்.**

**7. உயர்வுநிலை மற்றும் உணர்வுநிலை அற்றது ஆகிய எல்லாவகை உறவுகளையும் சமுதாயம் அறிந்து கொள்ளும்; ஆனால்,**

கூட்டுக்குழுவின் அடிப்படை உணர்வுநிலை சிந்தனையின் பாற்பட்டதாக இருக்கும்.

8. சமுதாயத்தின் நோக்கங்களை முழுமையாகத் தீர்மானிக்க முடியாது; ஆனால், கூட்டுக்குழுவின் நோக்கங்கள் முன்னரே தீர்மானிக்கப்படும்.

9. சமுதாயம் தவிர்க்க முடியாதது; கூட்டுக்குழு விருப்பத்தின் வழிப்பட்டது. தன்னிச்சையானது.

10. சமுதாயத்தின் முடிவு அதனுள்ளே அமைந்திருக்கும்; ஆனால், கூட்டுக்குழு வெறும் வழிகளேயாகும்.

**பொதுக் குழுமம்** (Community):

பொதுக்குழுமம் பற்றிய விளக்கங்களைச் சமுதாயத் தத்துவ வாதிகள் அளித்துள்ளனர். சமூக உயிரினங்களின் தொகுதிதான் பொதுக்குழுமம் ஆகும். ஒரு பொதுவான வாழ்க்கை முறையைப் பின்பற்றி வரும் கூட்டமே இது. எண்ணற்ற வகைகளிலிருந்தும், பல்வேறான உறவுகளிலிருந்தும் கிடைக்கப்பெறும் பொது வாழ்வை அடிப்படையாகக் கொண்டுதான் பொதுக்குழுமம் அமைக்கப்படுவதாக ஜின்ஸ்பர்க் குறிப்பிடுகிறார். எந்த ஒரு சிறிய அல்லது பெரிய பிரிவில் அல்லது தொகுதியில் அதன் உறுப்பினர்கள் குறிப்பிட்ட நன்மைக்காக வாழாமல் பொதுவாழ்வின் அடிப்படைகளுக்காக வாழ்கின்றார்களோ, அந்தப் பிரிவே பொதுக்குழுமம் எனப்படும் என்கிறார் மெகவியர். பொதுக்குழுமம் என்பது சமூக வாழ்வின் பல்திறக்கூட்டின் தொகுதி என்பார் ஜி.டி.எச்.கூல் என்பவர். அப்பல்திறக்கூட்டில் எண்ணற்ற மனிதர்கள் சமூக உறவின் அடிப்படையில் ஒன்றாக வாழ்வர். பொதுவான மரபுகளும், பழக்க வழக்கங்களும் அவர்களை இணைக்கும்.

ஒரு பொதுக்குழுமத்தில் காணப்படும் அடிப்படைக் கூறுகளாவன:

1. மக்களின் கூட்டத்தொகுதி, 2. குறிப்பிட்ட இருப்பிடம், 3. பொதுக்குழும உணர்ச்சி வெளிப்பாடு, 4. பொதுவாழ்வு, 5. தன்னியல்பாகவே தோன்றுவது, 6. குறிப்பிட்ட பெயர், 7.மனஞ் சார்ந்த வாழ்வு.

இனி, சூழ்வட்டாரம் (Neighbourhood) என்றால் என்ன? சூழ் வட்டாரம் என்பது அருகிலுள்ளோர், அண்டை வீட்டார் முதலி யோரைக் கொண்ட கூட்டமாகும். இதனை மிகச் சாதாரணமான பொதுக்குழுமம் என்கிறார் மெக்வியர். சமுதாயத்தில் குடும்பத் திற்குப் பின் சமூக முக்கியத்துவம் பெறுவது இச்சூழ்வட்டாரந்தான். இதில் உள்ளூருக்குரிய ஒற்றுமை உணரவுதான் அதிகம் காணப்படும். எனவே பொதுக்குழுமத்தில் குறிப்பிட்ட அங்கம் அல்லது பகுதிதான் சூழ்வட்டாரமாகும். ஒரு பொதுக் குழுமத்தில் பல சூழ்வட்டாரங்கள் இருக்கும். கிராமப்புறங்களில் இவற்றின் வலிமைக்கு மிகப் பெரிய அளவில் முக்கியத்துவம் தரப்படுகிறது. அங்கு அண்டை வீட்டாரிடம் மக்கள் ஆழமான, நெருக்கமான உறவு கொண்டிருப்பர். நகரங்களில் இதன் முக்கியத்துவம் குறைந்தே காணப்படும். சென்னை, டில்லி, பம்பாய், கல்கத்தா போன்ற மாநகரங்களில் அண்டை வீட்டில் வாழ்வார் யார் என்பது கூடத் தெரியாத நிலையே காணப்படும். நகரங்களில் அண்டை வீட்டாரிடம் உறவு குறைந்திருப்பதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. இடம்மாறிச் செல்லும் மக்கள் தொகை, பயணம், தகவல் தொடர்பு ஆகியவற்றின் முன்னேற்றம், தனித்துவம், பொருளியல் வாழ்வு, வாழ்வின் வேகம் ஆகியவை காரணங் களாகக் கூறப்படுகின்றன.

இனி பொதுக்குழுமத்திற்கும் சூழ்வட்டாரத்திற்கும் இடையே காணப்படும் வேற்றுமைகளைக் காணலாம்.

1. **பொதுக்குழுமம் மிகவும் பரந்தது; சூழ்வட்டாரம் குறுகியது.**
2. **தனிப்பட்டவரின் தொடர்பு விரிந்து இருக்கும்; சூழ்வட்டாரத்தில் தனிப்பட்ட தொடர்பு குறுகியதாய் இருக்கும்.**
3. **பொதுக்குழுமம் என்பது சமுதாயத்தின் ஒரு தொகுதியாகும்; ஆனால் குழிவட்டாரம் பொதுக்குழுமத்தின் ஓர் அங்கமாகும்.**
4. **பொதுமை உணர்ச்சியே முக்கியத்துவம் பெறும்; உள்ளூர் ஒற்றுமையே சூழ்வட்டாரத்தில் முக்கியத்துவம் அடையும்.**
5. **பொதுக்குழும உணர்ச்சி வெளிப்பாடு, குறிப்பிட்ட இருப்பிடம், பொது வாழ்வு போன்றவையால் தோன்றும். சூழ்வட்டாரத்தில் அண்டை வீட்டுறவு என்பது குடியிருக்கும் வீட்டைக் கொண்டே அமைகிறது.**

6. **பொதுக்குழும உணர்ச்சி வலிமையானது; சூழ்வட்டார உணர்வு சற்று வலிமை குறைந்தது.**

7. **பொதுக்குழுமம் என்பது கட்டுப்படுத்தப்பட்டதும் அமைப்பு ரீதியானதுமாகும். அமைப்பு என்பதைச் சூழ்வட்டாரத்தில் காணமுடியாது.**

**பொதுக்குழுமத்தின் இயற்கை அடிப்படைகள்**

சமுதாயம் என்பது இயற்கையை அடிப்படையாகக் கொண்டது என அனைவரும் கூறுவர். ஏதோ ஒரு வகையில் சமூக ஒற்றுமையைத் தோற்றுவிப்பதே மனிதனின் அடிப்படை இயல்பாக இருந்துள்ளது. பசியைப் போக்குவதற்கும், இயற்கைச் சீற்றம், பகைவர்களிடமிருந்து தற்காத்துக் கொள்வதற்கும் தனிமனிதனுக்குக் கூட்டுறவு முயற்சி அவசியமாகிறது. கூடி வாழ வேண்டும் என்ற எண்ணம் மனிதனுக்கு இயற்கையாகவே உள்ளது. மேலும், பொதுக் குழுமத்தின் மற்றொரு அடிப்படை, மரபாகும். மரபு, பழக்க வழக்கங்களின் தாக்கத்தை மனிதனுடைய செயற்பாடுகளில் காணலாம். இம்மரபுகளும், பழக்கவழக்கங்களும் மனிதனுக்கு இயற்கையாகவே அமைந்துவிடுகின்றன. பறவைகள் தமக்கு ஏற்றவாறு எவ்வாறு கூடுகளை அமைத்துக் கொள்கின்றனவோ, அவ்வாறே மனிதர்களும் தங்களுக்கு ஏற்ற மரபு, சட்டதிட்டம், அரசின் அமைப்புகளை இயற்கையாகவே அமைத்துக் கொள்கிறார்கள்.

அடுத்து, பொதுக் குழுமத்தின் அடிப்படையாகக் கூறுவது சமூக ஒப்பந்தக் கோட்பாடேயாகும். சமுதாயத் தத்துவ இயலில் இக்கோட்பாடு மிக முக்கிய இடம் பெறும். பிளேட்டோவின் ‘குடியரசு’ நூலிலும் இக்கோட்பாடு பற்றிய குறிப்பு வருகிறது. ஆனால், ஹாப்ஸ் என்பவர்தான் இதற்குத் தத்துவ வடிவம் அளித்து விளக்கமும் தந்தவர். இயற்கையில் மனிதர் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்ளும் குணத்தோடு ஆதிக்கப் போர் செய்பவராகவே இருந்தனர். ஆனால், அவர்களின் வலிமை சரிசமமாக இருந்ததன் காரணமாக அவர்கள் தமக்குள் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளவும் விரும்பினார்கள். அந்த அடிப்பையில்தான் சமூக ஒப்பந்தம் என்பது ஏற்பட்டதாக ஹாப்ஸ் தெரிவிக்கின்றார். ஹாப்ஸின் கோட்பாட்டைச் சற்று மாற்றியமைத்து ஸ்பினோசா, லாக் ஆகியோர் கருத்துரைத்துள்ளனர். ரூஸோவும் சமூக ஒப்பந்தத்தைப்

பற்றிக் கூறியுள்ளார். இக்கோட்பாடு பற்றி விரிவாக அடுத்த இயலில் காணலாம்.

பொதுக்குழுமத்தின் அடுத்த அடிப்படை உயிரியக்கவியலான ஒற்றுமை என்பதாகும். மனித சமுதாயம் உயிரியக்கத்திற்கு ஒப்பாகச் சொல்லப்படுவதுண்டு. இக்கருத்தைப் பிளேட்டோ தம்முடைய நூலில் விவாதித்துள்ளார். மேலும் இதை விரிவாக ஹெர்பட் ஸ்பென்சர், ஷாபில் ஆகியோரும் ஆராய்ந்துள்ளனர். இவர்கள், மனித சமுதாயம் என்பது மனித உடலமைப்பைப் போன்றது என்பார்கள். மேலும், சமுதாயம் வெறும் இயந்திரம் போன்றில்லாமல் உயிரிக்கம் போன்று செயல்படுகிறது. உயிரியக்கம் இயற்கையாய் இருப்பதைப் போன்றே சமுதாயமும் இயல்பாய் உள்ளது என்று கூறலாம்.

கூட்டுச் செயல்களும் பொதுக்குழுமத்தின் முக்கிய அடிப்படை யாகும். மக்கள் தங்களுக்குள் ஒன்றுபட்டு, முடிவெடுத்து அதன்மூலம் கூட்டுச் செயல்புரிவதே அமைப்பு வழியில் இருக்கும் சமூக ஒற்றுமையாகும். ஒரு சனநாயக அரசாங்கத்தைக்கூட இம்முறையில் நாம் விளக்கலாம். மேலும், பொதுவிருப்பக் கோட்பாட்டை அடிப் படையாகக் கொண்டும் பொதுக்குழுமம் உருவாகிறது எனலாம். இக்கோட்பாட்டை ரூஸோவே அறிமுகப்படுத்தினார். பொது விருப்பம் என்பது மக்களாட்சியில் நடைபெறும் பொதுத்தேர்தலில் வாக்குரிமையளிப்பதில் வெளிப்படுகிறது. வாக்குச்சீட்டு முறை யிலும், கலந்து ஆலோசித்தல் முறை, பொதுவிருப்பத்தை வெளிப் படுத்துவதில் மேலும் வலிமை வாய்ந்தது என்கிறார் பாசன்ஹட் என்பவர். எனவே, ஒரு பொதுக்குழுமத்தில் மக்களின் பொதுவிருப் பம் என்பது கூட்டுச் செயல்களுக்கு அடிப்படையாக விளங்குகிறது என்று கூறலாம். அனைவரின் குடும்ப வாழ்க்கையிலும் இதைக் காணலாம். எடுத்துக்காட்டாக, ஒரு குடும்பத்தினர் சுற்றுலா செல்லத் திட்டம் போடும்போது மகன் கொடைக்கானலுக்குப் போக வேண்டும் என்பான். மகளோ ஊட்டிதான் என்பாள். தாய் மதுரைக் குச் செல்லலாம் என்பாள். இவை தனி விருப்பங்களாகும். ஒவ் வொருவரின் விருப்பமும் தனிவிருப்பமாக இருப்பின் ஒவ்வொரு ஊருக்கும் தனித்தனியாகத்தான் போக வேண்டிவரும். குடும்பத்

தலைவன் இதில் முடிவெடுக்க வேண்டும். அவன் முடிவு எடுத்தாலும் அது அவனுடைய தனிவிருப்பமாகிறது. ஆதலின் யாவரும் கலந்து பேசி இக்கோடை விடுமுறை மதுரைக்கும் கொடைக்கானலுக்கும் செல்லலாம். அடுத்த விடுமுறையில் ஊட்டிக்குப் போகலாம் என்று முடிவு செய்வதே பொதுவிருப்பமாகும். இங்ஙனம் எடுக்கும் முடிவில்தான் மகிழ்ச்சியும் மனநிறைவும் இருக்கும். தனிவிருப்பம் ஒருவனுக்கே மகிழ்ச்சியை அளிக்கும். ஆனால் பொது விருப்பம் என்பது தொடர்புடைய அனைவருக்கும் ஆனந்தம் அளிக்கக்கூடியதாகவே அமையும். இவ்வகையில்தான் பொது விருப்பக் கோட்பாடு என்பது பொதுக் குழுமத்தின் அடிப்படையாகிறது.

இவ்வாறே 'பொது நன்மைக் கோட்பாடும்' பொதுக் குழுமத்தின் அடிப்படையாகிறது. இதன் தொடர்பாகத்தான் 'அதிக மகிழ்ச்சி அதிக அளவில்'என்னும் தொடரும் பெருவழக்காயிற்று. அதில் நன்மை என்பது எல்லோருக்கும் பொதுவாகும்; இதில் எல்லோருமே மகிழ்வர் என்பார் ஸ்பினோசா. பொது நன்மை எல்லோருக்கும் உரியதாகத் தான் இருக்கும். ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டுமே உரியது என்னும் நிலையில் பொதுநன்மை அமையாது; அமையவும் கூடாது. மிக அழகிய ஓவியமோ, அருமையான கவிதையோ பொதுவாக எல்லோரும் ரசிக்கக்கூடியதாகவே இருக்கும். அதுபோன்றுதான் பொதுநன்மை என்பது எல்லோருக்கும் நன்மை பயக்கக்கூடியதாய் இருக்கும். மனித வாழ்வில் காணப்படும் சுயநலம், தனித்துவம் ஆகிய இவற்றிற்கு நேர் எதிரானதுதான் இது.

பொது குழுமத்தின் இன்னுமொரு அடிப்படை 'ஆன்மீக ஒற்றுமை' என்பதாகும். இவ்வொற்றுமை மனிதர்களுக்கு மட்டுமே உரியது. விலங்காக, சிறு பூச்சியாக இருந்தாலும், அவையும் ஏதோவொரு உணர்வின் உந்துதலால்தான் செயலாற்றுகின்றன. அவ்வாறு செய்யும்போது அது அவற்றிற்குரிய பொது நன்மைக்காகவே அமையும். ஆனால், அவற்றை அவை அறிந்து கொள்வதில்லை. இது நன்மையா, தீமையா என்று தேர்வு செய்து செயலாற்றுவதில்லை. எனவே, அவற்றின் உள்ளுணர்ச்சி பார்வையற்றது எனலாம். ஆனால் மனிதர்களின் உணர்ச்சிகள் குருடாக

இருப்பதில்லை. அப்படி இருக்கும் உணர்ச்சிகளால் பிரிவினை தான் தோன்றுமே தவிர ஒற்றுமை நேராது. மனிதன் தன்னுடைய உணர்வுகளை அறிந்து கொள்கிறான். அதனால்தான் எது நன்மை என்று ஆராய்ந்து அதனை அடைய முயல்கிறான். இவ்வாறே ஆன்மீக ஒற்றுமை ஏற்படுகிறது.

எனவே, பொதுக்குழுமத்தை இயற்கையான - மரபு வழியிலான - சமூக ஒப்பந்தக் கோட்பாடான - உயிரியக்கலியலான - கூட்டுச் செயலான - பொதுவிருப்பக் கோட்பாடான - பொதுநன்மைக் கோட்பாடான - ஆன்மீக ஒற்றுமையான இயல்பு என்று எட்டாக வகைப்படுத்தலாம்.

இனி சமுதாயம் என்பதற்கும் பொதுக்குழுமம் என்பதற்கும் இடையேயான வேறுபாடுகளைக் காணலாம்.

**1.** **சமுதாயம் என்பது சமூக உறவுநிலைகளின் வலை; ஆனால், பொதுக்குழுமத்தில் தனிமனிதர்களின் பிரிவு அல்லது தொகுதி உள்ளடங்கியிருக்கும்.**

**2.** **சமுதாயம் கோட்பாட்டளவிலானது; பொதுக்குழுமம் நிறுவப்படுவது.**

**3.** **தீர்மானிக்கப்பட்ட புவியியல் வழிப்பட்ட பரப்பு என்பது சமுதாயத்திற்குத் தேவையில்லாதது; குறிப்பிட்ட புவியியல் வழிப்பட்ட பரப்பு பொதுக்குழுமத்திற்கு அவசியமாகும்.**

**4.** **ஒரு சமுதாயத்தின் ஒன்றுக்கு மேற்பட்ட பொதுக்குழுமங்கள் இருக்கும்; ஆனால் பொதுக்குழுமத்தில் ஒரு சமூக அமைப்பே இருக்க முடியும்.**

**5.** **பொதுக்குழும உணர்ச்சி வெளிப்பாடு என்பது சமுதாயத்திற்கு மிகவும் அவசியமானது அன்று; ஆனால் பொதுக்குழுமத்திற்கு அவ்வுணர்ச்சி வெளிப்பாடு மிகவும் அவசியமாகும்.**

**6)** **சமுதாயத்தின் பொது நோக்கங்கள் பரந்தும் முறைமைப்படுத்தப்பட்டும் இருக்கும். பொதுக்குழுமத்தில் அவ்வாறு இருக்காது.**

**7)** **சமுதாயத்தில் பொது நன்மை, பொது நோக்கம் என்பனவெல்லாம் தேவையில்லை; ஆனால், பொதுக்குழுமம் என்பது பொது நன்மை, பொது நோக்கம் ஆகியவற்றால் ஆக்கப்பட்டேயிருக்கும்.**

# IV. தனிமனிதனும் சமுதாயமும்

சமுதாயத் தத்துவத்தில் குறிக்கப்பெறும் மிக முக்கியமான கருத்துரை சமுதாயத்திற்கும் தனிமனிதனுக்கும் இடையே காணப் படும் உறவுநிலை பற்றியதாகும். இவ்வுறவு நிலை தொடர்பாகப் பல கருத்துவேறுபாடுகள் சொல்லப்படுகின்றன. ஆனால், மனித னுக்கும் சமுதாயத்திற்கும் இடையே மிக நெருக்கமான உறவு உள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வர். தனிமனிதனை விட சமுதாயம் முற்பட்டது. ஏனெனில், சமுதாயம் முற்றிலும் மனிதர்க்கே உரியதன்று. அதில் விலங்கினங்களுக்கும் இடமுண்டு. மேலும், தனிமனிதனைவிட சமுதாயம் நீண்ட நாள் நிலைப்ப தாகும். மனிதனைப்போன்ற கால எல்லை அதற்கில்லை. மனிதன் வருவான், இருப்பான், போவான்; ஆனால் சமுதாயம் என்று மிருக்கும். இருப்பினும், மனிதர்கள் இல்லாமல் சமுதாயம் என ஒன்றில்லை.

மனிதனே சமுதாயத்தை உருவாக்குகிறான். தனிமனிதனும் சமுதாயத்தை அமைக்க முடியும்; அதை இயக்க முடியும். ஆனால், சமுதாயந்தான் தனிமனிதனைப் பண்படுத்துகிறது. ஒரு குழந்தையின் தனித்தன்மை சமுதாயத்தில் காணப்படும் சமூக சூழ் நிலையைப் பொறுத்தே அமைகிறது. சமுதாயத்திலிருந்துதான் எல்லாவற்றையும் மனிதன் கற்றுக்கொள்கிறான். அறியும் ஆற்றல் என்பது அவனைச் சார்ந்தது. சமுதாயத்தில் அவனுடைய ஆன் மாவோ 'நான்' எனும் எண்ணமோ வளர அவனும் ஒரு மனிதன் என்ற நிலையை அடைகிறான். மேலும், ஒவ்வொரு சமுதாயத் திலும் தனி அமைப்புகள் இருக்கும். ஒவ்வொன்றும் மனிதனைத் தன் வழிகளிலே இயக்க முயலும். இம்முறையில் பார்த்தால்

தனிமனிதனும் சமுதாயமும் வெவ்வேறான சார்பற்ற தொகுதி களாகத் தெரியும். ஆனால், இவற்றின் இருப்பும் வளர்ச்சியும் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கும்.

சமுதாயத்திற்கும் தனிமனிதனுக்கும் இடையே காணப்படும் உறவுநிலை குறித்துப் பல கோட்பாடுகள் சமுதாயத் தத்துவ இயலில் குறிக்கப்பெறும். இருப்பினும், அவற்றுள் முக்கியமாகக் கருதப்படுபவை மூன்றாகும். அவை: சமூக ஒப்பந்தக் கோட்பாடு, உயிரியக்கக் கோட்பாடு, உள்ளத்து வகைக் கோட்பாடு என்பன வாகும். இனி ஒவ்வொன்று பற்றியும் காண்போம்.

**சமூக ஒப்பந்தக் கோட்பாடு**

பதினேழாம் நூற்றாண்டில் தாமஸ் ஹாப்ஸ் என்பவர் தம்முடைய நூலான 'லிவியதான்' என்பதில் இக்கோட்பாட்டை மிகவும் வலியுறுத்தி எழுதியுள்ளார். பொறுப்பற்ற நிலை, விலங்கினக் குணம், சுயநலம் ஆகிய போக்குகளிலிருந்து தன்னைப் பாதுகாக்கும் பொருட்டே சமுதாயத்தை மனிதன் அமைத்துக் கொள்கிறான் என்று ஹாப்ஸ் அந்நூலில் வலியுறுத்து கிறார். எனவே, இது ஒரு வகையான ஒப்பந்தமாகிறது. தங்களுக்குள் செய்யப்படும் பரிமாற்றத்திற்குரிய பொருளாதாரத்தை அமைத்துக் கொள்ளும் பொருட்டுத் தீட்டிய செயற்கைத் திட்டமே சமுதாயம் என்று பொருளாதார அறிஞரான ஆதம் சுமித் கூறுகிறார். பிரெஞ்சு நாட்டுத் தத்துவ அறிஞரான ரூஸோ, இக்கோட்பாட்டை ஆதரித்தார். தனிமனிதர்கள் தங்களுக்குள் ஓர் ஒப்பந்தத்தை ஏற் படுத்திக் கொண்டு, தாமாகவே சமுதாயத்தை அமைத்துக் கொள் கிறார்கள் என்று ரூஸோ கருத்துரைத்தார். மேலும் இக்கோட் பாட்டை ஜான் லாக் மற்றும் ஹாப்ஹவுஸ் ஆகியோரும் ஆதரித்தனர்.

இக்கோட்பாட்டின்படி, மனிதர்கள் சுதந்திரமாகவும் சரிசமமாக வும் வாழ்கிறார்கள். சமுதாயம் தோன்றுவதற்கு முன்னரே தனி மனிதர்கள் இருந்தனர். அவர்கள் தாமே உடன்பட்டுச் சமுதாயத்தை அமைத்த பின்னர் அதற்கெனச் சில அதிகாரங் களையும் உரிமைகளையும் வழங்கினர். இம்முறையில் சமுதாயம் என்பது ஒரு செயற்கையான அமைப்பேயாகும். ஆனால்,

தனிமனிதனின் அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரமோ வலிமையோ இச்சமுதாயத்திற்கு இல்லை என்றே கூறலாம்.

இந்தச் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டினை மாக்வியரும், தற்காலச் சமூகவியல் அறிஞரும் மறுத்து இதை மாயத்தோற்றம் என்று வருணிப்பர். இக்கொள்கை வரலாற்று உண்மைகளிலோ, தருக்க அடிப்படையிலோ அமையவில்லை என்று அவர்கள் குற்றம் சாட்டினர். இக்கொள்கையின் கருத்தான சமுதாயத்தை விடுத்த தனிமனிதரும் உளர் என்பது ஏற்கத்தக்கது அன்று. மேலும், சமுதாயம் அமைவதற்கு முன்னரும் மனிதர் இருந்தனர் என்பதும் சரியானதன்று என்று அவர்கள் வாதிட்டனர். ஏனெனில், சமுதாயம் சார்ந்ததாக அமைப்பது என்பது மனிதனின் தனிச் சிறப்பியல்பின் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானதாகும். ஆதலின், சமுதாயத்தை விடுத்து மனிதன் இருப்பது என்பது சாத்தியமாகாது.

**உயிரியக்கக் கோட்பாடு**

இக்கோட்பாட்டின்படி, சமுதாயத்தின் கட்டமைப்பும் இயக்கமும் மனிதனின் உடலமைப்பை ஒத்த உயிரியக்கம் போல் இருக்கும். சமுதாயம் என்ற கூட்டமைப்பின் ஒரு கூறே தனிமனிதன். கூட்டுக் குழு, நிலையம் என்பவை நாடி போன்றவை. சமூகக் கட்டமைப்பை விலங்கின் உடலமைப்புடன் ஒப்பிடலாம் என்று ஸ்பென்சர் கூறு கிறார். விலங்கின் உடலமைப்பின் ஊட்ட வளம் போன்றே சமுதாயத்தில் தொழில், விவசாயம் ஆகிய முறைமைகள் உள்ளன. இதயம், நாடி, நரம்பு ஆகியவை போன்றே தகவல் தொடர்பு, போக்குவரத்து முறைகள் உள்ளன. நரம்பு மண்டல அமைப்புப் போன்ற அரசாங்க அமைப்பு உள்ளது என்று ஸ்பென்சர் இக் கோட்பாட்டை வலியுறுத்துகிறார்.

ஆனால், இந்தக் கொள்கை எதிர்ப்புகளுக்கு ஆட்பட்டது. தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் இடையேயுள்ள உறவு, உயிரணுவிற்கும் உடலுக்கும் இடையேயுள்ள உறவு போன்றது என்று கூறப்பட்டதே இக்கொள்கையின் மிகப்பெரிய குறையாகச் சுட்டிக்காட்டப்பட்டது. மனிதன் உணர்வுடையவன்.

அவனுக்கென்று மூளை உள்ளது; அதனைக் கொண்டு அவன் சிந்திக்கிறான். ஆனால், உடலில் உள்ள உயிரணுக்களுக்கு உணர்வுகள் இல்லை. உடலை விட்டு அவை தனித்த இருப்புநிலை கொள்வதுமில்லை. எனவே, சமுதாயத்தை மனித உடலமைப்புடன் ஒப்பிடுவதே தவறு என்று இக்கோட்பாட்டின் எதிர்ப்பாளர் கூறுகின்றனர்.

### 3. உள்ளத்துவகைக் கோட்பாடு

கருத்து முதற்கொள்கையினர் சமுதாயத்தை உள்ளம் அல்லது மனத்துடன் ஒப்பிட்டுக் கூறுவர். பிளேட்டோ 'சமுதாயம் என்பது பெரிய அளவிலான மனம்' என்கிறார். இக்கோட்பாட்டை கிரீன், பிராட்லி, பாசன்ஹிட், எமர்சன், வாக்னர், வுண்ட், தர்கிஹிம் ஆகியோர் ஆதரிப்பர். சமூக மனம் என்பது தனிமனிதனின் மனத்தைவிட உயர்ந்தது; சிறந்தது. உள்ளத்தியல் வாழ்வின் உயர்நிலை, உணர்வுகளின் கூட்டொருமையில்தான் காணப்படும். தனிமனித மனத்திலிருந்து நல்லனவற்றை எடுத்துக்கொண்டு மேலும் சிறப்பாக உயர்வதே சமூக மனமாகும். சமுதாயத்தின் நன்மைகளெல்லாம் இதிலிருந்துதான் வேர் விடுகின்றன. பொதுத் தொண்டு, பொது நன்மை என்பன சமூக மனத்தின் வெளிப்பாடே யாகும். எனவே தனிமனிதனின் நன்மைக்காக அவனுடைய மனம் சிந்திப்பதைப் போன்றே சமுதாய நன்மைக்கென்று சமூக மனம் சிந்திக்கிறது; செயல்படுகிறது. ஆகவே, சமுதாயத்தையும் மனத்தையும் ஒப்பிட்டுக் கூறலாம் என்று சமுதாயத் தத்துவ வாதிகள் எடுத்துரைப்பர்.

இனி, மனிதர்களுக்கும் சமுதாயத்திற்கும் இடையேயான உறவைப் பார்க்கும்போது சமுதாயத்தைச் சாரும் மனப்பாங்கின் வழிமுறைகளையும் நோக்க வேண்டும். சமுதாயஞ்சாரும் மனப் பாங்கு என்பது ஒரு சமூக வழிமுறையாகும். இதுகுறித்துப் பல அறிஞர்கள் கருத்துக் கூறியுள்ளனர். மரபுவழிப் பாணியைப் பின்பற்றும் மனித நடத்தைகளின் செயல்முறைகளே அவனைச் சமுதாயஞ்சார்ந்தவனாக்கும் வழிமுறை என்று வி. வி. அக்லோகர் விளக்குகிறார். தனிமனிதரிடையே காணப்படும் 'நாம்' என்னும் உணர்வும், ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டும் என்னும்

உணர்வும், ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டும் என்னும் விருப்பும், மனிதனைச் சமுதாயஞ்சார்ந்தவனாக ஆக்கும் என்று இ. ஏ.ராஸ் கூறுகிறார். மனித இனப் பொது நன்மையின் மீதுதான் சார்ந்து இருக்கின்றோம் என்னும் உணர்வினால் மக்கள் நடத்தைகளை மேற்கொள்கின்றனர். அதனால் சமூக சுயக்கட்டுப் பாடும், சமூகப் பொறுப்புணர்வும் ஏற்படுகின்றன என போக்கர்டன் என்பார் தெரிவிக்கிறார்.

எனவே, சமுதாயஞ்சாரும் மனப்பாங்கு என்னும் வழிமுறையால் தனிமனிதன் சமூக மரபுகளை ஒட்டி வாழ வேண்டும் என்பதை அறிந்து கொள்கிறான். சிறிய குழந்தைகளிடம் பார்த்துப் பின்பற்றுதல் என்னும் பழக்கத்தைக் காணலாம். இம்முறையில் தான் மரபுகள் தொடர்கின்றன. மேலும், மனிதன் இயல்பாகவே சமூக குணநலன் உடையவனாக இருக்கின்றான். தன்னைச் சுற்றி யிருக்கும் மக்கள் கூட்டத்தில் இயல்பாகவே தான் புகழப்பட வேண்டும் என்று அவன் விருப்பப்படுகிறான். அங்ஙனமே சமுதாயத்தின் பண்பாட்டைப் பின்பற்றி வாழவேண்டும் என்றும் எண்ணுகிறான். இவற்றிற்கெல்லாம் காரணம் அவனிடம் இருக்கும் சமுதாயஞ்சாரும் மனப்பாங்கேயாகும்.

இம்மனப்பாங்கினால் அவனுடைய சிறப்பியலான தனித்துவம் சமன் செய்யப்படுகிறது. ஏனெனில், தனித்துவத்தின் சமூகக்கூறு முக்கியமானதாகும். எனவே, சமுதாயஞ்சாரும் மனப்பாங்கினால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள அறிந்துகொள்கிறான். சமுதாயத்தின் நன்மையைக் கருதித் தன்னுடைய பொறுப்புணர்வு களையும் உணர்ந்து கொள்கிறான். அவனிடமுள்ள இம்மனப் பாங்கு பொதுக்குழும உணர்ச்சியை அவனிடம் வளர்த்துப் பிறருடன் கூடி இணைந்து செயலாற்றும் பாங்கையும் உணர்த்து கிறது.

மனிதனின் சமுதாயஞ்சாரும் மனப்பாங்கிற்குப் பல காரணங்கள் கூறப்படுவதுண்டு. அவற்றில் முதன்மையானது குடும்பமாகும். தனிமனிதனின் சமுதாயஞ்சாரும் மனப்பாங்கிற்கு அவனுடைய குடும்பம் என்னும் அமைப்பு பெரிதும் உதவுகிறது. குழந்தை தன் பெற்றோரிடமிருந்தும், உறவினர்களிடமிருந்தும்,

நண்பர்களிடமிருந்துமே நடத்தை முறைகளை அறிந்து கொள்கிறது. குடும்பச் சூழல்தான் ஒரு சிறுவனை வளர்க்கிறது. 'தாயைப் போல் பிள்ளை நூலைப் போல் சேலை' என்பார்கள். தன்னைச் சுற்றியுள்ளோரின் நல்ல பழக்கவழக்கங்கள் சிறுவனை நல்லவனாக வளர்க்கும். பிறரின் தீய பழக்கம் அவனை மாற்றும். எனவே, குடும்பம் மூலமாகத்தான் மரபுகளும் பழக்க வழக்கங்களும் நிலைநாட்டப்படுகின்றன. சிறுவயதில் குற்றம்புரிவோரை ஆராய்ந்தால் அவர்கள் வளர்ந்த குடும்பச் சூழலும் பெற்றோர் களின் நடத்தைகளுமே காரணமாக உள்ளமையை ஆய்வுகள் வெளியிடுகின்றன. சமூக உறவுநிலை தடைப்படும்போது குற்றவாளி உருவாகிறான்.

பிராய்ட், அட்லர் ஆகிய உளவியல் ஆய்வாளர்கள் சமுதாயத் தில் மனிதனின் நடத்தை, அவன் குடும்பத்தில் எவ்விதம் உள்ளதோ அவ்விதமே அமையும் என்பர். எடர்மன் என்னும் உளவியல் அறிஞர், எவனுடைய பெற்றோர் மனநிறைவுடன் இருக் கின்றாரோ அவனுடைய திருமணமே வெற்றியுடன் அமையும் என்கிறார். ஆக, ஒரு மனிதனின் சமுதாயஞ்சாரும் மனப்பாங்கின் வளர்ச்சி முறைக்குக் குடும்பம் ஒரு தூண்டுகோலாக உள்ளது என்பது தெளிவாகும்.

இனி, அம்மனப்பாங்கிற்கான வேறு சில காரணங்களையும் காணலாம். சமுதாயஞ்சாரும் மனப்பாங்கிற்குக் குடும்பம் மட்டுமே காரணமாகாது. நிலையங்கள், கூட்டுக்குழுக்கள் ஆகியனவும் மனிதனின் முன்னேற்றத்திற்குக் காரணமாக அமையும். குழந்தை வளர்ந்த பின் வீட்டைவிட்டு வெளியில் விளையாடச் செல்லும். அப்போது அச்சிறுவனுடன் விளையாடும் ஏனைய சிறார்களின் நடத்தைகளின் தாக்கம் அவனிடம் படியும். பள்ளிக்கும் கல்லூரிக்கும் செல்லும்போது கல்வியால் மட்டுமன்றி, ஆசிரியர், மாணாக்கர் ஆகியோராலும் மாறுபாடு தோன்றக்கூடும். அடுத்து வேலைக்குச் செல்லுமிடத்தில் சூழலாலும் உடன் பணியாற்றுபவ ராலும் விளைவுகள் ஏற்படும். பிறகு திருமணம் மூலம் கணவனால் மனைவியிடமும், மனைவியால் கணவனிடமும் சில மாறுதல்

நேரலாம். எனவே, தனிமனிதனின் சமுதாயஞ்சாரும் மனப்பாங்கிற்கு ஒவ்வொரு சூழலும் துணைபுரிகிறது.

இச்சமுதாயஞ்சாரும் மனப்பாங்கின் தேவை தனிமனிதனின் முன்னேற்றத்திற்கு அவசியமாகிறது. அம்மனப்பாங்கினால்தான் அவனுடைய நடத்தைகள் நெறிப்படுத்தப்படுகின்றன. ஒருவித சமூக அச்சமே அங்ஙனம் நெறிப்படுத்துகிறது. சமுதாயத்தைப் பற்றிக் கவலைப்படாதவனே குற்றங்கள் புரிகிறான். மேலும் தனி மனிதனின் சிறப்பியல்களின் தனித்துவத்திற்கு இம்மனப்பாங்கு ஒரு வழிமுறையாகிறது. மரபு வழியின் முக்கியத்துவம் இதனால் தான் உணரப்படுகிறது. இச்சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும், மனித இயல்புகளின் வளர்ச்சிக்கும் சமுதாயஞ்சாரும் மனப்பாங்கே வாய்ப்பாகிறது என்று டேவிஸ் குறிப்பிடுவார். எனவே, சமுதாயத்திற்கும் மனிதனுக்கும் இடையே காணப்படும் உறவுநிலையில் மனிதனிடம் காணப்படும் சமுதாயஞ்சாரும் மனப்பாங்கு ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது என்று உறுதியாகக் கூறலாம்.

இனி, சமுதாயமும் மனிதனும் என்னும் உறவுநிலையில் மனிதனின் தனிச்சிறப்பு அல்லது தனிமனிதப் பண்பியல்புகளின் தொகுதியின் பங்கையும் காணவேண்டும். சாதாரணமாக மனிதனின் தனிச்சிறப்பு நிலை என்று கூறும்போது அவனுடைய புறநடத்தைகளைப் பற்றியே இருக்கும். 'அவன் நன்றாக உடுத்தியுள்ளான்', 'அழகாக இருக்கிறான்', 'அவன் பாணி தனிப்பட்டது' என்றெல்லாம் கூறுவர். ஆனால், தத்துவ இயல் அவனுடைய அகத்தைப் பற்றியே கூறும். அதாவது உள்ளார்ந்த ஆன்மாவின் பண்பியல்புகளைக் குறிக்கும். ஆனால் உளவியல் அகம், புறம் ஆகிய இரண்டனுடன் உள்ளத்தையும் குறிக்கும்.

மனிதனின் தனிச்சிறப்புப் பண்பியல்களை ஆங்கிலத்தில் 'பர்சனாலிட்டி' என்பர். இது 'பர்சனா' என்னும் இலத்தீன் சொல்லை அடியாகக் கொண்டது. நாடகத்தில் தங்களுடைய தோற்றத்தை மாற்றும்போது முகத்தை மறைக்கப் பயன்படுத்தும் பொருளையே 'பர்சனா' என்னும் இலத்தீன் சொல் குறிக்கும். ஆனால், ரோமானியர்களின் காலத்தில் இது ஒரு குறிப்பிட்ட சிறப்பியல்பு

அல்லது பண்பைக் குறித்தது. இவ்விளக்கந்தான் தற்போதும் நடைமுறையில் உள்ளது. எனவே, தனிச் சிறப்பியல்பு என்பது நிலையானதன்று; சூழலுக்கேற்ப மாற்றிக்கொண்டு விரைந்து செயற்படும் குணநலனே தனித்துவமான சிறப்பியல்பு என்று கொள்ளப்படும். இச்சிறப்பியல்பு மனிதனின் நடத்தை, ஒழுக்கம், செயற்பாடு, இயக்கம் ஆகியவற்றில் தொடர்பாகவே அறுதியிடப் படும். அது சூழ்நிலையுடன் இயைந்துபோகும் வழிமுறையேயாகும். இம்முறையில்தான் மனிதன், தன்னுடைய புறச்சூழலுடன் ஒத்துப் போகிறான். தனிமனிதனின் கட்டமைப்பு, ஒழுக்கமுறை, நடத்தை, விருப்பம், நிலை, ஆற்றல் ஆகியவற்றின் ஒற்றுமையே அவனுடைய தனிச் சிறப்பியல்பை விளக்கக்கூடிய உயர் குண நலன்கள் என்று முன் (Munn) என்னும் அறிஞர் விளக்குகிறார்.

ஒரு மனிதனை இன்னொரு மனிதனிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது இச்சிறப்பியல்பேயாகும். இது தனி அமைப்புப் போன்று அகம் மற்றும் புறச்செயல் இரண்டையும் உள்ளடக்கிய தெனச் சிலர் கூறுவர். வெளிப்புறத்தோற்றம், விருப்பம், ஆற்றல், குணம் ஆகியனவும் இதில் அடங்கும். தன்னுடைய சூழ்நிலையுடன் தனியொருவன் செயற்படும்போது விளைவதே இத்தனிச் சிறப்பியல்பாகும். எனவே, இச்சிறப்பியல்பில் ஒழுக்கம், விருப்பம், நிலை, ஆற்றல், நடத்தைப் பாணி ஆகிய அனைத்தும் அவன் சூழ் நிலையுடன் தொடர்புகொள்ளும்போது வெளிப்படும்.

தனிச் சிறப்பியல்பின் வளர்ச்சிக்கு இல்லம், பள்ளி, சமுதாயம் என மூன்று முக்கியக் காரணங்களைத் தத்துவவாதிகள் எடுத் துரைப்பர்.

மனிதனின் தனிச்சிறப்பியல்பை அமைக்க அவன் குடியிருக் கும் இடமான இல்லமும் அதன் சூழலும் முக்கியக் காரணமாக அமையும். ஒரு வீட்டிலிருக்கும் குழந்தைக்கும் பெற்றோர்களுக்கு மிடையேயான உறவு மிகவும் நெருக்கமாக இருக்கும். அவர்களின் நடத்தைகளின் தாக்கமே குழந்தைகளின் மீது படியும். ஒவ்வொரு குடும்பப் பழக்கவழக்கங்களின்படியே குழந்தைகளின் செயல்கள் அமைகின்றன. இந்தியாவில் பிறந்த குழந்தையும் மேலைநாட்டில் பிறந்த குழந்தையும் நடத்தையில் வேறுபடும். இந்தியப்பாரம்பரியம்

என்பது இங்கு பிறக்கும் குழந்தைகளின் குருதியுடன் கலந்து விடுகிறது. மேலைநாட்டு கலாச்சாரத்தின் பாதிப்பு அந்நாட்டின் குழந்தைகளிடம் தெரியும். இங்கு நாம் குழந்தை என்று குறிப்பது வளர்கின்ற சிறார்களையே.

இல்லத்தைப் போன்றதுதான் பள்ளிக்கூடமும். ஒருவனின் தனிச்சிறப்பியல்புகளை ஆசிரியர்களும், உடன்பயில் மாணவர்களும் நெறிப்படுத்துவர். வீட்டில் தந்தையைப் போல் பள்ளியில் ஆசிரியர் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்வர். ஆசிரியரின் சிறப்புத் தன்னியல்பு, மாணவர்களிடம் தாக்கத்தை உண்டு பண்ணும். ஆசிரியரின் நடத்தை, பாணி, தன்னியல்புக் குணங்களை மாணவரும் பின்பற்றுவர். எனவே, ஆசிரியர் உதாரண புருஷர்களாக இருத்தல் வேண்டும். இங்ஙனமே உடன் பயிலும் மாணவர்களின் தன்னியல்புக் குணங்களும் அவர்களைத் தாக்கும். சிறப்புமிக்க மாணவர்களைப் பார்த்து ஏனைய மாணவர்களும் அவர்களைப் போன்று சிறப்புப் பெற வேண்டும் என்று விரும்புவர். அவ்விருப்பங்களே அவர்களின் ஒழுக்கம், நடத்தை முதலியவற்றை மாற்றி, அவர்களிடம் தனிச் சிறப்பியல்புகளைத் தோற்றுவிக்கும்.

இனி, ஒரு சமுதாயம் எப்படி மனிதனின் தனிச்சிறப்பியல்புகளை வளர்க்கிறது என்று காணலாம். முன்னரே கண்டவாறு சமுதாயம் என்பது சமூக உறவு நிலைகளின் ஒரு வலையேயாகும். இவ்வுறவு நிலைதான் மனிதர்களை ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ள வைக்கிறது. இங்ஙனம் மனிதர்களிடம் காணப்படும் தொடர்புகள் அவர்களிடம் காணப்படும் தனிச் சிறப்பியல்புகளை மாற்றியமைத்து வளர்க்கின்றன. சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் குறிப்பிடத்தக்க அந்தஸ்தும் அதற்குரிய கடமையும் உள்ளன. எனவே, சமுதாயத்தில் மனிதர்களின் பங்கும் செயல்களும் அவர்களின் நிலையைப் பொறுத்தே அமையும் எனலாம். இம்முறைமைதான் மனிதனின் நடத்தைகளைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்துகிறது. அன்றியும், மரபு, பழக்கவழக்கம், நீதி, சட்டம் போன்றவையும் மனிதனுக்குச் சமூகக் கட்டுப்பாடாக விளங்குகின்றன. மேலும் இவையெல்லாம்

மனிதனின் வாழ்க்கைப் பாணியைத் தீர்மானிக்கக் கூடியனவாய் உள்ளன. ஒரு சமுதாயத்தில் மனிதன் தன்னிச்சையான முறையில் செயல்படமுடியாது. சமுதாயத்தின் சட்ட திட்டங்களை மீறுவோர் தண்டனைக்குள்ளாவர். இத்தண்டனைக்குத்தான் மக்கள் அச்சப் படுவர். நரக அச்சத்தைவிட இந்த அச்சத்திற்குத்தான் வலிமை அதிகம். எனவே, சமூகச் சட்டங்கள் மனிதனின் வாழ்க்கை முறையையும் நடத்தைகளையும் நெறிப்படுத்துகின்றன எனலாம். இவ்விதத்திலும் மனிதனின் தனிச் சிறப்பியல்புகள் வளர்கின்றன. மேலும், சமுதாயத்தில் நிலவும் சமூக நடத்தைப் பாணிகளையே தனிமனிதனும் பின்பற்றுகிறான். இதுவும் அவனுடைய தனிச் சிறப்பியல்புகளை வளர்க்க உதவுகின்றது.

எனவே, சமுதாயத்திற்கும் மனிதனுக்குமிடையே காணப்படும் உறவுகள் சமுதாயஞ்சாரும் மனப்பாங்கின் வழிமுறைகளாலும், மனிதனின் தனிச்சிறப்பியல்புகளாலும் உறுதி செய்யப்படு கின்றன. என்றென்றும் நிலைத்திருக்குமாறு இவ்வுறவுகளால் மனிதனும் சமுதாயமும் நன்னெறிப்படும் என்பதுறுதி.

## V. குடும்பம்

சமுதாயத்தில் ஒரு முக்கிய அங்கமாக இருப்பது அமைப்புகள் என்னும் நிலையங்களாகும். சமூக அமைப்புகளான குடும்பம், திருமணம், கல்வி நிலையம், அரசியல் அமைப்பான அரசு, பொரு ளாதார அமைப்பான தொழில் நிறுவனம் ஆகியன சமுதாயத்தின் அடிப்படைகளாகும். ஒரு சமுதாயத்தின் இயக்கத்திற்கு இவை யெல்லாம் மிகவும் இன்றியமையாதவை. சமுதாயத் தத்துவ இயலில் இவ்வமைப்புகளைப் பற்றி விரிவாக எடுத்துக் கூறப் பட்டுள்ளது. அவற்றைப் பற்றிப் பார்ப்பதற்குமுன் அமைப்பு அல்லது நிலையம் என்றால் என்ன என்பது குறித்த விளக்கங் களை முதலில் காணவேண்டும்.

சமுதாயத்திற்கு நன்மை பயப்பதற்காகக் குறிப்பிட்ட சில நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுவதே அமைப்பு அல்லது நிலையமாகும். குறிப்பிட்ட நலத்தை அல்லது பொதுநலத்தைக் குறிப்பிட்ட முறையில் அடைய முயற்சிக்கும் உறுதியான அமைப்பு முறையே அமைப்பு அல்லது நிலையம் எனப்படும் என்று மெக்வியர் குறிப்பிடுகிறார். இவ்வாறே, சமூக அமைப்பு என்பது ஒரு சமுதாயத்தின் கட்டமைப்பு என்றும், அது மக்களின் தேவைகளை நிலைநாட்டப்பட்ட நடைமுறைகள் மூலம் நிறைவு செய்யும் அமைப்பு என்றும் போகர்டஸ் விளக்கம் தெரிவிக்கிறார். சம்னர் அமைப்பு என்பது கருத்து அல்லது கோட்பாடும் கட்டமைப்பும் கொண்ட ஒன்று என்பார்.

மேலும் சமூகமரபு, கோட்பாடு, சடங்குமுறை ஆகியவற்றின் அமைப்பு முறை வடிவமே அமைப்பு அல்லது நிலையமாகும். இதன் இயல்பு சமுதாயத்தையும் மக்களையும் சில குறிக்கோள்களால்

இணைப்பதாக அமைந்து, சமுதாயத்தின் செயலாக்கங்களுக்கு அடிப்படையாக இருக்கும். எனவே, ஓர் அமைப்பில் உறுதியான குறிக்கோள்கள் இருக்கும். ஒவ்வொரு அமைப்பிற்கும் குறிப்பிட்ட சட்டதிட்டங்கள் இருக்கும். அச்சட்டங்களுக்கு மக்கள் பணிந்தே நடக்க வேண்டும். மேலும் இச்சமூக அமைப்புகள், மரபு மற்றும் கோட்பாட்டின் அடிப்படையில் சில நியதிகளைக் கொண்டே செயல்படும். மக்களின் கூட்டுச் செயற்பாடுகளின் மீது இது சார்ந் திருக்கும். ஆனால் மக்களைக் கட்டுப்படுத்தும் வழிமுறையாகவே அமைப்பு அமைந்திருக்கும். மக்களை நெறிப்படுத்தும் வேறு எந்தச் சமூகக் கட்டுப்பாடுகளைவிட இதுவே ஆற்றல்மிக்கதாக இருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக, சமுதாயத்தில் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்காகவே அமைப்பு அல்லது நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

அமைப்பின் இன்றியமையாமையைச் சமுதாயத் தத்துவவாதி களும் சமூகவியலறிஞர்களும் எடுத்துரைத்துள்ளனர். பண்பாட்டின் கூறுகளை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறை மக்களுக்குச் சமூக அமைப்புகளே மாற்றுகின்றன என்பார் மெக்வியர். இவையே மனித இனத்தின் நடத்தைகளை ஒன்று படுத்துகின்றன. சூழ்நிலைக்கேற்ப மனிதர்களின் நடத்தைகளைக் கட்டுப்படுத்தி அவர்களை நெறிப்படுத்துகின்றன. ஒரு சமுதாயத் தில் அறக்கோட்பாடு, அறிவு நடத்தையின் வடிவம் ஆகியவற்றில் தொடர்ச்சியை நிலைநாட்டும் வழிமுறையாக இவை செயல்படு கின்றன. ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறை மக்களுக்கு அவர்களுடைய பிரச்சனைகளின் தீர்வுகளை வழங்கும் இடை நிலைச் சாதனமாகவும் அமைப்புகள் விளங்கின. சமுதாயத்தில் மனிதர்களுக்கு நல்வழி காட்டி நெறிப்படுத்தும் நிலையங்களாக இருந்த இவை அடிப்படையில் ஒருங்கிணைந்து செயலாற்ற மக்களைக் கட்டாயப்படுத்தும் வழிமுறைகளாகவும் இருந்தன.

சமுதாயத்தில் பல அமைப்புகள் உள்ளன. அவை பல வகையாகவுள்ளன. ஒரு சமுதாயத்தின் சமூக, அரசியல், பொருளா தார அமைப்புகள் முக்கியமானவையாகும். சமூக அமைப்பில் குடும்பம், திருமணம், கல்விநிலையம் முதலியனவும், அரசியல்

அமைப்பில் அரசாங்கமும், பொருளாதார அமைப்பில் நிதி, தொழில் நிலையங்களும் அடங்கும். இவற்றில் சமூக அமைப்பு களான குடும்பம் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

குடும்பம் பற்றிய பல விளக்கங்கள் சமுதாயத் தத்துவவாதி களாலும் சமூகவியலறிஞர்களாலும் தரப்பட்டுள்ளன. குடும்பம் என்னும் சமூக அமைப்பு, உலகில் சமுதாயம் தோன்றிய காலத்தி லிருந்தே உள்ளது. குடும்பம் என்பது பெற்றோர்களுக்கும் குழந்தை களுக்குமிடையேயான உறவுகளைக் குறிக்கும் முறைமையாகும் என்று சினார் என்னும் சமூகவியலறிஞர் குறிப்பிடுகின்றார். எனவே, சமுதாயத்தின் ஒரு பகுதியான இது, உறவுநிலைகளின் ஒழுங்கமைப்பேயாகும். மேலும், உறுப்பினர்களிடையேயுள்ள பரிமாற்ற உறவுகளின் வலை என்றும் இது கூறப்படும். மகெனியர், பேஜ் ஆகியோர் குடும்பம் என்பது பாலின உறவுகளால் வரையறை செய்யப்படும் கூட்டுத்தொகுதியானாலும், குழந்தை களைப் பேணி வளர்க்கும் உரிமையும் கொண்டது என்று தெரி விப்பர். இவ்விளக்கத்தின்படி, ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே பாலுணர்வு ஆசைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக ஏற் பட்ட தற்காலிகக் கூட்டுமுறை அன்று குடும்பம் என்பது புலப்படும். குடும்பத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான பாலு ணர்வு உறவு அவசியம் என்றாலும், குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதற்கே குடும்பம் என்னும் சமூக அமைப்பு உள்ளது. குழந்தையுடன் கூடிய பெண்ணும், அவர்களைப் பராமரிக்க ஆணும் உள்ள அமைப்பே குடும்பம் எனப் பைசான்ஸ் என்பார் விளக்கம் கொடுக்கிறார். பொதுவாக, குடும்பம் என்பது மனைவி யுடன் இருத்தலையே குறிக்கும் என்பர் சிலர். ஆனால் சமூகவிய லின்படி குடும்பத்தில் குழந்தையே மிக அவசியமாகும்.

இனி, குடும்பத்தின் சிறப்பியல்புகளைப் பற்றிப் பார்ப்போம். முதலில், குடும்பம் என்பது கணவன், மனைவி, குழந்தை என்ப வரால் ஆக்கப்பட்ட அமைப்பில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே காணப்படும் நிலைத்த உறவுதான் குடும்பத்தின் முக்கிய இயல்பாகும். ஆணுக்கும் பெண்ணுக்குமான உறவு என்பது எல்லா நாட்டு நாகரிகத்திலும் காணப்படும் ஒன்றாகும். இவ்வுறவு

இல்லாமல் குடும்பம் என்னும் அமைப்பே ஏற்படாது. பலவகைப் பட்ட திருமண முறைகளிலும் கணவனுக்கும் மனைவிக்குமிடையே யான உறவு நிலைத்த ஒன்றாகத்தான் கருதப்படுகிறது.

அடுத்து தொடர்ந்த நிலைபெற்ற திருமணம் சார்ந்து இருப்பதா லேயே அது தொடர்ந்த பாலுணர்வு உறவுகளைத் தரும் என்பது குடும்பத்தின் சிறப்பாகும். திருமணம் இல்லையேல் குடும்பம் என்னும் அமைப்பே இராது. ஆனால், திருமணம் இல்லாமல் சட்டத் திற்குப் புறம்பான உறவு நிலைகள் ஆணுக்கும், பெண்ணுக்கு மிடையே இருக்கலாம். அப்போது அங்கே குடும்ப அமைப்பைக் காண முடியாது. மேலும், திருமண முறிவு ஏற்பட்டாலும் குடும்பம் என்னும் அமைப்பு சிதறிவிடும். அவ்வாறே குழந்தைகளின் வளர்ப்பு முறைக்கும், திருமணத்தால் ஏற்படக்கூடிய நிலைத்த ஆண், பெண் உறவு முறையே தேவையாக உள்ளது. கணவனுக்கும், மனைவிக்கும் இடையே நீடித்த உறவு இல்லையெனில் வளரும் குழந்தை எல்லாவிதத்திலும் பாதிக்கப்படும். எனவே, குடும்பத் திற்குக் கணவன் மனைவியின் பாலுணர்வு உறவு தேவை யாகிறது.

குடும்ப உறுப்பினர்களிடையே காணப்படும் இரத்த உறவு என்பது குடும்பத்தின் மற்றும் ஒரு முக்கிய சிறப்பியல்பாகும். இரத்த உறவு என்பது உண்மையாகவும் இருக்கலாம்; அல்லது கற்பனை யாகவும் இருக்கலாம். ஒரு குடும்பத்தின் உறுப்பினர் மரபின் வழி வந்தவர்களேயாவர். குடும்பத்தில் தத்து எடுக்கப்பட்ட பிள்ளைக் கும், பெற்றோர்களுக்கும் இடையேயான உறவு சட்டப்பூர்வமாய் இருப்பினும், இரத்தவழி உறவில் காணப்படும் பாசம்அவ்வுறவில் இருக்காது. இரத்தவழி உறவில்தான் அன்பும், பாசமும் நெருக் கமாய் வலுவாய் அமைந்திருக்கும். ஆனால், கணவனும், மனைவி யும் ஒரே இரத்தவழி உறவில் வந்தவர்களாக இருத்தல் கூடாது என்பதே பொதுவாக யாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதியாக இருந்து வருகிறது.

இனி, குடும்ப உறுப்பினரின் தேவைக்குரிய நிதிநிலையை அமைத்துக்கொள்ளுதலும் குடும்பத்தின் ஒரு சிறப்பியல்பாகும். ஏனெனில் இச்சமுதாய வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும்

பொருளாதாரம் தேவைப்படுகிறது. குடும்பம் ஒரு கூட்டாக - தொகுதியாக இருப்பதற்கு நிதி என்பது மிக அவசியமாகும். குடும்பத் தலைவனின் கடமை தன்னுடைய மனைவிக்கும், குழந்தை வளர்ச்சிக்கும் தேவையான நிதி வசதி செய்து தருவதேயாகும்.

ஒரே இடத்தில் ஒன்றாக வசிப்பதே குடும்பத்தின் மற்றுமொரு சிறப்பியல்பு ஆகும். இரத்தவழி உறவு இருந்தும், குடும்பத்தின் உறுப்பினர்கள் வெவ்வேறு இடங்களில் வசித்தால் அதனைக் குடும்பம் என அழைத்தல் முடியாது. எல்லா உறுப்பினர்களும் ஒரே இடத்தில் வசித்தால்தான் குடும்பம் என்பதன் பொருள் உறுதியாகத் தோன்றும். நாடோடி இன மக்கள் கூட ஒரே இடத்தில்தான் வசிப்பார்கள்.

இவ்வாறான பல்வகைச் சிறப்பியல்புகளைக் கொண்ட குடும்பமே மனித வரலாற்றின்சமுதாயத்தில் காணப்பட்ட முதல் சமூக அமைப்பாகும். முற்காலத்தில் மக்கள் அமைப்பு நிலையற்ற சிறு சிறு குடும்பங்களாக வாழ்ந்தனர். ஆனால் காலம் செல்லச் செல்ல சமூக உறவு அடிப்படையில், குடும்பம் நிலைத்த சமூக அமைப்பாக உருவெடுத்தது. குடும்பங்கள் பொதுக் குழுமத்தைத் தோற்றுவித்தன. பின்னர் நாடு என்பது தோன்றியது. எனவே ஒரு நாட்டின் தோற்றத்திற்கு குடும்பம் என்னும் சமூக அமைப்பே மூல காரணமாக உள்ளது என்பது தெளிவு.

குடும்பம் என்னும் அமைப்பின்றி மனிதன் முறையாக - முழுமை யாக வாழ முடியாது; சமுதாயம் என்பதும் முழுமை அடையாது. எனவே சமுதாயத்தின் அடிப்படை அங்கமாகவே குடும்பத்தைச் சமுதாயத் தத்துவஞானிகள் கொள்வர்.

குடும்பம் என்பதன் தோற்றங்குறித்துப் பல கருத்துவேறுபாடுகள் காணப்படுகின்றன. இதன் தொடர்பாகப் பல கோட்பாடுகளும் சொல்லப்படுகின்றன. இவற்றில் முக்கியமாக 1) பாலுணர்வுப் பொதுமைக் கொள்கை, 2) குடும்பத் தலைவன் வழிக் கோட்பாடு, 3) குடும்பத் தலைவி வழிக்கோட்பாடு, 4) ஒரு துணை மணக் கொள்கை, 5) படிமுறை வளர்ச்சிக் கோட்பாடு ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

### 1. பாலுணர்வுப் பொதுமைக் கொள்கை:

சமூகவியலறிஞர் சிலரின் கூற்றுப்படி, பண்டைக்காலத்தில் எந்த ஒரு பெண்ணோ ஆணோ எவருடனும் பாலுறவு கொள்ள லாம் என்ற நிலை இருந்தது. இவ்வுறவு நிலைகளில் எவருக்கும் எவ்விதக் கட்டுப் பாடும் இல்லை. இந்நிலையே பாலுணர்வுப் பொதுமை எனப்பட்டது. இப்பொதுமை நிலை நிலவியதை மெய்ப் பிக்க அக்காலத்தின் நாடோடி மக்களின் மரபுகளை எடுத்துக் காட்டுவர். மனிதவியல் அறிஞரும், இம்மரபுகளைப் பற்றிக் கூறியுள்ளனர். விருந்தோம்பலை வெளிப்படுத்தும்போது தன் மனைவியோ மகளோ விருந்தினரின் பாலுணர்வுத் தேவைக் கென அளிக்கப்பட்டனர் எனவும், பெண்கள் விருந்துகளின்போது மாற்றிக்கொள்ளப்பட்டனர் எனவும் அவர்கள் கூறுவர். ஆதலின் அக்காலங்களில் குழந்தையின் தந்தையார் என்பதும் தெரியாமல் இருக்கும். எனவே, இப்பாலுணர்வுப் பொதுமை நிலையே குடும்பத்தின் முதற்கட்டம் என்பர். ஆனால், இக்கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கது அன்று. ஏனெனில் பண்டைக் காலத்தில் பாலுணர்வு உறவு முறை குறித்துப் பல கட்டுப்பாடுகளைக் கொண்ட பழக்கவழக்கங்கள் இருந்துள்ளன. எனவே, இப் பொதுமை நிலை என்பது எங்கோ ஓரிடத்தில் நடைபெற்ற ஒன்றே யன்றிச் சமுதாயத்தில் எங்கும் நிலவிய நிலை அன்று. மேலும், இத் தகைய பொதுமை நிலை ஒன்று இருக்குமேயானால் குடும்பம் என்ற அமைப்புத் தோன்றியிருக்கக்கூடிய வாய்ப்பே இல்லை.

### 2. தந்தைவழிக் கொள்கை:

இக்கோட்பாட்டை அரிஸ்டாடில், பிளேட்டோ ஆகியோர் ஆதரிப்பர். தற்காலத்தில் இக்கொள்கையின் தீவிர ஆதரவாளர் சர் ஹென்றி மைன் என்பாரேயாவார். இக்கொள்கையின்படி, முன்காலத்தில் குடும்பம் என்பது தந்தைவழிப்பட்டதாய் இருந்தது. அதாவது குடும்பத் தலைவர் தந்தையே. அவரே அதிக வலிமை வாய்ந்தவர். அதிக அதிகாரமும் பெற்றவராய் இருந்துள்ளார். பண்டைய ரோமாபுரியில் மகனுக்கே மரண தண்டனை கொடுக் கும் அதிகாரம் தந்தைக்கு இருந்தது.

வலிமை பெற்றவராகக் குடும்பத் தலைவர் இருப்பினும் இக் கோட்பாடு குறையுடையதேயாகும். குடும்பத்தலைவராலே குடும்பம் என்னும் அமைப்புத் தோற்றுவிக்கப்படுவதாகக் கூறுவர். ஆனால், ஒரு குடும்பத்தில் குடும்பத் தலைவருக்கு அகால மரணம் நேரும் சமயத்தில் குடும்பத் தலைவியே குடும்பத்தை நடத்திச் செல்வாள். எனவே, குடும்பத் தலைவரே குடும்பத்தின் அடிப்படை என்பதும் தவறாகிறது.

**3. தாய்வழிக் கொள்கை:**

இக்கோட்பாட்டைக் குடும்பத் தோற்றத்தின் அடிப்படையாகச் சில சமூகவியலறிஞர் கொள்வர். தாய் - குடும்பத் தலைவிதான், குடும்பத்தின் ஆதாரம் என்பது இக்கொள்கையாகும். பிரிப்பால்ட் என்பார், மிகப் பண்டைய நாளில் குழந்தையின் தந்தை இவர் என்று ஒருவரைக் குறிப்பிட்டுக் கூறுவது இயலாத நிலையும் இருந் துள்ளதையும் குறிப்பிடுகின்றார். அதனால் குழந்தைக்குத் தன் னுடைய தாயைத்தான் உணர முடியும். எனவே, குடும்பம் என்னும் அமைப்பிற்குக் குடும்பத் தலைவியாகிய தாயே அடிப்படை என்பதே இக்கொள்கையாகும். ஆனால் நாகரீகம் வளர்ச்சியுற, தந்தை வழிக் குடும்பம் என்பதே நிலைபெறத் தொடங்கியது எனலாம். இரண்டு கொள்கைகளுக்குமே சமுதாயத்தில் இடம் இருந்ததாகச் சிலர் கூறுவர். நிலைபெறாக் குடும்ப அமைப்பைக் கொண்ட நாடோடி இன மக்களிடம் கூட தந்தைவழிக் கோட் பாடே நிலைபெற்று இருப்பதாக மெக்வியர் தெரிவிக்கின்றார்.

**4. ஒரு துணை மணக் கொள்கை:**

ஒருவனுக்கு ஒருத்தி என்பதே இக்கொள்கையாகும். ஒரு சமுதாயத்தில் குடும்பம் என்னும் அமைப்பு ஏற்பட இக்கொள்கை யும் அடிப்படையாக உள்ளது என்பர். ஒரு கணவன், அவனுக்கு ஒரு மனைவி என்ற நிலையுடன் அவர்களின் குழந்தையும் சேர, அங்கு குடும்பம் என்னும் அமைப்புத் தோன்றுகிறது. இதற்கு மாறாக ஒரு ஆணுக்குப் பல மனைவிகள் அல்லது ஒரு பெண் ணுக்குப் பல ஆண் துணைகள் என்னும் நிலை இருந்தால் அங்கே ஒழுங்கமைவான குடும்பத்தைக் காண்பது கடினமாகும். எனவே, குடும்பத்தின் அடிப்படையாக ஒரு துணை மணக் கொள்கையைப்

பல சமூதாயத் தத்துவவாதிகளும், சமூகவியலறிஞரும் ஏற்றுக் கொள்வர். வெஸ்டர் மார்க் என்பவரே இக்கொள்கையை நிலை நாட்டியவர் எனலாம். மேலும், இக்கோட்பாட்டை டார்வின், ஐக்கர் மேன், மாலினோகஸி முதலியோரும் ஆதரிப்பர். ஒரு குடும்பம், ஆணின் ஆதிக்க ஆசையாலும், பொறாமைக் குணத்தாலும் தோன்றுவதாக டார்வின் கூறுகிறார். அந்நாளைய சமுதாயத்தில் ஆண்மகன் வலிமையுடையவனாக இருந்து பெண்ணிடம் ஆதிக் கம் செலுத்தி வந்தான். எல்லாவற்றையும் தன்னுடையதாக்கிக் கொள்ளும் ஆசையுடையவனாகவும் அவன் இருந்தான். பின்னர் சமுதாயத்தில் இவையே அவனுடைய உரிமைகளாகவும் ஆயின. எனவேதான், அவன் தனக்கென்று ஒரு பெண் துணையை உரிமை யாக்கிக் கொண்டான். இவ்வடிப்படை முறையில்தான் ஒருவனுக்கு ஒருத்தி என்னும் திருமண முறையும் அமைந்தது. நாளடைவில் இது சமுதாயத்தின் மரபாகவும் மாறியது. எனவே ஒருவனுக்கு ஒருத்தி என்பதே குடும்பத்தின் அடிப்படை என்பர்.

**5. படிமுறை வளர்ச்சிக் கோட்பாடு:**

அமெரிக்க நாட்டுச் சமூகவியலறிஞர் மோர்கன் என்பார், குடும்பத்தின் தோற்றத்திற்குக் குடும்பம் என்னும் அமைப்பில் காணப்படும் படிமுறை வளர்ச்சியே அடிப்படை என்கிறார். மேலும், குடும்பம் என்னும் சமூக அமைப்பு ஐந்து நிலைகளில் தன்னை உட்படுத்திக்கொள்ளும் என்றும் அவர் கூறுகிறார். இரத்த வழி உறவில் ஏற்படும் திருமணத்தால் அமையும் குடும்பம் முதல் நிலையாகும். அடுத்த நிலையில், முறையற்ற பாலுணர்வு உறவு நிலைகளுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. ஆதலால் திரு மணத்தில் சில முறைகள் தோன்றின. ஒரு குடும்பத்தில் சகோதரர் அனைவரும், இன்னொரு குடும்பத்தில் சகோதரிகள் அனைவரை யும் மணந்து கொள்ளும் முறை தொடக்க காலத்தில் காணப்பட்டது. எனவே, திருமணம் என்பது ஓர் அமைப்பிற்கு உட்பட்டதாக அமைந்தது. இந்நிலையிலும் பாலுணர்வு உறவு என்பது அக் குடும்பத்தில் தீர்மானிக்கப்படாததாகவே இருந்தது. மூன்றாம் நிலையில், ஒரு ஆண் ஒரு பெண்ணை மணந்து கொள்ளும் முறை தோன்றியது. இந்நிலையிலும் பாலுணர்வு உறவு பற்றி உறுதி யாகக் கூற முடியாமல் இருந்தது. நான்காம் நிலையில், ஆணின்

அதிகாரமும், ஆதிக்கமும் வளர்ந்து தந்தைவழிக் குடும்ப நிலை உரு வாயிற்று. ஆகவே இந்நிலையில் அவன் பல பெண்களுடன் பாலு ணர்வு உறவு கொண்டவனாய் இருந்தான். இனி, இறுதி நிலை யான ஐந்தாம் நிலையே தற்காலத்தில் நாம் காணும் ஒருவனுக்கு ஒருத்தி என்பதை அடிப்படையாகக் கொண்ட குடும்பநிலையாகும்.

குடும்பம் என்னும் அமைப்பில் படிமுறை வளர்ச்சி என்பது உண்டு என்று நம்பலாம். ஆனால் ஒரே மாதிரியான வளர்ச்சி முறைதான் எல்லாச் சமுதாயங்களிலும் காணப்படும் என்பது ஏற்கத்தக்கது அன்று. எனவே, மோர்கன் குறிப்பிடும் படிமுறை வளர்ச்சி நிலை நடைமுறையில் சரியானதாகத் தெரியவில்லை. இவ்வாறே ஒரு துணை மணத்தைக் குடும்ப அமைப்பின் ஒரு முடிந்த நிலையாகக் கொள்வதும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மேலும், குடும்ப அமைப்பின் தோற்றத்திற்கு வேறு பல காரணங் களையும் தற்போது சமுதாயத் தத்துவவாதிகளும், சமூகவியலறி ஞரும் கூறுகின்றனர். குடும்பம் என்பதன் படிமுறை வளர்ச்சி வெவ்வேறு சமுதாயங்களுக்கு வெவ்வேறான நிலைகளில் இருக்கும் என்று அவர்கள் கருதுகிறார்கள். படிமுறை வளர்ச்சியில் சமுதாயங்கள் ஒரே குறிப்பிட்ட நிலையை மட்டும் பின் தொடர்வ தில்லை. மாறாக, அவை பல்வகைப்பட்ட நிலைகளையே மேற் கொள்கின்றன என்று ரால்ப் லின்டன் என்பார் கூறுகிறார். இம்முறையில் தற்காலச் சமூகவியலறிஞர்கள் குடும்பம் என்னும் தோற்றத்திற்குப் பல அடிப்படைகளைத் தெரிவிக்கின்றனர்.

'பல்வகைப்பட்ட விருப்பங்களையும், தேவைகளையும் உடைய மனித இனம், அவற்றை அடைவதற்கும் பல்வேறு முறைகளைப் பல்வேறு சூழ்நிலைகளில் வெளிப்படுத்தும்போது ஏதோ ஒரு வகையான குடும்ப அமைப்பு அல்லது முறைமை தோன்றுகிறது' என்று மெக்வியர், பேஜ் ஆகியோர் கருத்துரைக்கின்றனர். எனவே, குடும்ப அமைப்பின் தோற்றத்திற்குப் பல்வகைப்பட்ட காரணங்கள் உண்டு என்பது தெளிவாகும். அவற்றில் முக்கியமான மூன்றினை மெக்வியர் எடுத்துக் கூறுகிறார். அவை: 1) பாலுணர்வு, 2)இனப் பெருக்கம், 3) பொருளாதார அமைப்பு ஆகியனவாம். இவற்றில் பாலுணர்வு என்பது மனிதனிடம் காணப்படும் அடிப்படையான

உள்ளார்த்தமான போக்காகும். பாலுணர்வு ஆசைகளை நிறை வேற்றிக் கொள்ளுவதற்கு நிலையான அமைப்பாகக் குடும்பம் அமைகிறது. இதனால் பாலுணர்வு ஆசைகளைத் தீர்த்துக்கொள்வ திலும் ஓர் ஒழுங்கான அமைப்பு நிலை பெறுகிறது. இவ்வாறே குடும்பம் என்பது இனப் பெருக்கம் என்ற விருப்பத்தின்பாற்பட்ட தாகவே அமைகிறது. இவ்விருப்பமே ஆணையும், பெண்ணையும் ஒரு நிலையான கூட்டுறவு அமைப்பிற்கு உட்படுத்தி உறவு நிலைகளை வளர்க்கிறது. அடுத்து, குடும்ப அமைப்பில் மனைவி, குழந்தை ஆகியோரின் வாழ்க்கை வளர்ச்சி ஆணைச் சார்ந்தே உள்ளது. இந்நிலைக்கு அவனுக்குத் தேவையானது பொருளாதாரம். பொருளாதாரத்தின் பின்னணியில்தான் ஒரு மனிதன் தன்னு டைய குடும்பத்தை உறுதியான முறையில் அமைக்க முடியும். எனவே பொருளாதார அமைப்பும் குடும்பத்திற்குத் தேவை யாகிறது.

**குடும்பத்தின் வகைகள்**

சமுதாயத்தில் குடும்ப அமைப்பு மிக முக்கிய அங்கமாக இருப் பதையும் அதன் தோற்றத்திற்கான அடிப்படைகளைப் பற்றியும் சிந்தித்தோம். இப்போது குடும்பம் என்னும் சமூக அமைப்பில் காணப்படும் பல்வேறான தனித்தன்மைகளைக் காணலாம். இத் தனித்தன்மைகள் குடியிருப்பின் தன்மை, மூதாதையர் மரபு, தந்தை, தாய் இருவரின் வலிமை, ஆதிக்கம் ஆகியவற்றை அடிப்படை யாகக் கொண்டு நிகழும்.

குடும்ப அமைப்பின் தனித்தன்மை குடியிருக்கும் இடத்தின் இயல்பைப் பொறுத்திருக்கும். குடியிருக்கும் வீட்டின் தன்மைகளை மூன்று விதமாகக் கூறுவர். முதல் வகை, குடும்பத்தில் கணவன், மனைவியின் வீட்டிற்குச் சென்று வாழ்தல், 'வீட்டோடு மாப்பிள்ளை' என்பதுதான்இது. இரண்டாம் வகை, குடும்பத்தில் மனைவி, கணவன் வீட்டிற்குச் சென்று வாழ்தல். இதுதான் தற் போது சமுதாயத்தில் காணப்படும் குடும்ப அமைப்பாகும். மூன்றாம் வகையில், கணவனும், மனைவியும் அவரவர்கள் வீட்டில் மாறி மாறி ஒன்றாய் வசித்தலாகும். ஓர் ஆண்டு கணவன், மனைவி வீட்டிலும், மறு ஆண்டு மனைவி, கணவன் வீட்டிலும் வாழும்

வாழ்க்கையே இம்முறையாகும். ஆனால் நடைமுறையில் இதுபோன்ற அமைப்பு நிலை காணப்படுவதில்லை.

இனி, குடும்பத்தின் தனித்தன்மை மூதாதையர் மரபினை அடிப் படையாகக் கொண்டுவருவது. சமுதாயத்தின் எல்லாக் குடும்பங் களிலும் இத்தன்மையைக் காணலாம். இம்மூதாதையர் மரபும் ஆண் வழி, பெண் வழி என இரு வகைப்படும். தொடக்க காலங் களில் தாயே மூதாதையர்களின் அடிப்படையாகக் கருதப்பட்டார். பெண்களே முக்கிய மூதாதையர்களாக எண்ணப்பட்டனர். குழந் தைகளின் பழக்க வழக்கங்களில் மூதாதையர்களின் மரபை ஊட்டி வளர்ப்பவள் தாயேயாவாள். பெண் மூதாதையர் மரபு வழிக் குடும் பத்தில் பெண்களுக்கே உரிமைகள் அதிகம். தாய் வழி உறவினற் களுக்குத்தான் சொத்தில் பங்குரிமை அளிக்கப்பட்டது. ஆனால் இம்முறை மாறி, தந்தை வழி மூதாதையர் மரபுதான் இப்போது எங்கும் காணப்படுகிறது. தந்தையின் வழியில்தான் எல்லா உரிமை களும் அளிக்கப்படும். அடுத்து, குடும்பத்தின் தனித்தன்மை அதி காரம் அல்லது வலிமை என்னும் அடிப்படையிலும் கணிக்கப்பட் டது. இதிலும் தாய்வழி, தந்தை வழி என இரு வகை உண்டு. இவ் வாறே தாய்வழி மூதாதையர்களின் பெயரால் குடும்பங்கள் அழைக்கப்படும். தந்தையின் வழி மூதாதையர் பெயர்களிலும் குடும்பப் பெயர்கள் அமையும்.

குடும்ப அமைப்பின் இரு வேறு தனித்தன்மைகளைப் பற்றி வார்னர் என்னும் சமூகவியலறிஞர் குறிப்பிடுகிறார். தொடர் பிணைவுக் குடும்பம், இனப்பெருக்கக் குடும்பம் என்னும் நிலை களே அவை. தொடர்பிணைவுக் குடும்பம் என்பது, அதில் தனி மனிதன் பிறப்பது, இதுவே இக்குடும்பத்தின் தனித்தன்மை. இனப் பெருக்கக் குடும்பம் என்பதில் தனிமனிதன் மணந்து குழந்தை களைப் பெற்றுக்கொள்ளும் தன்மை அடங்கியுள்ளது. இவையே யன்றி வேறு நிலைகளிலும் குடும்பம் என்னும் அமைப்பின் தனித் தன்மைகள் கூறப்படும். 1) தாய், தந்தை, குழந்தை ஆகியவர்கள் மட் டுமே உள்ள குடும்பம். 2) கணவன், மனைவி மட்டுமே நடத்தும் தனிக்குடித்தனம் என்னும் குடும்பம். 3) கணவன், மனைவி, உற வினர் அனைவரும் இணைந்து வாழும் நீட்டிக்கப்பட்ட குடும்பம்.

4) இரத்தவழி உறவின் பாற்பட்டவர்கள் இணைந்து ஒன்றாய் வாழும் கூட்டுக் குடும்பம். இவ்வாறாகக் குடும்பத்தின் தனித்தன்மை அடிப்படையில் பலவகைக் குடும்பங்களை நாம் அறியலாம்.

இனி, குடும்பம் என்னும் அமைப்பு சமுதாயத்தில் எவற்றுடன் உறவு கொண்டதாய் உள்ளது என்பதையும் பார்க்க வேண்டும். அவற்றில் மூன்றினை முக்கியமாகக் குறிப்பிடலாம். அவை, சமயத் திற்கும், குடும்பத்திற்கும் உள்ள உறவு, குடும்பத்திற்கும், அரசாங்கத் திற்கும் இடையேயான தொடர்பு, குடும்பத்திற்கும், பொருளாதார அமைப்புகளுக்கும் இடையே காணப்படும் தொடர்பு என்பன. சமயம், அரசு, பொருளாதாரம் இவை மூன்றுமே குடும்பத்திற்குத் தேவையானவை. இங்ஙனமே இம் மூன்றிற்கும் குடும்பம் என்னும் அமைப்பும் தேவையாக உள்ளது. இந்தியாவில் சமயச் சடங்குகள் கோவிலில், குடும்பத்தில்தான் நடைபெறும். குடும்ப வாழ்க்கைச் சமயச் சடங்குகள் அவசியமாவது போலவே, சமயச் சடங்கு களுக்கும் குடும்ப அமைப்பு அவசியமாகிறது. கணவனுடன் இணைந்து சமயச் சடங்குகளைச் செய்பவளைப் 'பத்தினி' என்று சாத்திரங்கள் கூறும். மனைவி இல்லாமல் எந்த ஒரு ஆண் மகனும் சமயச் சடங்குகளை முழுமையாகச் செய்திடல் இயலாது என்று சாத்திரங்களே கூறும். மேலும் குடும்பம் என்னும் அமைப்பின் அவசியத்தைச் சமயங்களும் எடுத்துக் கூறும்.

பொருளாதாரச் செயற்பாடுகளுக்கும் குடும்பம் என்னும் அமைப்பு அவசியமாகிறது. சமுதாயத்தின் நன்மைகளைக் குடும் பங்களே பகிர்ந்து பயன்பெறும். குடும்பம் முழுமையுமே தொழிலில் ஈடுபடலாம். எடுத்துக்காட்டாக, விவசாயத் தொழிலில் ஒரு குடும்பம் முழுமையும் ஈடுபட்டுச் சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும். குடும்ப அமைப்பே சொத்துக்களைப் பாதுகாக்கிறது; வரு மானம் வரும் வழிகளைப் பெருக்குகின்றது. இதுபோன்றே, அர சாங்கத்திற்கும் குடும்பத்திற்கும் உள்ள தொடர்பு மிக அவசிய மாகும். ஏனெனில் ஒன்று இல்லாமல் மற்றது இல்லை என்ற நிலை இங்கு காணப்படும். அரசு, குடும்பத் தலைவனுக்கு அதிகாரம் அளிக்கிறது; தானும் குடும்பம் என்னும் அமைப்பினால் அதிகார வலிமையைப் பெறுகிறது. சமுதாயத்தில் பல குடும்பங்கள் இருக்கும்

போது அவற்றைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்தும் நிலையமாகவே அரசாங்கம் இயங்குகிறது. எனவே இரண்டுமே ஒன்றை ஒன்று சார்ந்து இருப்பதாகக் கூறலாம்.

**குடும்பமும் சமுதாயமும்**

குடும்பம் என்பதை ஒரு சமுதாயத்தின் சமூக அமைப்பாகக் கண்டோம். அத்தகைய சமூக அமைப்பிற்கும், சமுதாயத்திற்கும் இடையேயுள்ள தொடர்பை - உறவை இங்கு காணலாம். சமுதாயத்தின் அடிப்படைக் கூறே குடும்பமாகும். இந்த ஒழுங்கமைப்பு இல்லையேல் சமுதாயம் என்னும் கூட்டமைப்பு இருக்காது. குடும்ப அமைப்புச் சிதறினால், சமுதாயம் ஒரு பாதுகாப்பான அமைப்பாக இராது. சமூகச் சிதறல்களுக்குக் குடும்பப் பிரிவினைகளே காரணமாகின்றன. பிராய்ட் என்ற உளவியலறிஞர் சிறுவன் மனிதனாக வளரும் போது அவன் குடும்பத்தின் குணநலன்களையும், தனித்தன்மைகளையும் வெளிப்படுத்துவோனாகவே இருப்பான் எனவும், இதற்குக் குடும்ப அமைப்பே காரணம் எனவும் கூறுகிறார். ஒரு குடும்பத்தில் மனிதனின் நிலை எதுவோ அதுபோலவே சமுதாயத்திலும் அவனுடைய நிலை அமையும் என அல்டர் என்பார் கூறுவார். எனவே, மனிதனைச் சமூகமாக்குவது குடும்பமே எனலாம்.

மெரில் என்பார் 'குடும்பம் என்பது பெற்றோர் குழந்தை ஆகியோர்களின் உறுதியான கூட்டுறவாய் அமைந்து குழந்தைகளைச் சமுதாயஞ் சார்ந்த நிலையில் வளர்ப்பதே' என்கிறார். ஓர் இனத்தின் பாதுகாப்பு மற்றும் கல்வியறிவிற்குரிய சமூக அங்கமே குடும்பம் என டுவே, டப்டுஸ் ஆகியோர் கூறுவர். ஒரு குழந்தையைப் பொறுப்பு மிக்க குடிமகனாக வளர்க்க உதவுவது குடும்பமே. குழந்தையின் ஒழுங்கு, நடத்தை ஆகியவற்றை குடும்பமே நெறிப்படுத்துகிறது. ரைட் என்பார் 'தன்னுடைய எண்ணங்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்தி, தனிச்சிறப்புகளை வளர்க்க உதவும் வாய்ப்புகளையும் ஒரு குழந்தைக்குத் தருவது குடும்பமே' என்று கூறுகிறார். குழந்தையின் இத்தகைய வளர்ச்சிக்குச் சமுதாயமே வழிவகுக்கிறது. குழந்தையின் வளர்ச்சி குடும்பச் சூழல்களை மட்டுமில்லாமல் சமுதாயச் சூழ்நிலைகளைப்

பொறுத்தே அமையும் என உளவியலறிஞர் உறுதியுடன் கூறுவர். குழந்தையின் நடத்தைகளுக்கும் குடும்பம் மிக முக்கியமாகும். குடும்பத்தில் பெரியோர்களை மதித்து நடக்க பழகும் குழந்தையே சமுதாயத்திலுள்ள பெரியோர்களின் மீது மதிப்புக் காட்டும். இக் கருத்தைப் பிராய்டு அதிகமாக வலியுறுத்துகிறார். குழந்தையின் முதல் பள்ளிக்கூடம் குடும்பம் அல்லது வீடேயாகும். பெற்றோர்கள் தான் குழந்தையின் சிறந்த ஆசிரியர்கள் எனப் பேராசிரியர் காலிங்வுட் கூறுகிறார். எனவே, ஒரு குழந்தை சீரிய வளர்ச்சிக்குக் குடும்ப அமைப்பே காரணமாய் உள்ளது. இருப்பினும் அவ்வமைப் புச் சீர் பெறுவது சமுதாயத்தால்தான்.

மனிதனின் நடத்தைகளையும், தனிச் சிறப்பியல்புகளையும் நெறிப்படுத்தி ஆக்கப்படுத்துவது குடும்பமே எனக் கண்டோம். மேலும், சமுதாயம் தன்னுடைய பண்பாட்டு மரபுகளைக் குடும்ப அமைப்பு மூலமாகத்தான் மனிதர்களுக்கு அளிக்கிறது. எனவே சமுதாயத்தில் குடும்பத்தின் பங்கு இன்றியமையாதத்தாகிறது. மனி தனைச் சமுதாயஞ்சார்ந்தவனாக - சமூக இயல்பினனாக மாற்ற உதவும் ஓர் இயக்கமாகவும் குடும்ப அமைப்புச் செயல்படுகிறது. திருமண அமைப்புப் போன்றே குடும்பம் என்னும் சமூக அமைப்பில் பல்வேறுபட்ட பண்பாட்டுக் கூறுகள் இருக்கின்றன. ஆதலால்தான், குடும்ப அமைப்பில் சமயம், நீதி, அரசியல், கலை, மொழியியல் கூறுகள் காணப்படுகின்றன.

இனி, குடும்பத்தின் மூலம் சமுதாயம், மனிதனைக் கட்டுப்படுத்து வதைக் காணலாம். உறவு வலைகளால் பின்னப்பட்டதுதான் சமூக வாழ்க்கை. இவ்வுறவு நிலையை ஒரே சீராக வைத்திருக்க வேண்டிய உரிமை, கடமைகளைப் பற்றிய முறைமை ஏற்பட்டது. சமுதாயத்தின் உறுப்பினர்களிடையே ஏற்படும் சண்டை சச் சரவுகளை அகற்றி ஒருவருக்கொருவர் நல்லிணக்கமாக வாழ இம் முறைமை மிகவும் பயன்பட்டது. இம்முறைமை குடும்பத்தாலேயே தோற்றுவிக்கப்பட்டது. மேலும், மக்கள் ஒற்றுமையுடன் இணக்க மாக இருக்க சமுதாயம் பல்வேறு வகையான கட்டுப்பாடுகளை விதித்தது. இக்கட்டுப்பாடுகள் குடும்ப அமைப்பின் வழியாகத்தான் இயக்கப்பட்டன. பலரை ஒரு சமுதாயம் கட்டுப்படுத்த சிரமப்படும்.

ஆனால், ஒவ்வொரு குடும்பத்திலும் இக்கட்டுப்பாடுகள் அமுலாக்கப்பட்டால் அவை சமுதாயம் முழுதும் நிலவும். எனவே, சமுதாயத்தின் பணி குடும்பத்தால் எளிதாகிவிடுகிறது. எடுத்துக்காட்டாக, குடியைக் கெடுக்கும் குடிப்பழக்கத்தைக் கூறலாம். ஒவ்வொரு குடும்பத்திலும் மதுவைக் குடிப்பது தீது என்று வலியுறுத்தித் தீவிர கட்டுப்பாடுகளை விதித்தால் சமுதாயம் முழுமையும் அவ்வொழுக்கம் காக்கப்படும். குடிப்பழக்கம் சமுதாயத்தை விட்டு அகலும். வீடு முறையானால், நாடு சீர்படும். எனவே, ஒரு நாட்டை, ஒரு சமுதாயத்தை உயர்நிலைக்குக் கொண்டு செல்லக் குடும்பம் என்னும் அமைப்பே உதவுதனை நாம் அறியலாம்.

குடும்பத்தில் இன்னுமொரு முக்கியப் பணி தாய்மொழி வளர்ச்சியாகும். எல்லாச் சமுதாயங்களிலும் பண்பாடு, ஒழுக்க நெறி, உயர்தகவு ஆகிய யாவும் ஆங்காங்கு பேசப்படும்மொழியுடன் மிக உறுதியான உறவு கொண்டிருக்கும். சமுதாயத்தில் இலக்கியமே பண்பாட்டைக் காட்டும் கண்ணாடி. இலக்கியம் மொழியை அடிப்படையாக கொண்டது. மொழிதான் மனிதனைச் சமுதாயஞ் சார்ந்தவனாக ஆக்குவதில் பெரும்பங்கு வகிக்கிறது. சமுதாயத்தில் மக்களிடையே தகவல் தொடர்பை ஏற்படுத்தித் தருவது மொழியேயாகும். மொழி இருப்பதால்தான் ஒரு குடும்பம் பண்பாடுடைய குடும்பமாகத் திகழ முடிகிறது. மொழியே ஒரு சிறந்த சாதனமாக விளங்குகிறது. உயர்நிலையடைந்த சமுதாயத்தின் உறுப்பினர்கள் சிந்திப்பதை வெளிப்படுத்திச் செயல்வடிவம் கொடுக்கத் தகவல் பரிமாற்றத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது மொழியேயாகும். இம்மொழியின் வளர்ச்சி குடும்பத்தில்தான் தொடங்குகிறது. வீட்டில்தான் குழந்தை முதன்முதல் பேசுகிறது. பெற்றோர்கள் சொல்லிக் கொடுப்பதைத் தொடர்ந்து தாய்மொழியில் பேசத் தொடங்குகிறது. பின் தாய்மொழியால் தன் விருப்பத்தை வெளியிடுகிறது. தேவையைக் கூறுகிறது. குழந்தையின் வளர்ச்சியில் மொழியும் பங்கேற்கிறது. எனவே, குடும்பம் என்னும் அமைப்பு சமுதாயத்தில் தாய்மொழியின் வளர்ச்சிக்கும் உதவுகிறது எனலாம்.

## குடும்பத்தின் செயற்பாடுகள்

சமூக அமைப்பான குடும்பத்தின் செயற்பாடுகள் பலவகைப்பட்டனவாய் அமைந்து சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகச் செயல் புரிகின்றன. சமூகவியலறிஞர்கள் குடும்பத்தின் செயற்பாடுகளைப் பல வகைகளாகப் பிரிப்பர். இப்பிரிவினைகளும் பல வகைப்படும். ஆக்பேர்ன், நிம்கோப் ஆகியோர் குடும்பத்தின் செயல்களை ஆறு வகையாகப் பிரிக்கின்றனர். அவை: 1) உணர்ச்சி சார்ந்த செயல், 2) பொருளாதாரச் செயல், 3) இன்பப் பொழுதுபோக்குச் செயல், 4) தற்காப்புச் செயல், 5) சமயச் செயல், 6) கல்விச் செயல் என்பனவாகும். கிரோவ்ஸ் என்பார் குடும்பத்தின் செயற்பாடுகள் நான்கு வகையாக இருக்கும் என்றார். அவை, 1) பாதுகாப்பு மற்றும் குழந்தைகளைக் கவனித்தல், 2) பாலுணர்வுகளை நெறிப்படுத்திக் கட்டுப்படுத்துதல், 3) சமூகப் பாரம்பரியங்களைக் கட்டிக்காத்தல், 4) மிக நெருக்கமான உறவுகளுக்கு வாய்ப்பு நல்குதல் என்பனவாகும். ரீட் என்பார் குடும்பத்தின் செயல்களாக வேறு நான்கினைக் குறிப்பிடுகிறார். அவை : 1) இனமரபைப் பேணுதல், 2) சமூகமாக்குதல், 3) பாலுணர்வுத் தேவைகளை நெறிப்படுத்தி நிறைவேற்றுதல், 4) பொருளாதாரச் செயல்கள் என்பன.

எனவே, குடும்பத்தின் செயற்பாடுகளை இவ்விதம் பலவிதமாகச் சமூகவியலறிஞர்கள் எடுத்துரைப்பர். மேற்குறித்த பல வகைகளையும் நாம் இரண்டு பெரும்பிரிவுகளில் அடக்கலாம். அப்பெரும் இரு பிரிவுகளாவன: 1) உலக முழுதேற்புடைய அடிப்படைச் செயல்கள், 2) மரபு வழியான செயல்கள்.

## உலக முழுதேற்புடைய அடிப்படைச் செயல்கள்

குடும்பத்தின் இச்செயற்பாடுகளில் நான்கு முக்கிய செயல் நிலைகள் அடங்கும். அவை: 1) உயிரியற் செயல்கள், 2) உளவியற் செயல்கள், 3) பாலுணர்வுத் தேவைகளை நிறைவேற்றுதல், 4) பாதுகாத்தல் மற்றும் குழந்தைகளை நன்கு பராமரித்தல் என்பன. இவற்றில் உயிரியல் செயற்பாடுகளில் இனப்பெருக்கம் முக்கியமாக இடம்பெறும். குடும்பத்தின் அடிப்படையாகவே இதனைக் கொள்வர். முன்னர் கண்டவாறு குடும்ப அமைப்பின் அடிப்படை நோக்கமே இனப்பெருக்கந்தான். குடும்பத்தை அமைப்பு ரீதியில்

செயல்படுத்த இனப்பெருக்கமே காரணமாக அமைந்துள்ளது. அடுத்து, உயிரியற் செயற்பாடுகளில் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் பெறச் செய்யப்படும் முயற்சிகள் அனைத்தும் இதில் அடங்கும். குடும்பத்தின் அடுத்த அடிப்படைச் செயற்பாடு உளவியலில் அடங்கும். குடும்பத்தில் காணப்படும் பாசம், நேசம், அன்பு போன்ற உணர்ச்சிகளின் விளைவாக செய்யப்படும் செயல்கள் அனைத்தும் உளவியற் செயற்பாடுகளில் அடங்கும். குடும்பம் என்னும் அமைப்பின் அடிக்கல்லாக அமைந்திருப்பது பாச உணர்ச்சியே. உள்ளன்பால் உறவுகள் வலுப்பெறும். கணவனுக்கும், மனைவிக்கும் இடையே காணப் படும் உறவானது வெறும் பாலுணர்வின் பாற்பட்டதாக மட்டுமே இருக்காது. அன்பெனும் காதல்தான் இல்லறத்தின் முதற்படி. எனவே அன்பு, பாசம் என்னும் உணர்ச்சிகள் பல செயல்களைச் செய்யத் தூண்டும். இவற்றின் விளைவாகக் குடும்பத்தில் பல செயற்பாடுகள் நிகழ்தலை எளிதில் அறிந்து கொள்ளலாம்.

மேலும், குடும்பத்தின் செயற்பாடுகள் பாலியல் உறவுகள் மூலமும் அமையும். குடும்பத்தின் அடிப்படைச் செயல், இப் பாலுணர்வு உறவுநிலைகளை நெறிப்படுத்தி நிறைவேற்றுத லாகும். பாலியல் உறவுகளில் இணக்கம் இல்லையெனில் குடும்பக் கட்டமைப்பே சிதறிவிடும்.

குடும்பத்தின் செயற்பாடுகள் குழந்தைகளைப் பாதுகாத்தலிலும் பராமரித்தலிலும் உள்ளன. குடும்பத்திற்கு மிகத் தேவையானவை இவை. குழந்தைகளின் வாழ்வும், வளர்ச்சியும் குடும்ப அமைப் பையே சார்ந்து இருக்கிறது. இக்குழந்தைகள் மனிதனாக வளர்ந்த தும் ஒழுக்க நெறியுடன் கூடிய நடத்தைகளுடன் சமுதாயத்தில் சிறந்த குடிமகனாக வாழ்வதற்குக் குடும்பமே வழிகாட்டி நெறிப் படுத்துகிறது.

### மரபு வழியான செயல்கள்

குடும்பம் என்னும் சமூக அமைப்பில் மரபுவழிச் செயற் பாடுகளை ஐந்து முக்கிய நிலைகளில் வைத்துச் சமுதாயத் தத்துவ வாதிகளும், சமூகவியலறிஞர்களும் குறிப்பிடுவர் அவை:

1) பொருளாதாரம், 2) சமூகம், 3) சமயம், 4) பண்பாடு, 5) பொழுதுபோக்கு ஆகியன. இவற்றில் குடும்பத்தின் பொருளாதாரச் செயற்பாடுகள் சமுதாயத்திற்கு அவசியமான ஒன்று. இச் செயல்கள் குடும்பத்தில் மரபுவழியாகவே பெரும்பாலும் அமையும். செய்யும் தொழில்களின் அடிப்படையிலேயே சமுதாயம் இனம் வாரியாக முற்காலத்தில் பிரிக்கப்பட்டிருந்தது. குடும்பத்தொழில் என்று தொழில்களும் பாகுபடுத்தப்பட்டன. எடுத்துக்காட்டாக, விவசாயம், நெசவு, கைவினைத் தொழில்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். குடும்பத்தின் பொருளாதாரச் செயல்கள் குடும்பத்தில் உள்ள அனைவராலும் மேற்கொள்ளப்படும். இதுதொடர்பான வெளி வேலைகளை ஆண்மகன் மேற்கொள்ளும் அதேசமயத்தில், பெண் வீட்டு வேலைகளைக் கவனித்து வருவாள். சிறுவர்கள் வீட்டில் நடைபெறும் செயல்களுக்கு உறுதுணையாக இருப்பர். பொருளாதாரச் செயலின் அடுத்த நிலை, வருமானத்தை ஒழுங்குபடுத்துதலாகும். இதையடுத்து வருவது, சொத்துக்களை முறையாக நிலையாக அமைத்துக்கொள்ளுதலிலும், அதனைக் காத்துப் பராமரித்தலிலும் கவனம் செலுத்தக்கூடிய செயல்களாகும்.

மரபுவழிச் செயல்களில் சமூகச் செயல்களும் முக்கியமானவை. சமுதாயத்தில் குடும்பத்திலுள்ள உறுப்பினர்களின் சமூகநிலையை வெளிப்படுத்திக் கொள்ள இச்செயல்கள் உதவும். குடும்பம் என்பது சமுதாயத்தின் முக்கியப் பகுதியாக இருப்பதால் அக்குடும்பத்தின் செயல்கள் பெரும்பாலும் சமூக வழிப்பட்டவைகளாக அமைகின்றன. இச்செயல்களே மனிதனைச் சமுதாயஞ்சார்ந்தவனாக ஆக்குகின்றன. குடும்பத்தின் மற்றுமொரு சமூகச்செயல் தனிமனிதன் மீது சமூகக் கட்டுப்பாடுகள் விதித்து அவனை நெறிப்படுத்துவதாகும். சமுதாயம் நல்ல முறையில் இருக்கவும் - இயங்கவும் - மனிதர்களின் நெறிப்பட்ட வாழ்க்கை நெறிகளும், அறவுணர்வுகளும், நன்னடத்தைகளும் மிக இன்றியமையாதன. மனிதனுக்கு அறச்சட்டங்களைப் பற்றியும், ஒழுங்கு நடத்தைகளைப் பற்றியும் போதித்து அவற்றிற்கேற்ப நடந்துகொள்ள வைப்பதும் குடும்பமேயாகும். குடும்பம் என்னும் சமூக அமைப்பில்தான் அவன் பக்குவப் படுத்தப்படுகின்றான். மேலும் குடும்பத்தின் சமூகச் செயல், பாரம்பரியப் பெருமைகளைக் கட்டிக்காத்தலிலும், அவற்றைத்

தொடர்ச்சியாக நிலைநிறுத்துவதிலும் அமைந்திருக்கும். இவற்றால் மரபுகள் காக்கப்படுகின்றன.

இனி, குடும்பத்தின் செயற்பாடுகள் சமயச்சடங்குகள் செய்வதிலும் அடங்கும். மனிதன் சமயங்களுடன் ஒன்றிப் போனவன். சமயத்துடன் பெரும்பாலான மக்கள் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பர். வாழ்வின் முடிந்த முடிவுகளை அடையச் சமயமே ஒரு சிறந்த வழியாகும். சமயம், மனிதனின் ஆன்மீக உணர்வுகளை வெளிப்படுத்தும் நிலையமாகச் சமுதாயத்தில் உள்ளது. இந் நிலையில் குடும்பம் என்னும் அமைப்பில் சமயச் செயல்கள் முக்கிய இடம்பெறுகின்றன. இந்து சாத்திரங்களெல்லாம் சமயக் கடமைகளை நிறைவேற்றுவதற்குக் குடும்பமே அடிப்படையாகும் என்கின்றன.

குடும்பத்தின் பண்பாட்டுச் செயல்களும் சமுதாயத்திற்கு மிக அவசியமானவை. குடும்பம் என்னும் அமைப்பே ஒரு சமுதாயத்தில் பண்பாட்டை என்றும் நிலைத்து வாழ வைக்கும். குடும்பந்தான் மக்களைச் சமூகப் பண்பாட்டில் நெறிப்படுத்துகிறது. மனிதன் வாழ்க்கையைப் பற்றி அறிந்துகொண்டு அதற்கேற்றவாறு தன்னுடைய நடத்தைகளை அமைத்துக் கொள்வதற்குப் பண்பாடே பயன்படுகிறது. மேலும், 'பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகல்' என்பது பெரியோர் வாக்கு. எது நல்லது எது கெட்டது என்று அறிந்து அதன்படி நடத்தலே 'பண்பாடு' ஆகும். எனவே பண்பாட்டின்படி வாழ குடும்பம் என்னும் அமைப்பு மிக அவசியமாகிறது.

இறுதியாக, குடும்பத்தின் செயல்கள் பொழுதுபோக்கு நிகழ்வுகளிலும் அமையும். இன்றைய சமுதாயம் மிகவும் சிக்கலான, பிரச்சனைகள் நிறைந்த ஒன்றாகும். இதில் மனிதன் எந்திரமாக வாழ்கின்றான். எந்திரமாய் இருந்தால் சமுதாயம் ஒரே நிலையில் நின்றுவிடும். இம்முறையை மாற்றவே யாவரும் விரும்பர். மனிதன் எந்திரம் போல் இருந்தால் குடும்பமும் மகிழ்ச்சியாக இராது. எனவே, பொழுதுபோக்கு என்ற சாதனம் மனிதனுக்குத் தேவையாகிறது. அதனால் குடும்பத்தில் பொழுதுபோக்கான செயல்கள் நடைபெறுகின்றன.

ஆனால், இச்சீரிய குடும்பம் என்னும் சமூக அமைப்பானது தற்காலத்தில் மிகவும் வலுவிழந்து அமைப்புமுறை சிதறத் தோன்றியுள்ளது. இதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. குடும்பத்திற்கென்று ஒரு பொதுவான நோக்கம் என்பது இப்போது மறைந்துவிட்டது. குடும்பத்திலிருக்கும் ஒவ்வொருவரையும் தனித்தனியான விருப்பம், நோக்கம், வழிமுறை, செயல்பாடு முதலியவை தோன்றிவிட்டன. ஒன்றாக இருந்து, உண்டு வாழ்ந்தாலும் அவரவருக்கும் அவரைப் பற்றியேதான் சிந்தனையின்றி, அடுத்தவர்களைப் பற்றி அக்கறை கொள்வது என்பது முற்றிலும் குறைந்துவிட்டது. குடும்பம் என்பதே சில இடங்களில் ஒரு தங்குமிடம், ஓர் உணவகம் என்ற நிலையில்தான் காணப்படுகிறது. இந்நிலை முக்கிய பெருநகரங்களில் மிகுதியாக இருக்கிறது. ஆதலால்தான் குடும்பம் என்பது எந்திரத்தனமாய் ஆகிவிட்டது எனலாம். மேலும், இப்போது ஒரு குடும்பத்தில் கணவனும், மனைவியும் வேலைக்குச் செல்கின்ற நிலை அதிகரித்து வருகிறது. குடும்பத்தின் பொருளாதாரம் இதனால் சற்று நிலை பெற்றாலும் குடும்பம் என்னும் சமூக அமைப்புக்குரிய தன்மைகள் யாவும் அங்கே செத்துவிடுகின்றன. வீடு என்பது வேலைக்குச் சென்று திரும்பியபின் உண்டு, ஓய்வெடுக்கக் கூடிய இடம் என்று ஆகிவிட்டது. மேலும் சில குடும்பங்களில் கணவன் ஒரு ஊரிலும், மனைவி வேறு ஊரிலும் பணியாற்றும் நிலை பரவலாகக் காண்ப்படுகிறது. இத்தகைய காரணங்களால்தான் சமூக உணர்ச்சி என்பதே குறைந்து போகிறது என்றும் கொள்ளலாம்.

ஒற்றுமை இன்மையாலும், வேறு சில காரணங்களாலும் தற்கால குடும்ப அமைப்பு முறைகெட்டுக் காணப்படுகிறது. அவற்றில், அதிகாரக் கட்டுப்பாடு குறைந்தமை - குடும்பத்தினரிடையே சண்டை - பொருளியல் நோக்கம் - பாதுகாப்பின்மை என்பன குறிப்பிடத் தக்கவை. இவற்றில் அதிகாரக் கட்டுப்பாடுகளின் குறைவு என்பது குடும்பத்தின் தலைவர் அல்லது முதியவர் ஒழுக்கம், வாழ்க்கை முறை, நெறி ஆகியன குறித்துக் கூறும் கட்டுப்பாடுகளைக் குடும்ப உறுப்பினர் மதித்து நடவாமல் இருப்பதைக் குறிக்கும். இக்கால இளைஞர் குடும்பத்தில் தாம் விரும்பியவாறு வாழவே விரும்புகின்றனர். பெரியோர்களின் அறிவுரைகளையும் தட்டிக் கழித்து

விடுகின்றனர். இந்நிலையில் குடும்பத்தில் எவரும் எவர் மீதும் அதிகாரக் கட்டுப்பாடு செலுத்த இயலாத நிலை தோன்றுகிறது.

இவ்வாறே, குடும்பத்தின் உறுப்பினர்களிடையே இணக்க மின்மையும் அதிகரித்துவிட்டது எனலாம். இதனால் கூட்டுக் குடும்பம் என்னும் அமைப்பே குறைந்துவருகிறது. ஒவ்வொரு குடும்பத்திலும் சண்டை, சச்சரவு, சட்டப் பிரச்சனை என்பன அதிகரித்துவிட்டன. 'வீட்டுக்கு வீடு வாயிற்படி' என்பது போல சொத்துத் தகராறு இல்லாத குடும்பமே இல்லை என்ற நிலை இப்போது மிகவேகமாக வளர்ந்து வருகிறது. இது வேதனை தரும் உண்மை நிலவரமாகும். மேலும், குடும்பத்தில் ஒற்றுமை ஏற்படுத்தக் கூடிய திருமணம் என்னும் அமைப்பே குடும்பத்தைச் சிதறச் செய் கிறது. ஏனெனில், திருமணம் என்பது இருமனம் ஒன்றி நடை பெறும் ஒன்றாக இல்லை. திருமணத்தைப் பணந்தான் உறுதி செய்யக்கூடியதாக அமைந்துவிட்டது. எனவே, திருமணம் என்பது ஒரு சமூக ஒப்பந்தம் என்ற நிலை மாறி வெறும் பணத்திற்காக - பணத்தால் மட்டும் செய்யப்படும் சடங்காக மாறிவிட்டது. ஆகவே தான் திருமணம் என்னும் அமைப்பு, குடும்பம் என்னும் அமைப்பைச் சிதைத்துவிடுகிறது. பணத்தை அடிப்படையாகக் கொண்டதால்தான் அக்குடும்பம் தன்னலத்தை மட்டுமே எதிர்பார்க்கிறது. தன் மனைவி, தன் குழந்தை, தன் குடும்பம் என்று கணவன் சிந்திக்கின்றானேயல்லாமல் சமூகப் பார்வை துளியும் இல்லாமல் சமுதாயத்திற்கு அவன் எதையும் செய்ய முன்வருவ தில்லை.

மேலும் குடும்பத்தில் பெற்றோர்களிடையே காணப்படும் வேறு பாடுகள், குழந்தைகளின் மனங்களைப் பெரிதும் பாதிக்கின்றன. கணவனுக்கும் மனைவிக்கும் இடையே தோன்றும் கருத்து வேறுபாடு திருமண முறிவு வரை செல்கிறது. இந்நிலைகளைப் பார்க்கும் பெண்களும், குழந்தைகளும் வாழ்க்கையில் ஒரு பாது காப்பற்ற நிலை இருப்பதாகவே எண்ணுகிறார்கள். இவ்வுளவியல் சார்ந்த மனப்போக்கும் குடும்ப அமைப்பைத் தகர்க்க முனையும் காரணமாக அமைகிறது.

# VI அரசு

அரசியல் அமைப்பு என்னும் நிலையில் அரசு என்பது சமுதாயத்தின் ஒரு முக்கிய அங்கமாக விளங்குகிறது. சமூகவியலிலும், சமுதாயத் தத்துவ இயலிலும் அரசு என்னும் அரசியல் அமைப்பு பற்றிய விரிவான ஆய்வு காணப்படுகிறது. அரசு என்பதைப் பற்றிப் பல கோட்பாடுகள் உள்ளன. சமுதாய அறத்தைக் கட்டிக் காப்பதில் அரசிற்குள்ள பங்குபணிகள் பற்றிச் சொல்லப்பட்டுள்ளன. அரசு என்னும் அரசியல் அமைப்பிற்கும், அரசாங்கம் என்னும் நிர்வாக அமைப்பிற்கும் இடையே உள்ள வேற்றுமைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அரசு என்பதன் சட்டதிட்டம், இயற்கைத் தன்மை, நோக்கம், எல்லை ஆகியன வரையறுக்கப்பட்டுள்ளன.

முதலில் 'அரசு' என்னும் அமைப்புப் பற்றிய விளக்கங்களைக் காணலாம். சமுதாயத் தத்துவ அறிஞர்களும், சமூகவியல் அறிஞர்களும் 'அரசு' என்பதை விளக்கப் பல கருத்துரைகளை வழங்கியுள்ளனர். அரிஸ்டாடில் அரசு என்பது குடும்பம், கிராமம் ஆகியவற்றின் ஒரு கூட்டிணைப்பு என்கிறார். அக்குடும்பங்களும், கிராமங்களும் முறைப்படுத்தப்பட்ட நெறியுடைய முழுமையான வாழ்க்கையைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கும் என்று அவர் மேலும் கூறுகிறார். ஆனால், தற்காலத்தில் அரசு என்பது வெறும் கிராமங்களை மட்டும் குறிப்பதாகாது. தற்காலத்திய சிந்தனையாளர் அரசு என்னும் அமைப்பிற்கு நான்கு முக்கிய குணநலன்கள் இருக்கும் என்பர். அவை : 1) பொதுமக்கள், 2) நிலவியல் ரீதியில் குறிப்பிட்ட பரப்பளவு, 3) நிர்வாகம் அல்லது அரசாங்கம், 4) தனியுரிமையாட்சி அல்லது இறையாண்மை என்பனவாகும்.

'அரசு என்பது மானிட இனத்தின் ஒழுங்கமைக்கப்பட்ட குறிப்பிட்ட பகுதியை ஒரு தொகுதியாகக் கருதுதலே' என்கிறார் பர்ஜஸ். ஆனால், இவ்விளக்கத்தில் இடவியல்பு விளக்கவிவரங்கள் காணப்படவில்லை என்னும் குறைபாடு உள்ளது. 'அரசு என்பது

குறிப்பிட்ட எல்லைகளைக் கொண்டு அரசியல் ரீதியில் அமைக் கப்பட்ட மக்கள் தொகுதி' என்று பிளண்ட்சீலி விளக்கம் கொடுக் கிறார். ஆனால், இவ்விளக்கத்தில் தனி உரிமையாட்சி அல்லது இறையாண்மை என்பதைப் பற்றிய குறிப்பு எதுவுமில்லை என்னும் குறைபாடு உள்ளது.

லாஸ்கி என்னும் சமூகவியலறிஞர் அரசு பற்றி விளக்கும்போது அரசு எல்லைக்கோடுகளைக் கொண்ட சமுதாயம் என்றும், அது அரசாங்கம் மக்கள் எனப் பிரிக்கப்பட்டது என்றும், சமுதாயத்தில் அனைத்து அமைப்புகளையும்விட அதிக ஆற்றலும், சக்தியும் வாய்ந்தது என்றும் கூறுகிறார். இவரின் விளக்கமே பெரும்பாலோ ரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அரசு என்னும் அமைப்பு, அரசியல் விஞ்ஞானம் மற்றும் பொதுச்சட்டம் என்பனவற்றின் கோட்பாடு என்று கூறும் கார்னர், குறிப்பிட்ட இடத்தில் நிலையாக இருக்கும் மக்கட் கூட்டத்தின் குழுமத்தையே இது குறிக்கும் என்றும் குறிப்பிடுகிறார். மேலும், அவ்வமைப்பு புறக்கட்டுப்பாடுகள் இன்றிச் சுதந்திரமாக இருக்கும் அவர்களுக்கென்று ஓர் ஒழுங்கமைப்புடன் கூடிய அரசாங்கத்தை யுடையதாகவும் அது இருக்கும் என்று அவர் கூறுகிறார். சுருங்கக் கூறின், அரசு என்னும் அமைப்பு, குறிப்பிட்ட இடத்தில் வாழும் ஒழுங்கமைக்கப்பட்ட மக்கள் தமக்குரிய தனி உரிமையுடைய அரசாங்கத்துடன் இருப்பதையே குறிக்கும்.

**அரசின் உரிமைகள்**

அரசு என்னும் சமூக அமைப்பிற்கென்று பல உரிமைகள் இருப் பதாகச் சமுதாயத் தத்துவம் குறிக்கும். இவ்வுரிமைகள் தொடர் பாகப் பல கோட்பாடுகள் எழுந்துள்ளது. அரசின் உரிமைகள் என் னென்ன என்று கூறுவதற்கு முன் அரசின் உரிமைகள் தொடர்பாக எழுந்துள்ள கோட்பாடுகளை முதலில் காண வேண்டும். அவற்றில் ஆறு கோட்பாடுகள் முக்கியமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அவை : 1) தனித்துவம், 2) கூட்டாண்மை, 3) சர்வாதிபத்தியம், 4) பல்பதவியாண்மை, 5) ஆட்சி வேண்டா கொள்கை, 6) ஆக்க நல அரசு என்பனவாகும்.

**1. தனித்துவம்:**

ஹாப்ஸ், லாக், பெந்தம், ஜே. எஸ். மில், ஹெர்பட் ஸ்பென்சர் ஆகியோர் சமுதாயத்தில் அரசு என்னும் அமைப்பைவிட தனி மனிதர்க்கே முக்கியத்துவம் அளிக்கின்றனர். இவர்கள் அரசின் குறுக்கீட்டை விரும்பவில்லை. சமுதாயத்தில் தனிமனிதர்கள் சுதந் திரமாக இருக்க வேண்டுமெனவும், அவர்களின் இன்பம், மகிழ்ச்சி முதலியவற்றில் வேறு எந்த அமைப்பும் குறுக்கிட்டு இடையூறு செய்யக்கூடாது ஏனவும் இந்தச் சமுதாயத் தத்துவவாதிகள் வலி யுறுத்துகின்றனர். குடிமக்களின் மகிழ்வு, நிறைவு ஆகியவற்றை அதிகரிப்பதற்கே அரசு என்னும் அமைப்பு உள்ளதாகவும், ஆதலின் அது தனி மனிதனின் முழு மகிழ்வில் குறுக்கிடுவது கூடாது எனவும் பெந்தம் குறிப்பிடுகின்றார். சமூக முன்னேற்றம் என்பது வாழவேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டது என்று நம்பும்ஸ்பென்சர், இவ்வடிப்படைக்கு அரசு என்னும் அமைப்பு மக்களுக்கு உதவ வேண்டியது கடமையும், பொறுப்பும் ஆகும் என்று வலியுறுத்துகிறார். இப்படி உதவும்போதும், தனி மனிதனின் சுதந்திரத்தில் இடையூறு வராமல் பார்த்து கொள்ள வேண்டும். சமுதாய தத்துவாதிகளில் பலர் தனிமனிதனின் சுதந் திரத்தில் அரசு குறுக்கீடு செய்யக்கூடாது என்றும் வலியுறுத்தும் தனித்துவ கோட்பாட்டையே ஆதரித்துள்ளனர். அதிலும் ஆங்கிலேய சிந்தனையாளர் பலர், லாக்கிலிருந்து ஸ்பென்சர் வரையுள்ள அறிஞர் தனிமனிதனின் சுதந்திரத்தில் அரசின் குறுக் கீட்டை வன்மையாக எதிர்க்கின்றனர்.

**2. கூட்டாண்மை:**

தனித்துவக் கோட்பாட்டின் எதிரான கூட்டாண்மை என்னும் கொள்கையாளரில் முக்கியமானவர் மாத்யூ ஆர்னால்டு, கார்லைல், ரஸ்கின், எட்மண்ட் பர்க் ஆகியோரடங்குவர். இவர்களின் கருத்துப் படி, மக்களைப் பாதுகாத்தல் மட்டுமே அரசின் பொறுப்பு என்பது இல்லாமல் அவர்களின் வளர்ச்சிக்குப் பல்வேறு வகைமுறைகளில் உதவுதலும் அரசின் கடமையாகிறது. மக்களின் வளர்ச்சிக்கு உதவும் பொருட்டு எல்லாவித அதிகாரங்களையும் எடுத்துக்கொள் ளும் உரிமை அரசிற்கு உண்டு என இவர்கள் வாதிட்டனர். நாட்டை யும், மக்களையும் வெளிப்புறக் கேடுகளிலிருந்து காத்தல் என்னும்

கடமை அரசிற்கு இருப்பதால் அதற்கு அனைத்து உரிமைகளையும் கொடுக்க வேண்டும் என்று இவர்கள் வலியுறுத்தினர். சமுதாயத்தில் நீதி, நேர்மை ஆகியன நிலைநாட்டப்படும் பொருட்டு, தவறு இழைப்போருக்குத் தண்டனையளிக்கும் உரிமையும், மக்களின் பொருளாதார நிலைமையை வலுப்படுத்தி நிலைநிறுத்தும் பொறுப்பும் அரசிற்கு உண்டு. எனவே இக்கோட்பாட்டின்படி, மக்களும், அரசும் இணைந்தே இருக்க வேண்டும்; அப்படி இருந்தால்தான் சமுதாய முன்னேற்றம் நிகழும்.

**3. சர்வாதிபத்தியம்:**

கூட்டாண்மைச் சிந்தனையின் தீவிர வகைதான் சர்வாதிபத்தியமாக ஆகிறது. இது மக்கள் குழுமத்தின் ஒட்டுமொத்த வடிவமான அரசின் ஈடுபாடு என்னும் கோட்பாட்டை வலியுறுத்தும், அரசு, சமுதாயம் இவற்றின் எல்லைகள் ஒன்றாகவே இருக்கும். அரசு அளிக்கும் கல்வி இல்லாமல் எந்தவொரு குழந்தையும் சமுதாயத்தில் முழு வளர்ச்சியை அடைய முடியாது என்று ஹெகல் கூறுகிறார். ஆதலின் அரசு என்ற அரசியல் அமைப்பு சர்வாதிபத்தியம் கொண்டதாகவே இருக்கும்.

**4. பல்பதவியாண்மை:**

இக்கோட்பாட்டாளர் அரசின் அதிகார வரம்பை, எழுதப்பட்ட அரசியல் சாசனத்தின் மூலம் கட்டுப்படுத்த வேண்டும் என விரும்பினர். குடிமக்கள் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே அரசின் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்றனர். அரசின் அதிகாரங்கள் எவை என்று தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் கூறினர். அப்போதுதான் சமூக அமைப்பான குடும்பம், சமய அமைப்பான கோவில் போன்ற யாவும் சமூக வாழ்விற்குத் தேவையான முக்கியமான கொடைகளை அளிக்க இயலும் என்றும் அவர்கள் வாதிட்டனர். எனவே, அரசு என்ற அமைப்புத்தான் முக்கியமானது என்று கருத இடமில்லாமல் சமுதாயத்தில் சமூக முன்னேற்றத்திற்கு வேறு அமைப்புகளும் தேவை என்னும் நிலையை உருவாக்க விரும்புவதே பல்பதவியாண்மையாகும்.

### 5. ஆட்சி வேண்டா கொள்கை:

இக்கோட்பாட்டாளர் ஒரு வகையான அரசின் அதிகாரம் அல்லது அரசாங்கம் என்பதையே எதிர்ப்பவர். அரசின் அதிகாரம் என ஒன்று இல்லாத நிலையில்தான் தனி மனிதனின் முன்னேற்றம் என்பது அவனுடைய முழுச் சுதந்திரத்தினால் ஏற்படுகிறது என்று இக்கொள்கை கூறும். அதிகாரம் இல்லாத சூழ்நிலையில் தான் மனிதர்களுக்கிடையே இயல்பான ஒத்துழைப்பு என்பது ஏற்படும். அப்போதுதான் உண்மையான - நிறைவான முன்னேற்றம் சமுதாயத்தில் ஏற்படும் என்று இக்கோட்பாட்டாளர் வலியுறுத்துவர்.

### 6. ஆக்க நல அரசு:

இதுவரை கூறிய கருத்துரைகள் யாவும் தீவிரத்தன்மையுடையனவாய் இருந்தன. ஆனால் ஆக்க நல அரசு என்னும் கோட்பாடு தான், அரசு என்னும் அமைப்புப் பற்றி இருவேறுவிதமாகக் கூறப்பட்ட, தீவிரமான கொள்கைகளுக்கு இடைப்பட்ட நிலையில் நின்று சமன் செய்யப்பட்டதாக அமைந்திருந்தது. தற்போது அரசு என்னும் அமைப்பு, குடிமக்களின் ஆக்க நலனுக்காக என்பதுதான் அதன் நோக்கமாக அமைந்துள்ளது. ஆதலால், குடிமக்களின் கல்வி முதலிய தேவைகளை நிறைவேற்றித் தருவது அரசின் கடமையாகிறது. அதேசமயத்தில் அரசு, கல்வி போன்ற முக்கியமானவற்றில் தன் அதிகாரங்களைச் செலுத்தி அவற்றைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியமும் உள்ளது. மேலும், அரசு வெறும் கட்டுபாடுகளை மட்டும் செலுத்தி அதிகாரம் செய்துகொண்டிராமல் நிதி போன்ற உதவிகளையும் அதிக அளவில் செய்ய வேண்டும்.

### அரசின் அதிகார வரம்பு

அரசு என்னும் அமைப்பிற்கு எண்ணற்ற அதிகாரம், சக்தி ஆகியன இருந்தாலும் அதன் அதிகாரத்திற்கு ஒரு வரம்பும் உள்ளது. அவ்வரம்பை பின்வருவன நிர்ணயிக்கின்றன.

### 1. அடிப்படை உரிமைகள்:

ஒவ்வோர் அரசிலும் குடிமக்களுக்கெனச் சில அடிப்படையான உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன; அவ்வடிப்படை உரிமைகளில்

அரசின் அதிகாரம் எந்தவிதத்திலும் குறுக்கிட முடியாது; தடை செய்யவும் முடியாது.

**2. சமூக நிலையங்களின் உரிமைகள்:**

சமுதாயத்தில் மக்களின் சமூக வாழ்வை நோக்கமாகக் கொண்டு பல சமூக அமைப்புகள் உள்ளன. மக்களின் சமூக நலனை எண்ணிக் கடமையாற்றும் பொருட்டுச் சில தனிப்பட்ட உரிமைகள் இவற்றிற்கு வழங்கப்பட்டுள்ளன. அவ்வுரிமைகளின் மீது அரசின் அதிகாரம் ஆதிக்கம் செலுத்த முடியாது.

**3. சமூக மரபு, பழக்கவழக்கம் ஆகியவற்றின் உரிமைகள்:**

சமுதாயத்தில் மக்களுக்கென்று சில சமூக மரபுகளும், சம்பிர தாயங்களும், பழக்கவழக்கங்களும் இருக்கின்றன. இவற்றின்படி செயல்படும் உரிமைகளும் மக்களுக்கு உள்ளன. இவற்றைத் தடை செய்யவோ, இவற்றில் குறுக்கீடு செய்யவோ அரசின் அதிகாரங் களுக்கு இடமில்லை.

**4. அரசியலமைப்பின் உரிமைகள்:**

ஒவ்வொரு அரசிற்கும், அது ஜனநாயகமாக இருந்தாலும், சர்வாதிகார அரசாக இருந்தாலும் ஓர் அரசியலமைப்பு விதி கூறும் சட்ட அமைப்பு இருக்கும். இந்த அரசியலமைப்பின் விதிமுறை களை மீற அரசின் அதிகாரங்களுக்கு இடமில்லை. அரசின் அதிகார எல்லைகளுக்கு வரம்பை அறுதியிடுவதும் அரசிய லமைப்பு முறைகளேயாகும்.

**அரசின் செயற்பாடுகள்**

அரசு என்னும் அரசியல் நிலையம் சமுதாயத்தில் அனைத்துச் செயல்களையும் செய்ய முடியாது. தனி மனிதனின் சமூக நலன், தேவை, உரிமை ஆகியவற்றை அரசு ஒன்றே நிறைவேற்ற முடியாது. சமுதாயத்தில் தனி மனிதன், தன்னுடைய குறிக்கோளை அடைய இதையே ஒரு வழிமுறையாகக் கொள்ளவும் கூடாது. அரசின் செயற்பாடுகளைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது மெக்வியர், பேஜ் ஆகியோர் நான்கு வகையான செயல்களைக் கூறுகின்றனர். அவை : 1) அரசு என்னும் எல்லைக்குள் செய்யப் படுவது, 2) அரசே முழுமையாக நிறைவேற்றக்கூடியது, 3) வேறு

அமைப்புகள் செயல்படும்போது அரசு ஒதுங்கியிருப்பது, 4) அரசால் நிறைவேற்ற முடியாதது என்பனவாகும்.

அரசு என்னும் அமைப்பு எல்லைக்குள் செய்யப்பட வேண்டிய செயற்பாடுகள் குறித்து பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டாலும் அரசு நீதி, கல்வி, அமைதி, சட்டம் - ஒழுங்கு ஆகியன தொடர்பாகச் சில செயல்முறைகளைச் செய்தே ஆக வேண்டும். இதுமட்டு மில்லாமல் பணம், அளவைக்குரிய கருவி ஆகியன தொடர்பாக அரசுதான் முயற்சிகளை மேற்கொண்டு செயலாற்ற வேண்டும். இவையே அரசின் முக்கிய செயல்களாகும்.

இங்ஙனமே வேறு பல செயற்பாடுகளும், சமுதாயத்திற்கும், தனி மனிதனுக்கும் மிக அவசியமாகும். இச்செயற்பாடுகளை வேறு சமூக அமைப்புகளைவிட அரசுதான் முழு அளவில் நிறைவேற்ற முடியும். ஆதலின் அத்தகைய செயற்பாடுகள் அரசின் முக்கிய மான செயல்களாகின்றன. குறிப்பாக, உணவுப் பொருள்களைச் சேமித்தல், விலங்குகளைப் பாதுகாத்தல், காடுகளைக் காத்தல், அனைவருக்கும் கல்வி வசதி ஏற்பாடு செய்தல், பொதுமக்கள் வசதிகளுக்கான ஏற்பாடு புரிதல் ஆகியன மிக முக்கிய அரசின் செயற்பாடுகளாக அமைகின்றன. இவற்றை அரசு என்னும் அமைப்பே பிற நிறுவனங்களைவிட சீரிய முறையில் நிறை வேற்ற முடியும் என்பதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. மேலும், இயற்கை வளங்களைப் பொதுமக்களின் தேவை களுக்காகவே பயன்படுத்தக்கூடிய அமைப்புகள் பல இருப்பினும் அரசு மட்டுமே அவற்றைத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து திறமையாகச் செயலாற்ற முடியும். இது அரசின் மற்றொரு முக்கிய செயல்பாடாகும். இவ்வாறே காப்பதற்கு வேறுபல அமைப்புகள் இருப்பினும் அரசுதான் அவற்றின் ஒத்துழைப்போடு சிறந்த செயல்கள்ளைச் செய்ய முடியும்.

ஆனால் சமயம், பண்பாடு போன்றவற்றின் செயற்பாடுகளைப் புரிய அவற்றிற்கெனவுள்ள தனிப்பட்ட அமைப்புகளே சிறப் பாகச் செயலாற்ற முடியும். ஆதலின், அவற்றின் செயற்பாடுகளில் குறுக்கிடாமல் ஒதுங்கியிருந்து கண்காணித்தலே அரசின் செயலா கிறது. ஆனால், சில செயல்களை நிறைவேற்றும் ஆற்றல் அரசிற்கு

இல்லை என்பதையும் நோக்க வேண்டும். அப்போது அரசு கட்டுப் பாடு விதித்து ஆதிக்கம் செலுத்த முடியாத நிலையும் ஏற்படும். எடுத்துக்காட்டாக பொதுமக்களின் கருத்துரையை அரசு கட்டுப் படுத்த முடியாது; சமூக மரபுரிமைகளை அரசு மாற்ற முடியாது; தனிமனிதனின் நடத்தை குறித்துச் சட்டம் இயற்ற முடியாது.

எனவே, அரசின் செயற்பாடுகள் மேற்கூறிய நான்கு நிலைகளி லேயே அமைந்திருக்கும்.

**தற்கால அரசின் செயல்கள்:**

தற்காலத்தில் அரசின் செயற்பாடுகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவை : 1) அரசின் கட்டாயச் செயல்கள், 2) தன்னிச்சையான செயல்கள் எனப்படும்.

அரசு கட்டாயமாகச் செய்ய வேண்டிய செயற்பாடுகளில் நான்கு மிக முக்கியமாகக் கருதப்படுகின்றன. அவற்றில் பிற நாட்டின் தாக்குதல்களிலிருந்து நாட்டைப் பாதுகாத்தல் என்பது முதற்செயலாகும். இது அவசரமான அவசியமான செயற்பாடாகும். முப்படைகளை அமைத்தல்; போர்க்கருவிகளைத் தயாரித்தல் போன்றவை அரசின் மிக முக்கியமான பணியாகும்.

இரண்டாம் நிலையில் அரசு உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் அமைதிக்காகப் புரியும் செயலகளாகும். இதுவே அரசின் முக்கியக் கடமையாக அமைகிறது. இனக்கலவரம், கொள்கை, உள்நாட்டுப் புரட்சி போன்றவை அரசு என்னும் அமைப்பிற்கு விடப்படும் மிகப்பெரிய சவால்களாகும். எனவே, அரசு மக்களின் பாதுகாப் பிற்கும், அமைதியான வாழ்விற்கும் இராணுவம் மற்றும் காவல் படையினர் மூலம் செயலாற்றும்.

அடுத்து, குடிமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல் என்பதும் அரசின் செயலாகிறது. ஒவ்வோர் அரசிலும் குடிமக்களுக்கென்று சில அடிப்படை உரிமைகள் உண்டு. அவற்றுள், வாழும் உரிமை, சொத்துரிமை, கருத்துச் சுதந்திரம் போன்றவை சிலவாகும். இவற்றில் குறுக்கிடாமல், ஆதிக்கம் செலுத்தாமல், இடையூறு விளைவிக்காமல், தடை செய்யாமல் இவற்றைப் பாதுகாக்கும் பெ ருட்டு உரிய சட்டங்களை இயற்றி,

நிர்வாகம் செய்ய வேண்டியது அரசின் இன்றியமையாப் பணி யாகும்.

இறுதியாக, நீதி வழங்க வேண்டியதும் அரசின் கட்டாயச் செயற்பாடாக அமைந்துள்ளது. மக்களுக்கு நீதி வழங்கும் பொருட்டுச் சட்டங்களை ஏற்படுத்தி, இவற்றின் மூலம் ஓர் ஒழுங்கைச் சமுதாயத்தில் ஏற்படுத்துதல் அரசின் பணியாக அமையும்.

**தன்னியல்பான செயற்பாடுகள்**

அரசு தன்னியல்பில் செய்யக்கூடிய பணிகள் பல இருக்கின்றன. இவை யாவும் மக்களின் பொதுநலம் கருதியே உள்ளன.

**1. கல்வி:**

குடிமக்களுக்குக் கல்வி வசதி செய்துதர வேண்டியது ஒவ்வோர் அரசின் மிக முக்கிய கடமையாகும். கல்வியறிவு அற்றவர்கள் மிகுதியாக இருந்தால் நாடு முன்னேற்றம் அடையாது. எனவே, நாட்டின் முன்னேற்றம் கருதி மக்கள் கல்வியறிவு பெறும் பொருட்டு அரசு தொடக்கநிலை, உயர்நிலை, மேனிலைப்பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் முதலியனவற்றைத் தோற்றுவித்துக் கல்வி வசதி செய்து தருவதே தன்னிச்சையான பணியாகும். அறிவியல், மானிடவியல், விவசாயம், தொழில்நுட்பம் ஆகியவற்றில் ஆய்வுப்பணிகளை மேற்கொள்ளுவதற்கான வசதிகளையும் செய்ய வேண்டியது அரசின் செயற்பாடாகும். ஏழை மக்களும் கல்வியறிவு பெறும் பொருட்டு இலவசக் கல்வி, உதவித் தொகை முதலியவற்றை அரசு தன் உயரிய பணியாகக் கருதி செயல்பட வேண்டும்.

**2. நலவாழ்வு:**

கல்வியைப் போன்றே பொதுமக்கள் அனைவருக்கும் சுகாதார வசதிகளைச் செய்துதர வேண்டியது அரசின் பணியாகும். பொது நலவாழ்வு, மருத்துவமனை, இலவச மருந்து, தடுப்பு மருந்து, சத்துணவு ஆகியவை தொடர்பாக அரசு தன் பணிகளை ஆற்ற வேண்டும். மருத்துவக் கல்லூரி தொடங்குதல், ஆய்வுமையம் அமைத்தல், செவிலியர்க்குப் பயிற்சி மையங்களை அமைத்தல் முதலியன அரசின் செயற்பாடுகளில் அடங்கும்.

**3. திக்கற்றோர் மற்றும் ஊனமுற்றவர்களுக்குப் பாதுகாப்பு:**

இன்றைய அரசின் கடமைப் பொறுப்பு வயதான ஏழைகள், ஆதரவற்றவர், ஊனமுற்றவர் ஆகியோருக்கு உரிய வசதிகளைச் செய்து தருவதிலும் உள்ளது.

**4. பொதுநலப்பணி அமைப்புகளை ஏற்படுத்தல்:**

சமுதாயத்தில் மக்கள் அனைவரும் நலன் பெறும் பொருட்டுப் பொதுநலப்பணி அமைப்புகளான இரயில், தகவல் தொடர்பு (தபால் தந்தி) போன்றவற்றை அமைத்துத் தருதலும், போக்குவரத்து வசதிகளைச் செய்து தருதலும் அரசின் முக்கிய கடமைப் பொறுப்பாகும். தரை, வான், நீர் ஆகிய மூவழி வசதிகளையும் மக்கள் மேற்கொண்டு பயன்பெற அரசே ஆவன செய்ய வேண்டும்.

**5. சமூக, பொருளாதார முன்னேற்றம்:**

பொதுமக்களின் சமூக பொருளாதாரமுன்னேற்றங்களில் ஈடுபாடு கொண்டு, தேவையான இன்றியமையாத செயல்களைப் புரிவதே அரசின் செயலாகும். சமூக, பொருளாதாரத்துறைகளில் தீயன புரிவோருக்கு எதிராகத் தக்க நடவடிக்கை மேற்கொண்டு அவர்களைத் தண்டிக்க வேண்டியதும் அரசின் தொழிலாகும்.

**6. தொழில் மற்றும் வணிகத்தை ஊக்குவித்தல்:**

நாட்டின் தொழில்துறை முன்னேற்றம் கண்டு பல பெரிய தொழிற்சாலைகள் அமைக்க அரசுதான் செயலாற்ற வேண்டும். தொழிற்சாலை ஒன்று உருவானால் அதன் மூலம் ஆயிரக்கணக்கான மக்கள் வேலை வாய்ப்புப் பெறுவர். தொழில் உற்பத்தியின் மூலம் நாட்டின் பொருளாதார வசதி மேம்பாடடையும். எனவே, தொழில்களை ஊக்குவித்தலும் அரசின் செயற்பணியாக ஆகிவிடுகிறது. பெரிய தொழிற்சாலைகள் மூலம் நாட்டின் அந்நியச் செலாவணி பெருக பொருளாதார முன்னேற்றம் அமையும். இவ்வாறே உள்நாட்டு வாணிகமும் முன்னேற வேண்டும். இதை ஊக்குவிக்கும் ஆக்கப்பூர்வமான செயல்களையும் அரசே செய்ய இயலும். எனவே, இதுவும் முக்கிய கடமையாக அரசுக்கு ஆகிறது. வாணிகத்திற்குத் தேவையான அளவு கருவிகளையும் அரசே ஏற்படுத்த வேண்டும். மேலும் நாட்டின் பொருளாதார

முன்னேற்றம், ஏற்றுமதி, இறக்குமதி வாணிகத்தால் பெருகுவதால் இவை தொடர்பானசட்டங்களை இயற்றி அவற்றை நெறிப்படுத்தவும் அரசால்தான் இயலும். நாட்டின் பொருளாதாரங் கருதி அரசு முனைப்புடனும், விழிப்புடனும் செயல்பட வேண்டியது அவசியமாகும்.

**7. தொழிலாளர் நலன்:**

தொழில்துறைகளையும், வணிகத்தையும் விரிவுபடுத்துவதால் மட்டும் அரசின் பொறுப்பு முடிந்துவிடாது. மாறாக, இவற்றில் ஈடுபட்டிருக்கும் எண்ணற்ற தொழிலாளர்களின் நலன்களைப் பேணிப் பாதுகாத்தலும் அரசின் பொறுப்பான செயலாகும். தொழிலாளர் நலன் கருதிச் சட்டங்களை இயற்றி அவர்களுக்குத் தேவையான பணிப் பாதுகாப்பு, ஊதிய நிர்ணயம் போன்றவற்றிலும் ஆவன செய்ய வேண்டியது அரசின் கடமையாகும்.

**8. இயற்கை வளங்களை முறையாகப் பயன்படுத்தல்:**

எந்த ஒரு நாடு தன்னுடைய இயற்கை வளங்களான நிலம், காடு, நதி, மூலப்பொருள் ஆகியவற்றை முழுவதும் பயன்படுத்துகிறதோ அந்நாடு உறுதியாக, மாபெரும் ஆற்றல் பொருந்திய நாடாகவே திகழ முடியும். இயற்கை வளங்கள் பல இருப்பினும் அவற்றை முழுதும் முறையாக வெளிப்படுத்திப் பயன்படுத்துவதில்தான் ஓர் அரசின் ஆற்றலும் செயல்திறனும் அடங்கியிருக்கும். எனவே அரசு இதுதொடர்பாகத் தக்க நடவடிக்கைகளை எடுத்துச் செயல்புரிய வேண்டும்.

**9. பொழுதுபோக்கு வசதிகளைச் செய்தல்:**

சமுதாயத்தில் மக்களின் பொதுநலன் கருதியும், சமூக, பொருளாதார முன்னேற்றங் கருதியும் பல செயல்களை அரசு செய்தாலும், பொதுமக்களுக்குரிய பொழுதுபோக்கு வசதிகளையும் அது செய்துதர வேண்டிய நிலையில் உள்ளது. திரைப்படம், நாடகம் போன்றவை வளர்ச்சியடைய அரசு பல நிலைகளில் பணியாற்ற வேண்டியுள்ளது.

எனவே அரசு என்னும்போது அது வெறும் நிர்வாகம் மட்டும் செய்யக்கூடிய ஓர் அமைப்பு என்று எண்ணக்கூடாது. மாறாக,

அதற்கெனப் பல நிலைகளில் பல பொறுப்புகள் உள்ளன என்றும், அவை யாவும் சமுதாயத்தில் மக்களின் பொதுநலன் கருதியே அமைந்துள்ளன என்றும் அறியலாம்.

இறுதியாக, அரசு என்பது தன்னளவிலே முடிந்துவிடக் கூடிய ஒன்றன்று. மாறாக, சமுதாயமும், தனிமனிதனும் முன்னேற வேண்டிய வகையில் அரசு என்பது ஒரு வழிகாட்டியாக நின்று செயல்படும் என்பதே உண்மை நிலையாகும். தனி மனிதனுக்கும், சமுதாயத்திற்கும் பயன்பட முடியாத நேரத்தில், அரசு என்னும் அமைப்பு முடிந்த கதையாகிவிடும். எனவே, அரசு என்பது முடிந்து விடவும் கூடியது என்று கருத்துக் காணப்படுகிறது. ஆனால், சமுதாயத்தின் தோற்றம் குறித்த கோட்பாடுகள், அரசு என்பது தன்னளவிலே முடிவுறாதது என்றும், அது வழிமுறையாகவே இருக்கும் என்றும் கூறுகின்றன. அரசு என்ற அமைப்பின் முடிவான நோக்கம், தனிமனிதன், சமுதாயம் இவற்றின் ஒருங்கிணைந்த முன்னேற்றத்தில்தான் அடங்கியுள்ளது.

# VII சமுதாயமும் பண்பாடும்

பண்பாடு ஒரு சமுதாயத்திற்கு மிகவும் இன்றியமையாத் தேவை யாகும். ஏனெனில் 'பண்பாடு' என ஒன்று இருந்தால்தான், சமுதாயம் கட்டுக்கோப்பான ஒழுக்க முறையில் அமைந்து இயங்க முடியும். பண்பாடற்ற சமுதாயம் உயிரற்ற உடல் போல்தான் இருக்கும். ஒரு சமுதாயத்தில் மனிதர்க்குத் தேவையான பண்பாடு என்னும் அமைப்புப் பற்றி இவ்வியலில் நோக்கலாம்.

'பண்பாடு' என்ற சொல்லுக்குப் பல விளக்கங்கள் அளிக்கப் படுகின்றன. இச்சொல் நெகிழ்திறம் கொண்டதாக இருப்பதால் இதற்கு இறுதியான விளக்கத்தை அறுதியிட்டுக் கூறுவது இயலாத தாகிவிடுகிறது. 'பண்பாடு' என்பதற்கு ஆங்கிலப் பதமான 'கல்சர்' என்பது இலத்தீன் மொழிப் பதமான 'கோலா' என்னும் அடிச் சொல்லிலிருந்து வந்தது என்று அடிச்சொல் வரலாற்று அறிஞர் கூறுகின்றனர். இவ்வடிச் சொல்லின் பொருள் 'பண்படுத்து' அல்லது 'மேன்மைப்படுத்து' என்பதாகும். எனவே, இச்சொல் 'பயிர் செய்' அல்லது ப்யிர்களுக்கான நிலத்தைப் பண்படுத்து என்னும் பொருளில் அமைந்துள்ளதாகக் கொள்ளலாம். எப்படி ஒரு மரம் பயிர் செய்யப்படுகின்றது? எவ்வாறு அது வளர்கின்றது? அது தானே தனித்து வளர்வதில்லை. அது வளர மண்ணின் வளமும், நீரும், உரமும் தேவையாகின்றன. காற்றிலிருந்து நலிவு நீக்குந் தன்மையையும் அம்மரம் பெறுகின்றது. எனவே, ஒரு மரம் வளர் கிறது எனில் அது பலவற்றின் கூட்டு விளைவாகவே அமைகிறது. இவ்வாறே, ஒரு சமுதாயத்தில் தனிமனிதன் மேம்பாடு அடைய பண்பாடு என்னும் அமைப்பில் பல்வேறு சக்திகளின் ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது.

பண்பாடு என்பதற்கு ஆங்கிலப் பதமான 'கல்சர்' என்பதற்கு மற்றொரு அடிச்சொல்லையும் சிலர் கூறுவர். அது இலத்தீன் சொல்லான 'கல்சரா' என்பதாகும். இதுவும் நிலத்தைப்

பண்படுத்தல் என்ற செயலையே குறிக்கின்றது. நிலத்தைப் பண்படுத்தல் என்பது உருவக வடிவமாக அமைந்து மனிதனின் சமூகம், அறிவு கலை போன்ற உணர்வுகளின் பண்பட்ட நிலையைக் குறிப்பதாகவும் கூறுவர். எனவே, 'பண்பாடு' என்பது பொதுவான - வெளிப்படையான பொருளில் 'பண்படுத்தல்' என்பதையே குறிக்கிறது.

இனி, 'பண்பாடு' என்பதற்கு அறிஞர் பலர் அளித்துள்ள விளக்கங்களைப் பற்றிச் சிந்திப்போம். சர் எட்வர்ட் டைலர் என்பார் பண்பாடு என்னும் சொல் பல்திறங்கொண்ட ஒரு கூட்டுத் தொகுதியைக் குறிக்கிறது என்று குறிப்பிட்டு 'அது தன்னகத்தே அறிவு, நம்பிக்கை, கலை, நீதி, சட்டம், மரபு, சமுதாயத்தில் மனிதன் ஆற்றும் செயல் வலிமை ஆகியவற்றுடன், மனப்பாங்கு அல்லது பழக்கம் என்பதையும் உள்ளடக்கியதாகும்' என்கிறார்.

பழக்கம், வழக்கம், மொழி, செயலாற்றும் நுட்பம் ஆகியவற்றின் ஒரு கூட்டமைப்பே 'பண்பாடு' ஆகும் என்று கூறும் தியோடோசியஸ் டோஸ்கான்ஸ்கை, பொதுவாக, தான் கற்றவற்றைக் கொண்டு எவ்வெவற்றை மக்கள் சிந்திக்கிறார்களோ - செயலாற்றுகிறார்களோ அவற்றையெல்லாம் உள்ளடக்கியதே இச்சொல் என்று மேலும் குறிப்பிடுகின்றார். பண்பாடு என்பது உயிரணுக்களின் மூலம் தொடர்ந்து வரக்கூடியது அன்று. ஒவ்வொரு மனிதனும் தானே தனித்துத் தன் பெற்றோரிடமிருந்தோ, பாரம்பரிய மரபினரிடமிருந்தோ, ஆசிரியர்களிடமிருந்தோ, நண்பர்களிடமிருந்தோ, அண்டை வீட்டாரிடமிருந்தோபுத்தகம், வானொலி ஆகியவற்றின் வழியாகவோ பெறப்படுவதாக இவ்வறிஞர் மேலும் கூறுகிறார். எனவே, பண்பாடு என்பதைச் சமுதாயத்திலுள்ள ஓர் அமைப்பு என்று கொள்ளாமல் அதனைச் சமுதாயஞ்சார்ந்த செயலாகவே கொள்ள வேண்டும்.

மனித இன ஆய்வாளர்களும், சமுதாயவியல் அறிஞர்களும் 'பண்பாடு' என்பதன் பொருள்விளக்கத்தை விரிவாகவே பயன்படுத்துகின்றனர். சமுதாயத்திலுள்ள மக்களின் வாழ்வியல் முறைகளையும், சமூகப் பழக்கவழக்கங்களின் வெளிப்பாடுகளையும் இச்சொல் உள்ளடக்கியுள்ளது. தலைமுறை தலைமுறையாகப் பெறப்

பட்ட அவற்றை அறிந்த மனிதர்களின் எண்ணம், பழக்கம் ஆகிய வற்றின் தொகுப்பாகவே பண்பாடு விளங்குவதாகவும் கூறுவர். எனவே, இக்கருத்தமைவின்படி, பண்பாடு என்பது சமுதாயம் பெற் றெடுத்த ஒரு மரபேயாகும். இக்கருத்தினை எல்லிஸ் வொர்த் ஹட்டிங்டான் என்பார் வலியுறுத்துவார். அவர், மேலும் இதுபற்றிக் கூறும்போது, 'மனிதன் முதலில் படைத்துப் பின்னர், அவன் மற்றவர்களுக்குக் குறிப்பாக அடுத்த தலைமுறை மக்களுக்குக் கொடுக்கின்ற வழக்கம், எண்ணம், சிந்தனை, செயல்திறன், பொருள்வகை, அமைப்பு ஆகியவற்றைக் குறிப்பதே பண்பாடு' என்கிறார்.

மனித இன ஆய்விலும், சமுதாய ஆய்விலும் 'பண்பாடு' என்னும் சொல்லைத் துறை மரபு முறையில் சமூக அமைப்பு என்ற பொருளிலேயே பயன்படுத்துவர். மனித இன ஆய்வாளர் சிலர் 'பண்பாடு' என்பது, ஒரு சமூக மரபுரிமை என்றும், அது தனி மனிதன் ஒருவனுக்குச் சமுதாயம் அளித்த கொடை என்றும் கூறுவர். இக்கருத்தை எட்வர்ட் டைலர் மிகவும் வலியுறுத்துகிறார். நம் சமுதாயத்தில் பொதுவாக அமைந்துள்ள எண்ணம், கருத் தாற்றல், முதிர்வடைந்த தனியியல்பு, ஒழுங்கமைந்த உறவு, இணக்க நயப் பண்பு ஆகியவற்றின் தொகுப்பே பண்பாடு என்றும் வேறு சில சமுதாயவியலறிஞர் கூறுவர்.

மேலும், சமூக அழகு அல்லது சமுதாயத்தைக் கவரக்கூடிய ஆற்றல், கூர்த்தமதியின் மேம்பாடு என்பன பற்றி இலக்கியம் சார்ந்து பொதுவாகக் கூறும்போது 'பண்பாடு' என்னும் சொல் லையே சிலர் பயன்படுத்துவர். சமுதாயத்திலுள்ள அறிவார்ந்த தலைவர்களைப் பற்றிக் கூறும்போது அவர்களைப் 'பண்பட்ட உயர்ந்தோர் குழாம்' என்று சமுதாயவியலறிஞர் சிலர் குறிப் பிடுவர். இவ்வாறு கூறுவதிலிருந்து அவர்கள் 'பண்பாடு' என்ப தைச் சமுதாயத்துடன் ஒட்டிய ஓர் அறிவு என்ற பொருளில்தான் பயன்படுத்தியுள்ளனர் என்று கொள்ளலாம். இக்கருத்திலேயே தமிழ் இலக்கியமும் 'பண்பெனப்படுவது பாடறிந்த ஒழுதல்' என்றே கூறுவதையும் உணர வேண்டும்.

எனவே டைலர், ரெட்பீல்டு, ஜோசப் பையர், ஒயிட் ஆகிய சமுதாயவியலறிஞர் பண்பாடு என்பது சமுதாயத்துடன் ஒட்டி வருவதுதான் என்று வலியுறுத்துவர். குறிப்பாக, மனிதன் தன்னைச் சமுதாயத்தின் உறுப்பாக எண்ணி ஆற்றுகின்ற செயல், சமுதாயத்தால்தான் ஏற்றுக்கொள்கிற பழக்கவழக்கம், அறிவு, நம்பிக்கை, கலை, சட்டம், மரபு ஆகியவற்றின் கூட்டுத் தொகுப்பே 'பண்பாடு' என்று டைலர் சுட்டிக்காட்டுகிறார். இம்முறையில் ஒரு மனிதன் தன்னுடைய தனிவாழ்வு, சமூக வாழ்வு ஆகியவற்றில் மனஞ்சார்ந்தும், அறிவு சார்ந்தும் பெறப்படுபவை அனைத்தும் பண்பாடு என்பதில் அடங்குகின்றன. சமுதாயத்தில் நாம் வாழும் முறை, சிந்திக்கும் முறை ஆகியவற்றின் தன்மைகளை வெளிப் படுத்துவதாகவே பண்பாடு அமைந்துள்ளதாகவும், ஒவ்வொரு மனிதனும் சமுதாயத்தில், கலை, இலக்கியம், பொழுதுபோக்கு, மகிழ்ச்சி ஆகியவற்றுள் கலந்திருக்கும்போது வெளிப்படும் தன்மை யாகவும் பண்பாடு அமைந்துள்ளது என மெக்வியர், பேஜ் ஆகியோர் கருத்துரைக்கின்றனர். ஆதலின் பண்பாடும், சமுதாயம் ஒன்றோடொன்று இணைந்தும் வருபவை என்று உறுதியாக கூறலாம்.

## பண்பாடு பற்றிய பொதுவான கருத்துரைகள்

பண்பாடு எந்தச் சமுதாயத்திலும், குழுமத்திலும் இயற்கையாய் அமைந்திருக்கும். பண்பாடு, குழுவிற்குக் குழுவோ நாட்டிற்கு நாடோ மாறக்கூடிய தன்மை உடையது. மனிதர்களை ஆழமாகவும் தொடர்ந்தும் ஊடுருவி வந்துள்ளது. இது நம்முள் பரவி வருவதை நாம் உணர முடியாது. நம்முள் இருக்கும் பண்பாடு நமக்குத் தெரிவ தில்லை. அடுத்தவரே உணர முடியும். தனிமனிதன் ஈடுபடும் ஒன்றாகவே இது விளக்கப்படுகிறது. மக்கள் ஒரு சமுதாயத்தில் தாங்கள் என்னென்ன செய்ய வேண்டும் என்பதை அவர்களுக்கு அறிவிக்கும் கருவியாகவும் பண்பாடு செயல்படுகிறது. வாழ்க்கை அறிந்து கொள்கிற - வேறுபாடுகளைக் கண்டறிகிற - கூரறிவுடைய - நுழைபுலம் வாய்ந்த ஒன்றாகும். கலை, விஞ்ஞானம், தத்துவம், சமயம் ஆகிய நான்கின் சிறந்த இணைப்பே பண்பாடு ஆகும். மனிதன் சமுதாயத்தின் இயற்கையான வளர்ச்சியிலிருந்து உருவக மாக வரப்பெறுவது பண்பாடாகும். பண்பாடு தற்காலத்தில்

தேசியப் பாரம்பரியம், நாட்டுப்புற மக்களின் வாழ்வுமுறை ஆகிய வற்றின் உயர்ந்த மதிப்பீடாக விளக்கப்படுகிறது.

### பண்பாடு என்னும் கோட்பாடு

பண்பாடு என்பதை ஒரு கோட்பாடாக எண்ணும் முறை இன் றைய வளர்ச்சியாகும். இது பதினெட்டாம் நூற்றாண்டின் (கி. பி.) பிற்பகுதிக்கும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கும் இடையில் ஏற்பட்ட ஒரு நிகழ்வு ஆகும். பண்பாடு என்னும் கோட் பாடு நான்கு நிலைகளில் வளர்ந்தது. முதல் நிலையில், பண்பாடு என்பது மனத்தின் ஒரு பொதுவான நிலையாக அல்லது பழக்கத் தைக் குறிப்பதாக இருந்தது. இந்நிலையில் அது மனிதர்களின் முழு நிறைவு என்பதனை ஒட்டியே வந்தது. இரண்டாம் நிலையில், பண்பாடு என்பது ஒட்டுமொத்தமான சமுதாயத்தின் அறிவுத்திறம் மற்றும் ஒழுக்க நெறி மேம்பாட்டின் ஒரு பொதுவான நிலையைக் குறிப்பதாக அமைந்திருந்தது. மூன்றாம் நிலையில் கலை, அறிவுச் செயல் ஆகியவற்றின் ஒரு கட்டமைப்பாகவே விளங்கியது. இறுதி நிலையில், குறிப்பிட்ட சமுதாய மனிதர்களின் அறிவு, ஆன்மீகம், வாழ்வுமுறை ஆகியவற்றின் ஒருங்கிணைப்பே பண்பாடு என்றாகிறது.

### பண்பாட்டின் ஆக்கக்கூறுகள்

சமுதாயத்தையொட்டிய பண்பாடு என்று கூறும்போது அப் பண்பாட்டில் நான்கு முக்கிய ஆக்கக்கூறுகளைக் காணலாம். அவை : 1) தனிக் கருத்துப்போக்கு, 2) சமூகவியல் போக்கு, 3) உணர்ச்சிக் கனிவு, 4) இயல் நுட்பம் எனப்படும் தனிக் கருத்துப் போக்கு என்னும்ஆக்கக்கூறில் சமுதாய மனிதனின் நம்பிக்கைகள் அடங்கும். இந்நம்பிக்கைகள் யாவும் குறியீட் டையோ, பேச்சையோ சார்ந்து இருக்கும். 'உலகம் உருண்டை', 'மனிதனுக்கு ஆன்மா உண்டு' போன்ற நம்பிக்கைகளை நிலை நிறுத்த பேச்சு மிகவும் அவசியமாகிறது. அதனால் மொழி முக்கி யத்துவம் பெறுகின்றது. சமூகவியல் போக்கு என்னும் ஆக்கக் கூறில் சமுதாய மனிதன் அடைகின்ற - பெறுகின்ற - வெளிப் படுத்துகின்ற உணர்ச்சிகளும், சூழ்நிலைகளும் அடங்கும். சமுதாயத் தில் மனிதனின் உணர்வு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்

படும். எடுத்துக்காட்டாக, கற்பு என்பது சமுதாயத்தில் மனிதன் பேணிக் காக்கும் ஓர் உணர்வாக அமைந்துள்ளது. இறுதியாக, இயல் நுட்பம் என்னும் ஆக்கக் கூறில் சமுதாய மனிதன் பயன் படுத்தும் தொழிற்கருவிகள் அடங்கும். பென்ஜமின் பிராங்க்லின், மனிதனைப் பற்றிக் கூறும்போது 'கருவிகளைப் பயன்படுத்தும் விலங்கினம்' என்பார். சமுதாயத்தில் மனிதன் தன் வாழ்க்கை முறை, சமுதாய முன்னேற்றம் கருதியும், தன்னுடைய வசதி கருதியும் பல தொழிற் கருவிகளைத் தன் அறிவுத்திறத்தால் தோன்றுவித்துள்ளான்.

சமுதாயத்தில் மனித வாழ்வின் பகுதிகள் யாவும் எங்ஙனம் ஒன்றுக்கொன்று நெருக்கமாக - பிரிக்க முடியாதபடி - இணைந் துள்ளனவோ அவ்வாறே பண்பாட்டின் ஆக்கக்கூறுகளும் இணைந்துள்ளன. ஆதலின், பண்பாடு என்பது சமுதாயத்தில் மனித வாழ்வின் ஓர் அமைப்பு முறைக்குட்பட்டுச் செயல்படுகின்ற ஒரு நிலையமாகிறது.

**பண்பாட்டின் செயல்கள்**

மனிதனை அவனுடைய சூழலுடன் இணைக்கக்கூடிய தொடர்பைப் பண்பாடு ஏற்படுத்தும். இது பண்பாட்டின் ஒரு முக்கிய செயலாகும். இதனால்தான் சமூக உறவு என்பதே சமுதாயத்தில் தோன்றுகிறது. பண்பாட்டின் செயல்கள் ஒருபுறத்தில், மனிதனின் பழக்கவழக்கங்களுக்கும் அவனைச் சுற்றியுள்ள அண்டத்திற்கும் தொடர்பு ஏற்படுவதிலும், மற்றுமொருபுறத்தில் மனிதனுக்கிடையே உறவு ஏற்படுத்துவதிலும் அடங்கியுள்ளன. மனிதன், கருவி, தொழிற்நுட்பம், நம்பிக்கை ஆகியவற்றின் மூலமும் பழக்கவழக்கங் களுடனும் உறவு கொள்கிறான்.

பணபாட்டின் மற்றொரு செயல், மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்தலாகும். இது மனிதனின் உள்ளார்ந்த ஆன்மீகத் தேவைகளையும், வெளிப்புறப் பொருளியியல் தேலவகளையும் நிறைவேற்றுகிறது.

## பண்பாட்டின் குணநலன்கள்

பண்பாடு தொடர்ந்து மரபுவழியில் செல்லக்கூடியது. தனி மனிதனின் மரபு வழி வந்தாலும், அவன் மூலமாகவே தோன்றி னாலும் இது உடனே தன்னிலையினை இழந்து பொதுநிலை யினை அடைந்துவிடும். உருவம், வகை, சிறப்பம்சம் ஆகியவை உடைய ஒழுங்கு முறையாகவோ, முன்னமே நிகழ்ந்ததன் முன் வரைவுகளாகவோ பண்பாடு அமையும். அது உயர் தகவுகளின் வடிவாக உள்ளது. இது சமுதாயத்தில் முறைப்படுத்தப்பட்ட ஒன்றா கவும் உள்ளது. சமூக நிலைகளின் கார்ணமாகவும், பழக்கவழக்கங் களின் மூலமாகவும் பெறப்படுவதாகப் பண்பாடு அமைந்திருக்கும். எனினும், இது மனிதனின் உள்ளார்ந்த பண்பாகவும் மிளிரும். ஒரு தலைமுறைக்கும், அடுத்த தலைமுறைக்கும் இடையே தொடர்பைத் தோற்றுவிக்கக்கூடியது. அதனால் இது நிலைத்ததும் மிகுதியாகச் சேரக்கூடியதுமாக அமைந்துள்ளது. தனி மனிதனோ, ஓர் இனமோ அழிந்தாலும் அவர்களின் பண்பாடு அழியாமல் நின்று நிலைக் கும். இது சமூகஞ்சார்ந்ததாகும். தனிமனிதனால் செயல்படுத்தப்பட் டாலும், பண்பாட்டின் குணநலன் சமூகஞ்சார்ந்ததேயாகும். தனி மனிதரின் எதிர்பார்ப்புகளின் ஒருமித்த வெளிப்பாடாகவே இது திகழும். மேலும், ஒரு சமுதாயத்தை விடுத்துத் தனிநிலையில் எந்தத் தனி மனிதனாலும் பண்பாட்டை உருவாக்க முடியாது. இது கருத்தியல்பானது. சமுதாயத்தின் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் ஓர் இலட்சிய மாதிரி வடிவமாக - முறையாக - முன் வரைவாகப் பண்பாடு அமைந்திருக்கும். இவற்றைப் பின்பற்றியே மனிதனின் நடத்தைகள் அமைகின்றன. சமுதாயத்தில் பண்பாடு அறம், சமூகத் தேவைகளை ஈடேற்றுகிறது. பண்பாடு, தன்னளவிலே ஒழுங்கமை வையும், முறைமையையும் கொண்டுள்ளது. ஒன்றுபடுத்துவதே பண்பாட்டின் முக்கியதன்மையாகவும் உள்ளது. சமுதாயத்தில் காணப்படும் பல்வேறு வேற்றுமைகளைக் களைந்து சமூக ஒற்று மையினை ஏற்படுத்துகிறது. பண்பாடு என்னும் அமைப்பில் பல பகுதிகள் இருப்பினும் அவை தங்களுக்குள்ளே ஒன்றுபட்டுச் சமூக ஒற்றுமையை நிலைநாட்ட உதவுகின்றன.

பண்பாடு என்றால் என்ன என்பதைக் கண்டோம். இனி, நாகரீகம் என்பதற்கான விளக்கத்தையும் சிந்திக்க வேண்டும். ஏனெனில் இன்று பலர் பண்பாடு, நாகரீகம் என்னும் இரண்டையும் ஒன்றென எண்ணியே பேசுகின்றனர். பண்பாடு என்று குறிக்க வேண்டிய இடத்தில் நாகரீகம் என்றும், நாகரீகம் எனச் சொல்ல வேண்டிய போது பண்பாடு என்றும் பேசுகின்றனர். மேலோட்டமாகப் பார்க்கும்போது இரண்டும் ஒன்றெனத் தோன்றுவதால் ஏற்படும் சிக்கல் ஆகும். ஆனால், நுட்பமாக ஆராய்ந்தால் பண்பாடும், நாகரீகமும் ஒன்றல்ல என்பது தெளிவாகும். தமிழ் மொழியில் உள்ளபொருள் இலக்கணம் அகப்பொருள், புறப் பொருள் என இரண்டாகப் பிரிந்து முறையே பண்பாட்டையும், நாகரீகத்தையும் உணர்த்திய நிலையினை நோக்கும்போது பண்பாடு, நாகரீகம் இரண்டுமே வேறு வேறாகும் என்பதைத் தமிழ் மக்கள் பண்டே உணர்ந்த நிலையினை எண்ணி வியக்கவும், நயக்கவும் முடியும்.

நாகரீகம் என்பது குடிமகனின் சமூகநிலையைக் குறிப்பதாகும். நாகரீகம் என்பதற்கு ஆங்கிலப் பதமான 'சிவிலிசேஷன்' என்பது இலத்தீன் மொழிச் சொல்லான 'சிவிக்ஸ்' என்பதை அடிச் சொல்லாகக் கொண்டது. இவ்வடிச் சொல்லின் பொருள் 'குடிமகன்' என்பதாகும். எனவே, சமுதாயத்தில் குடிமக்களின் செயல், சாதனை, சமூக, பொருளாதார நிலை ஆகியன பற்றி எடுத்துரைப்பதுதான் நாகரீகம் எனப்படும். குடிமகனின் நிலை, நாட்டின் நிலையை எடுத்துக் கூறுவதால் மேற்கூறிய குடிமக்களின் நிலைகளைப் பற்றிக் கூறும்போது அவற்றை அந்நாட்டின் நாகரீக மாகவே கொள்ளலாம். தனி மனிதனின் சமூகநிலையை மட்டும் குறிக்காமல் ஒரு நாட்டின் சமுதாய வளர்ச்சியைக் குறிக்கின்ற ஒன் றாகவே பிற்காலத்தில் 'நாகரீகம்' விரிவடைந்தது.

கி.பி. 1830ம் ஆண்டில் சாமுவேல் டைலர் கால்ரட்ச் என்பார், பொதுவான மனித இனப் பண்பாட்டிற்கும், புறஞ்சார்ந்த நாகரீகத் திற்கும் இடைப்பட்ட வேற்றுமைகளை வெளிப்படுத்தினார். மனி தனைத் தவிர ஏனைய பொருள்களைக் கொண்டே வேற்றுமை

களை அவர் கணித்தார். இவரைப் போன்றே, தாமஸ் கார்லைல், மாத்யூ ஆர்னால்டு போன்றவர்களும் நாகரீகத்திற்கும் பண்பாட்டிற் கும் இடையேயுள்ள வேற்றுமைகளை வெளிப்படுத்தினார்கள். ஆனால் சமுதாயவியலறிஞர்கள் பண்பாடு, நாகரீகம் என்னும் இரண்டிற்கும் இடையேயான உறவுநிலை பற்றி வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தனர்.

ஜே. எல். சில்லியன் மற்றும் ஜே. டா. கில்லியன் ஆகியோர் நாகரீகம் என்பது பண்பாட்டிலிருந்து தோன்றிய ஒரு கூட்டொரு மைத் தொகுதியே என்றனர். ஏ. டபிள்யூ. கிரீன் என்பார் எழுத் துருவம் கொண்ட மொழி, அறிவியல், தத்துவம், தொழில்நுட்பம், அரசியல் முறைமை ஆகியனவற்றைப் பண்பாடு கொண்டிருக்கும் போது அதுவே நாகரீகமாக மலரும் என்ற கருத்தினைக் கொண் டிருந்தார். பிரான்சுபோஸ், ஓர்போன், நிம்காஃப் ஆகியோரும் நாகரீகம் என்பது பண்பாட்டைத் தொடர்ந்து வரும் ஒரு நிலை என்றே குறிப்பிடுகின்றனர். மிக உயர்ந்த பண்பாட்டின் இறுதி விளைவாக நாகரீகத்தைச் சொல்லலாம் என ஒக்பேர்ன் கருத் துரைக்கிறார். ஆனால் வெப்பர் என்பார் நாகரீகம் என்பதற்கும், பண்பாடு என்பதற்கும் இடையே காணப்படும் சிறிய வேற்று மையை எடுத்துக்காட்டுகிறார். பண்பாடு என்பதில் இலட்சியம், குறிக்கோள், மதிப்பு ஆகியன இருந்து ஒரு குழுவின் மனம் மற்றும் உணர்வுபூர்வமான பகுதிகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும். ஆனால், நாகரீகத்தில் பயன்படும் பொருளியல் பொருள்களும், அவற்றை ஏற்படுத்திப் பயன்படுத்தும் முறைமைகளும் அடங்கி யிருக்கும். எனவே, பண்பாடு என்பது உள்ளார்த்தமானது; நாகரீகம் வெளிப்புறச் செயல்களைச் சார்ந்தது எனக் கொள்ளலாம். மெர்டன், ரிச்சர்டு டேண்வால்டு மற்றும் சமுதாயவியலறிஞர் பலர் இக்கருத்தினை ஏற்றுக்கொள்கின்றனர். சொராசின் மட்டுமே இக் கருத்தினை எதிர்ப்பவர்.

மேற்காணும் கருத்தினை ஒட்டியே மெக்வியர், பேஜ் ஆகியோர் பண்பாடு, நாகரீகம் என்ற இரண்டிற்கும் இடையேயான வேற்றுமைகளை எடுத்துரைக்கின்றனர். சமயம், கலை, தத்துவம், இலக்கியம், இசை போன்றவற்றில் ஊடுருவிய பண்பாடு, மனி

தனுக்கு மகிழ்ச்சியையும், மன நிறைவையும் தருவதாக அமைந் திருக்கும். ஆனால், நாகரீகமோ ஒரு நோக்கத்தை அடைவிக்கக் கூடிய வழிமுறையாக அமைந்திருக்கும். அவ்வழிமுறை தொழில் நுட்பக் கருவிகளாக இருக்கும். இவற்றை உள்ளடக்கியதே நாகரீகம் எனப்படும் என்று மெக்வியரும் பேஜும் கருதுகிறார்கள். இவர் களின் கருத்துக்களின் அடிப்படையில் பண்பாட்டிற்கும், நாகரீகத் திற்குமிடையே பின்வரும் வேற்றுமைகளை நாம் உணரலாம்.

நாகரீகம் என்பது பண்பாடன்று; மாறாக, அது பயன்பாட்டை அளக்கும் கருவியேயாகும். நாகரீகம் என்பது ஒரு வழிமுறை யேயாகும். ஆனால், பண்பாடு என்பது அதனுள் முடிந்த ஒரு நிலை யாகும். எனவே, பண்பாடு ஒரு முடிவான நோக்கமெனில், நாகரீகம் அதனை அடைவிக்கும் வழிமுறைச் சாதனமேயாகும்.

நாகரீகம் என்பது எப்போதும் முன்னேறிக் கொண்டே யிருக்கும். ஆனால் பண்பாடு அப்படியன்று. நாகரீகத்தின் பல்வேறு சாதனங்களான தொழில்நுட்பக் கருவி, போக்குவரத்து வசதி, தகவல்தொடர்பு ஆகியன வளர்ச்சியடைந்து கொண்டே யிருக்கும். ஆனால் பண்பாட்டின் சாதனங்களான கலை, இலக் கியம் போன்றவை நின்று நிலைத்த புகழோடிருக்கும்.

பண்பாடு அகத்தைச் சார்ந்திருக்கும். நாகரீகமோ புறச்செயல் களைச் சார்ந்திருக்கும். நாகரீகத்தின் பொருள்களெல்லாம் மனிதனின் புறவாழ்க்கைக்குரிய பயன்பாட்டுச் சாதனங்களாகும். ஆனால் பண்பாடு என்பது மனிதனின் அகவாழ்வை - மனத் தினை - ஒட்டியே அமைந்திருக்கும். தமிழ் மொழியிலுள்ள பொரு ளிலக்கணம் அகம், புறம் எனப் பிரிந்து பண்பாட்டையும், நாகரீகத்தையும் விளக்கியதை முன்னர் கண்டோம்.

மேற்காணும் வேறுபாடுகளை நோக்கும்போது பண்பாடும் நாகரீகமும் தனித்தனியானவை என்பது புலப்படும். முடிவான நோக்கத்தையுடைய பண்பாடு அகப்புரமானது என்றும், ஆனால், நாகரீகம் அந்நோக்கத்தையுடைய பயன்படும் வழிமுறையாகவும் புறப்புறமானதாக உள்ளது என்னும் தெளிவான முடிவிற்கு வர லாம். அவ்வாறே பண்பாடு என்று பேசும்போது தனிமனிதனின்

பண்பைப் பற்றியே பேசலாம். ஆனால், நாகரீகம் என்னும்போது ஒரு குழுமத்தையோ நாட்டையோ பற்றியே குறிப்பிட முடியும்.

இத்தகைய வேறுபாடுகள் இருப்பினும் பண்பாடும் நாகரீகமும் சமுதாயத்தைச் சார்ந்தே உள்ளன. பண்பாடு சமுதாயத்தை நெறிப் படுத்துகிறது. நாகரீகம், சமுதாயத்திலுள்ள மனிதர்களின் செயல்களை மேம்பாடு செய்து முன்னேற உதவுகிறது. எனவே, பண்பாடு, நாகரீகம் இரண்டுமே, சமுதாயத்திற்கு அவசியமான அமைப்புகளாகும்.

# VIII சமுதாயமும் சமயமும்

சமயம் என்னும் அமைப்பு சமுதாயத்தில் ஒரு முக்கிய இடத்தைப் பெறும். சமுதாயத்தில் தனிமனிதனின் வாழ்க்கை நெறியே சமயம் எனப்படும். நான் யார்? இவ்வாழ்க்கை ஏன்? உலகம் ஏன்? போன்ற வினாக்களை எழுப்பி விடை காண மனிதன் முயல்கிறான். அவ்விடை காணும் முயற்சி சமயம் என்பதில் முடிவடைகிறது. மனிதனின் உயிர் பற்றியும் அதன் குணநலன் பற்றியும் குறிப் பிட்டு, வாழ்க்கை என்றால் என்ன? இந்த வாழ்க்கை ஏன்? என்பன பற்றிய விளக்கங்களை கண்டு, வாழ்க்கை நெறி பற்றிக்கூறும் ஓர் அமைப்பாகவே சமயம் அமைந்துவிடுகிறது.

பல நூற்றாண்டுகளாகவே சமுதாயத்தில் சமயம் தொடர்ந்து வருகிறது. நாகரீகம் வளர்ச்சியடையாத முற்காலத்திலும், முன்னோர் தங்களுக்கென ஒரு சமயத்தை அமைத்துக்கொண்டு வாழ்ந்தனர். சாதாரண நிலையில் சமயம் என்றால் வாழ்க்கை நெறி என்று கூறிவிடலாம். ஆனால் 'சமயம்' என்பதற்கு அறிஞர் பலர் பல்வேறு விளக்கங்களை அளிக்கின்றனர். முதலில் 'சமயம்' என்பதற்கு ஆங்கிலச் சொல்லான 'ரிலிஜன்' என்ற சொல்லின் அடிச்சொல், பொருள் விளக்கம் ஆகியவற்றைக் காண வேண்டும். 'ரிலிஜன்' என்ற ஆங்கிலச் சொல், இலத்தீன் சொல்லான 'ரிலிகோ'வை அடிச்சொல்லாகக் கொண்டுள்ளது. இவ்வடிச் சொல்லுக்குப் பல விளக்கங்கள் கிடைக்கின்றன. இவ்வடிச் சொல்லை 'ரீ' என்றும், வினைச்சொல்லாக 'விகேர்' என்றும் இரண்டாகப் பிரிப்பர். இதில் 'ரீ' என்பதன் பொருள் 'மீண்டும்' அல்லது 'புதியதாக' என்பதாகும். வினைச்சொல்லான 'விகேர்' என்பதன் பொருள் 'கட்டு' அல்லது 'பிணை' என்பதாகும். அதாவது, 'மீண்டும் கட்டு' என்றாகிறது. 'மீண்டும் கட்டுதல்' அல்லது 'புதியதாகப் பிணைத்தல்' என்றால் ஆன்மாவை இறைவனுடன் மீண்டும் புதியதாகக் கட்டுதல் அல்லது பிணைத்தலே ஆகும். எனவே, சமயம் என்பது நம்மை இறையுணர்வுடன் இணைக்கும்

தொடர்பு அல்லது உறவு என்று பொருள்படுகிறது. இறைவனின் சக்திகளுடன் உறவுகொண்டு பின்னர், இழந்த உறவை மீண்டும் புதியதாக ஏற்படுத்திப் பிணைத்தல் என்பதே சமயம் பற்றிய விளக்கமாக அமைகிறது.

மனிதன் தன்னைச் சார்ந்த சூழல்களுடன் மூன்று வழிகளில் தொடர்பு கொள்கிறான். இயற்பொருள் சூழலாக அவன் பௌதிக உலகுடனும், சமூகச்சூழலாக அவன் பிற மனிதர்களிடனும் தொடர்பு கொள்கிறான்; அறிவெல்லை கடந்த கருத்துச் சூழலில் தொடர்பு கொள்ளச் சமயம் என்பதையே அவன் நாடுகிறான். எனவே, சமயம் என்பது மனிதனுக்குரிய இன்றியமையாத தேவையாக அமைந்துவிடுகிறது.

மேலும், சமயம் என்பது மனிதனின் செயல்பாடே என்னும் நிலை உள்ளதை உணர வேண்டும். வாழ்க்கை என்பதன் பொருளை அறிந்துகொள்ள மனிதன் ஈடுபடும் செயல்கள் யாவும் சமயம் என்னும் அமைப்பை நோக்கியே அமைகின்றன. எனவே, வாழ்க்கையின் பொருளைத் தெரிந்துக்கொள்ள மனிதனுக்கு சமயம் அவசியமாகிறது என்றுணரலாம்.

இனி, 'சமயம்' என்பதற்கான பல விளக்கங்களையும் காண வேண்டும். மார்க்ஸ் முல்லர், சமயம் மனஞ்சார்ந்த ஒன்று என்றும், புலன் அல்லது சிந்தனையாற்றலை விடுத்துத் தனித்த நிலையில் பல உருவங்களையும், பெயர்களையும் உடைய இறைவனை அறிய மனிதனுக்கு உதவியாக இருப்பதே சமயம் என்றும் கூறுகிறார். ஷிலியர் மேசர் என்பார், முழுமையாகச் சார்ந்திருக்கிறோம் என்ற உணர்வே சமயம் என்பதன் சாரம் அல்லது உள்ளியல்பு என்கிறார். தேவை உணர்வுடன் இறைவனை வணங்கும் முறையே சமயம் என்று ஆலன் மென்சியஸ் கருத்துரைக்கிறார். மனிதன் ஒருவன் தனிமையில் இருக்கும்போது அவனுடன் நிகழும் உணர்வு, செயல், பட்டறிவு ஆகியவை சமயத்துடன் தொடர்பு கொண்டிருக்கும் என்றும், அந்நிலையில் அவனுடைய நிலையை அறிந்துகொள்ள உதவுவதே சமயம் என்றும் வில்லியம் ஜேம்ஸ் குறிப்பிடுகிறார். உயரிய சமூகத் தகவுகளை உணர்தலே சமயம் என்று எட்வர்ட் எஸ். ஆம்ஸ் கூறுகிறார்.

இங்ஙனம் பல பொருள் விளக்கங்களைச் சமயம் என்பதற்குப் பலர் அளித்தாலும் சமயம் என்பது சமுதாயத்தில் தனிமனிதனுக்குரிய வாழ்க்கையைக் காட்டும் நெறி என்றே முடிவாகக் கொள்ளலாம்.

**சமயத்தின் சமூகச் செயல்கள்**

சமயம் என்பது சமூகஞ்சார்ந்ததாகவே இருந்து வருகிறது. சமய அமைப்பின் செயல்கள் யாவும் சமுதாயத்தைச் சார்ந்து, சமூக வாழ்வினை மேம்படுத்தவே அமைந்தன. மனிதனின் சமூகப் போக்கை வெளிப்படுத்தும் நிலையமாகவும் சமயம் அமைந்துள்ளது. ஆகவேதான், சமயம் என்னும் அமைப்பு சமுதாயத்தில் பொதுத்தொண்டு, கல்வி, கருணை, அன்னமிடுதல், பொறுமை, கொல்லாமை போன்ற பல நிலைகள் உருவாகவும், சமூக வாழ்வினை நிலைப்படுத்தவும் காரணமாக அமைகிறது.

மனிதர்கள் ஒருவரையொருவர் நேசிக்க வேண்டுமெனவும், அனைவரும் இறைவனின் புதல்வர்களே என்னும் அடிப்படையில் அவ்வன்பு அமைய வேண்டுமெனவும் சமயங்கள் கூறுகின்றன. இறைவனைத் தந்தையாக எண்ணுவதால் மனிதர்கள் அனைவரும் இறைவனின் புதல்வர்களாவதால், அனைவரும் சகோதரர்களாகின்றனர். எனவே, சமுதாயத்தில் சகோதரத்துவம் மிளிர்ந்து அடுத்தவர்க்கும், அண்டை வீட்டார்க்கும் தொண்டு புரியும் எண்ணம் அரும்புகிறது. சமயம் தரும் ஊக்கத்தால்தான் தொண்டு செய்ய மக்கள் விரும்புகின்றனர். இதன் மூலமே 'மக்களுக்குப் புரியும் தொண்டே மகேசனுக்குப் புரியும் தொண்டு' என்னும் நிலையும் சமுதாயத்தில் தோன்றியது. உலகில் காணப்படும் அனைத்துச் சமயங்களிலும் அன்பும், தொண்டும் மிகுதியாக வலியுறுத்தப்பட்டன.

மேலும், சமுதாயத்தில் மனித இனத்திற்குக் கல்வி வாய்ப்பு அளிக்கும் முறையையும் சமயமே ஏற்றுக்கொண்டது. உலகின் எல்லாப் பகுதிகளிலும் சமயங்கள் தங்களின் வளர்ச்சிக்காக கல்வி என்னும் சாதனத்தை மிகவும் பயன்படுத்தின - பயன்படுத்தியும் வருகின்றன. மிக நீண்டகாலமாகவே பல சமயங்களும் மக்களின்

கல்வியறிவைப் பெருக்கும் பொருட்டுப் பல சமுதாயப் பணி களையும் செய்து வருகின்றன.

கல்விப் பணி போலவே நல்வாழ்வு வசதிகளைச் சமுதாயத்தில் மக்களுக்காக செய்வதில் அனைத்துச் சமயங்களும் ஈடுபட்டன. இதற்கு அடிப்படை யாதெனில், ஆதரவற்றவர்க்கும் நோயாளி களுக்கும் செய்யும் பணி இறைவனுக்குச் செய்யும் தொண்டாக வும், வழிபாடாகவும் சமயங்கள் வலியுறுத்தியமையேயாகும். இவ் வாறே ஏழைகளுக்கு உணவளிக்கும் அன்னதானமும் சமயங் களால் வலியுறுத்தப்பட்டு ஒரு சமுதாயப் பணியாகவே நடை பெற்று வருகிறது. உலகின் ஒவ்வொரு சமயமும் அன்னமிடுதலுக்கு ஒரு நோக்கத்தைக் கற்பித்துச் செயல்படுகிறது. மேலும், சகிப்புத் தன்மையையும், பொறுமையையும் மக்கள் கடைப்பிடிக்க வேண்டு மென்று சமயங்கள் வலியுறுத்தின. இதனால், சமுதாயத்தில் ஒழுக்க நெறி பாதுகாக்கப்பட்டது. அன்பை வலியுறுத்திய சமயங்கள் கொல்லாமை நெறியையும் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டு மென அறிவுறுத்தின. சமுதாயத்தில் வன்முறை அற்ற ஒழுங்கு முறையான சமூக அமைப்பு ஏற்பட இது உதவியது. இறுதியாக, சமயங்கள் வலியுறுத்திய சகோதரத்துவத்தால் சமுதாயத்தில் சமூக ஒற்றுமை மிகப்பெரிய அளவில் ஏற்பட்டது என்பதையும் உணர வேண்டும்.

**சமயமும் அற இயலும்:**

சமுதாயத்தில் சமயமும் அற இயலும் மக்கள் வாழ வேண்டிய நெறிமுறைகளைச் சட்டங்களாகவே வகுத்துச் சமூக ஒழுக்கத்தை நிலைநாட்ட உதவுகின்றன. கேடுகளான திருட்டு, பொய், புறங் கூறல், பிறன்மனை நோக்கல் போன்றவற்றை முற்றிலும் களைய வேண்டுமெனச் சமயங்களே வலியுறுத்தின. அற இயலும் இக் கேடுகள் அனைத்தையும் நீக்க மனச்சாட்சிக்கு அஞ்சி மக்கள் செயல்பட வேண்டுமெனக் கூறுகிறது. ஆனால், சமயங்கள் இறை வனுக்கு அஞ்சி ஒழுக்க நெறியுடன் வாழ வேண்டுமெனக் கட்டளையிடுகின்றன. சமூக ஒழுக்கத்தைப் போதிப்பதால் சமயத் திற்கும் அற இயலுக்கும் இடையே வேற்றுமை காணவேண்டிய அவசியமில்லை எனச் சில அறிஞர் கூறுவர். குறிப்பாக, மாத்யூ

ஆர்னால்டு அறமாகிய ஒழுக்கநெறியின் வெளிப்பாட்டுணர் வுடன் இருத்தலே சமயம் என்கிறார். பிராட்லியும் பிரிங்கிள் பாட்டிசனும் அற இயலுக்கும் சமயத்திற்கும் மிக நெருங்கிய ஒற்று மையும், உறவும் இருப்பதாகக் கூறுவர். அறங்களை வலியுறுத்தும் அறக்கடமையின் நோக்கமும் முடிவும் மனிதனைச் சமயஞ் சார்ந்தவனாக ஆக்குவதேயாகும் என்று பிராட்லி குறிப்பிடுகிறார்.

இருப்பினும், இவ்விரண்டிற்கும் இடையே நுட்பமான வேற்றுமைகளையும் நாம் உணரலாம். சட்டத்தை மீறுதல் தவறு என்று கருதப்பட்டுச் சமுதாயத்தில் அது குற்றமாகக் கணிக்கப் படுகிறது. ஆனால் சமயம் வலியுறுத்தும் கடமைகளை நிறைவேற் றத் தவறினால் அது பாவம் என்று எண்ணப்படுகிறது. எல்லாவற் றையும் கடந்த சிலவற்றைக் கூறி அச்சங்களை மக்கள் மனத்தில் எழுப்பினாலும், சமயம் அவற்றின் மூலம் சமுதாயத்தில் மக்களின் நடத்தைகளை நெறிப்படுத்துகிறது; இதன் மூலம் சமுதாயத்தில் ஒழுக்கமும், அமைதியும் ஏற்படுகின்றன. இம்முறையில் அற இயலும் சமயமும் வேறுபடுகின்றன. அறச்சட்டங்கள், மனசாட்சி, தண்டனை ஆகியவற்றை கூறி செயல்பட்டாலும் சமயங்கள் வெளிப்படுத்தும் அச்சவுணர்வுகளே மிகு ஆற்றலுடையவனவாக இருக்கின்றன.

சமுதாயத்தில் முதலில் தோன்றியது அற இயலா, சமயமா என்ற வினாவிற்கு விடைகாண அறிஞர் பலரும் முயன்றுள்ளனர். ஒரு பிரிவினர் அற இயலைவிட, சமயமே முதலில் தோன்றியது என்பர். இன்னொரு பிரிவினர் அற இயலே ஏற்பட்டது என வாதிப்பர். முதல் பிரிவில் ஆகஸ்ட் காம்ட், டேகார்ட்ஸ், லாக், பாலே ஆகியோரும், இரண்டாம் பிரிவில் காண்ட், மாத்யூ ஆர்னால்டு, மார்டைன்யூ, டோனிஸ், எமில்டர்கிஹிம் முதலியோ ரும் உள்ளனர். ஆகஸ்ட் காம்ட் சமயந்தான் அற இயலைத் தந்தது என்பார். டேகார்ட்ஸ், லாக் போன்றவர்களும் சமயத்தின் மூலமே அறங்கள் தோன்றின என்பர். இறைவனே நீதிபதியாக இருந்து அறங்களைக் காக்கின்றான் என்றும், அதன் பொருட்டே ஒழுக்கச் சட்டங்கள் ஏற்பட்டன என்று பலரும் கருதினர்.

ஆனால், வேறு சிலர் சமயம் தோன்றுவதற்கு முன்னரே சமுதாயத்தில் அற இயல் ஏற்பட்டதாக வாதிடுவர். காண்ட், அறங்களை அடிப்படையாகக் கொண்டுதான் சமயம் என்பதே ஏற்பட்டதாக எண்ணுகிறார். மார்டைன்யூவும் இக்கருத்தை ஆதரிக்கிறார். அறங்களின் உணர்வுபூர்வமான வடிவமே சமயம் என மாத்யூ ஆர்னால்டு கூறுகிறார். சமுதாயத்தில் சமூக மற்றும் நீதிக் கருத்துக்களுக்கு அங்கீகாரம் அளிக்கும் பொருட்டே சமயங்கள் தோன்றின என்று டோனிஸும், எமில் டர்கிஹிமும் கருதுவர். இதன் தொடர்பாக இவ்விரு கருத்துக்களையும் விடுத்து மூன்றாம் கருத்து ஒன்றும் ஏற்பட்டது. இதன் மூலம் சமயமும் அற இயலும் வெவ்வேறாகும். சமயம் தோன்றிய காலக்கட்டத்தில் அறக்கருத்து எதுவும் சமயக் கோட்பாடுகளில் காணப்படவில்லை என்று ஹெர்பட் ஸ்பென்சர் எடுத்துரைக்கிறார். அக்காலங்களில் தீயசக்திகளின் ஆற்றலைக் கட்டுப்படுத்த மனித உயிர்களைப் பலியிடுதல் போன்ற மிகக் கொடிய செயல்களைப் புரிந்துவந்தனர். அப்போது அறக்கோட்பாடுகள் இல்லையென்றே கூறலாம். சமுதாயத்தில் சமூகப் படிம வளர்ச்சி தோன்றிய பிறகுதான் சமயத்திற்கும் அற இயலுக்குமிடையே வேற்றுமை ஏற்பட்டதாக மெக்வியர் குறிப்பிடுவதையும் உணர வேண்டும். ஆனால், சமுதாயத் தத்துவவாதிகளைப் பொறுத்தவரை இரண்டில் எது முதலில் தோன்றியது என்ற வினா தேவையற்றதாகும். ஏனெனில் சமயமும் அற இயலும் சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டு - அதனை மையமாகக் கொண்டு - நிலைக்களனாக கொண்டே வளர்ந்துள்ளன. சமுதாயம் என்பதால்தான் இரண்டும் ஒன்றாகக் கலந்து செயல்படுகின்றன என்று கொள்ளலாம்.

### சமுதாயமும் சமய நிலையங்களும்

சமயம் வளர்வதற்கு உறுதுணையாக வழிபாட்டு இடமான கோவில்களும், சமயகுரவர்களின் இடங்களான திருமடங்களும் இருந்துள்ளன என்பதால் அவை முக்கியத்துவம் பெற்றவையாகி விடுகின்றன. அவை சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க இடங்களைப் பெறுகின்றன. அவற்றில் வழிப்பாட்டு இடங்களான கோவில்களைப் பற்றியே காண வேண்டும். இறைவனை வழிபடுவதற்கான இடங்களாகச் சமயங்கள் ஓர் இடத்தைத் தேர்வு செய்தன.

இந்து சமயத்தில் அந்த வழிப்பாட்டிடம் கோவில் அல்லது ஆலயம் எனப்படும். கிறிஸ்துவத்தில் சர்ச் அல்லது தேவாலயம் எனப்படும். இஸ்லாத்தில் மசூதி என்றும் சீக்கியத்தில் குருத்துவாரம் என்றும் பெயர் பெறும்.

இவை அனைத்தும் சமுதாயத்தில் நடுநாயகமாகவே திகழ் கின்றன. சமுதாயத்தின் செயற்பாடுகள் அனைத்தும் இவற்றைச் சுற்றியே அமைந்திருக்கின்றன. பொதுவாக இவ்வழிபாட்டுத் தலங்கள் அனைத்தும் சமுதாயப் பணி ஆற்றிக்கொண்டிருப்பினும் இங்கு நாம் சிந்திக்க இருப்பது கோவில்களைப் பற்றியே. சமுதாயத்தில் எக்காலத்திலும் மக்களுடன் தொடர்புடையவனாக வும், மக்களுக்குச் சமூகத்தொண்டு புரியும் நிலையங்களாகவும் கோவில்கள் இருந்து வருகின்றன. பொதுமக்களின் வாழ்க்கை மையமாகவும், சமுதாய மையமாகவும் கோவில்கள் அமைந்தன. இறைவனின் வழிபாட்டுத்தலமாகவும், சமயத்தின் இருப்பிடமாக வுமே இருந்த நிலைமாறி, சமுதாயத்தில் மக்களின் சமூக, பொருளா தார மற்றும் பண்பாட்டின் பிறப்பிடமாகவும் - புகலிடமாகவும் அமைந்த கோவில்களின் பங்கு, சமுதாயத்தில் மிகப்பெரிய அளவில் விரிந்து மக்களுடைய அன்றாட வாழ்வின் ஒரு பகுதியா கவே திகழத் தொடங்கியது.

தொடக்கக்காலத்தில் கோவில்கள் சமுதாயத்தில் பக்தியினைப் பரப்பும் ஒரு சமய நிறுவனமாகவே இருந்தன. பின்னர் கோவில் கள் சமுதாய்த்தின் மைய நிலையங்களாக மாறிக் கல்விச் சாலை களாகவும், கலை வளர்க்கும் நிலையங்களாகவும், பொருளாதார வளர்ச்சியில் வங்கிகளாகவும், வற்கடம் (பஞ்சம்) போக்கும் அற நிலையங்களாகவும், அரசின் கருவூலங்களாகவும், பொதுநலவாழ்வு நிறுவனங்களாகவும், நீதி, நிர்வாக அமைப்புகளாகவும், வேலை வாய்ப்புத் தரும் இடங்களாகவும், பண்பாட்டைப் பேணிக் காக்கும் இயக்கங்களாகவும் திகழ்ந்தன. எனவே சமுதாயத்தின்எந்தவொரு செயல்பாடும் கோவில்களின் மூலமே நடந்துள்ளன என்பதை உறுதியாகக் கூறலாம்.

மேலும், கோவில்கள் சமுதாயத்தில் பொதுவாழ்க்கை மற்றும் சமூக வாழ்க்கையின் நடுநாயகமாகவும் அமைந்தன. இவற்றைச்

சுற்றியே கிராமங்களும், நகரங்களும் தோன்றி வளர்ந்தன. இவ்வடிப்படையிலேயே 'கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா' என்னும் முதுமொழியும் தோன்றியதை உணர வேண்டும். கோவில்கள் தோன்றும்போதே கலைகளும், இலக்கியங்களும் தோன்றி வளர்ந்தன. சமய நிலையங்களான கோவில்கள், சமுதாயத்திற்குப் பல நிலைகளில் தொண்டாற்றிய நிலையை எண்ணினால் சமயத்திற்கும், சமுதாயத்திற்கும் இடையேயான நெருக்கமான உறவு நன்கு புலப்படும்.

## IX முடிவுரை

சமுதாய நிகழ்ச்சிகளை அறிவியல் முறையினால் ஆராய இயலுமா என்ற வினா எழுப்பப்பட்டாலும்; சமுதாயத் தத்துவ அறிஞர்கள் இம்முறையை நன்கு பயன்படுத்தியுள்ளனர். அதன் விளைவாக இன்று சமுதாய அறிவியல் என்று கூறத்தக்க ஒரு துறை உருவாகியுள்ளது. சமுதாயத் தத்துவத்திற்கும், சமுதாய அறிவியலுக்கும் இடையே காணப்படும் வேறுபாடு அளவு முறையில் தோன்றுவதேயாகும். சமுதாயத் தத்துவமானது பொதுவான பல் வினாக்களைக் கருதுகிறது. ஆனால், சமுதாய அறிவியலோ தனித்த பல வினாக்களை விரிவாகப் பல கோணங்களிலிருந்து ஆராய்கிறது. மேலும், சமுதாய அறிவியல் துறை அண்மைக் காலத்திலேதான் தத்துவத்தினின்று பிரிந்தது என்று கூட நாம் கூறலாம். என்றாலும், சமுதாய அறிவியல் ஆய்வாளர்கள் தத்துவச் சிக்கல்களையே சிந்திப்பவராக விளங்கினர்.

எனவே • ன் இங்கு சமுதாய அறிவியல், சமுதாயத் தத்துவம் ஆகிய இ ரண்டிற்கும் பொதுவாகக் காணப்படக்கூடிய பொருள்களைப் பற்றிச் சிந்தித்துள்ளோம். ஆனால், இப்பொருள்களெல்லாம் சமுதாயத் தத்துவத்தில் உட்பொருளாகவே அ மைந்துள்ளன. ஆதலால், மனித இயல்பு, சமுதாயம், தனி மனிதனும் சமுதாயமும், குடும்பம், அரசு, சமுதாயமும் பண்பாடும், சமுதாயமும் சமயமும் ஆகிய தலைப்புகளின் கீழ் இதுகாறும் கண்டோம்.

இறுதியாக, இன்றைய சமுதாயத்தில் பெரும்பாலான நிலையங்கள் அல்லது அமைப்புகள் ஒருவாறு அமைப்புக் குலையக் காண்கிறோம். புனரமைப்பும் ஒருவாறு நிகழ்வதே. பண்பாட்டு மாற்றங்களில் அல்லலுறுவோர் யாது நிகழ்கிறது என்பது அறியாதவர்களாகவே, மனக்கசப்பு அடைகின்றனர். இவர்கள் தனி மனிதர் மீதோ, குழுவின் ஒழுகலாற்றினிடத்தோ அல்லது சமூக வாழ்க்கையின் மீதோ மனக்கசப்பு கொண்டுள்ளனர். என்றாலும், சமுதாய மாற்றங்களின் இயல்பை அறியும் போதும், அம்மாற்றங்களின் வெவ்வேறு கூறுகளைப் பிரித்து உணரும் போதும் மக்கள் அவ்வப்போதும் எழுகின்ற இடர்பாடுகட்கு ஏற்பவே வாழ்வர் என்பதையும் நோக்க வேண்டும். இங்குதான் சமுதாயத் தத்துவத்தின் அடிப்படை நோக்கம் நிறைவேறுகிறது.

சமுதாயக் கேடுகள் யாவற்றிற்கும் செயலற்ற நிலையில் ஒருவன் பணிதல் வேண்டும் என்று எண்ணுவதைவிட, அமைப்புக் குலைவு நேரும் வாய்ப்புக்களைக் குறைப்பதற்கும், இடர்பாடுகளையும் அவற்றின் தீர்வுகளையும் நன்கு நினைவில் வைத்தே சமுதாயத் தத்துவம் ஆராய்கிறது. இருப்பினும், இன்றைக்கும் பொருந்துவதாகத் தத்துவங்களை அமைக்க வேண்டும் போன்ற குரல்களும் எழாமல் இல்லை. ஆனால் பழக்கவழக்கங்களை மாற்ற முயல்வோர், தனி மனிதரே, மாற்றங்களைக் காண்பவர்களும் அவர்களே என்பதையும் எண்ண வேண்டும். எனவே, சமுதாயத் தத்துவம் என்ற முறைமையினால்தான் சமுதாய முன்னேற்றம், பண்பாட்டின் முன்னேற்றம் ஆகியன நிகழும் எனலாம்.